

செ. கணேசலிங்கன்

# சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
08 DEC 2021
LIBRARY
704556
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(219) 360

# சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை!

(நாவல்)

செ. கணேசலிங்கன்

University of Peradeniya
08 DEC 2021
LIBRARY

விற்பனை உரிமை :

**பாரி நிலையம்**

184, பிராட்வே : : சென்னை-108

704556

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் 1989

©

விலை ரூ. 11-00

வெளியீடு :

**குமரன் பதிப்பகம்**

13/2, கஜபதி தெரு,

சென்னை-600 005

அச்சிட்டோர் :

ராமன்'ஸ் பிரிண்டிங் பிரஸ்

சென்னை-17.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலைப் படிக்குமுன் சில குறிப்புகள்

சூரியன் கிழக்கில் உதிக்கிறது; மேற்கில் மறைகிறது. இவை சிறு வயதிலிருந்தே நமக்குக் கற்பிக்கப்படுகிறது. பரம்பரையாக வந்த கருத்து. நாமும் அனுபவத்தில் காண்கிறோம். நினைவிலி மனதில் படிந்துள்ளது; உடனே ஏற்றுக் கொள்கிறோம்.

'சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை' என்றதும் உடனே ஏற்றுக் கொள்வது சிரமமாகிறது. சிறிது நேர சிந்தனையின் பின்னரேயே ஒப்புக் கொள்கிறோம். இதுவே உண்மை; விஞ்ஞான அறிவியல் உண்மை. சூரியன் எரிந்து கொண்டிருக்க, பூமியே தன்னைத் தான் சுற்றி வருகிறது. 24 மணி நேரத்திற்கு ஒரு தடவை சுற்றுகிறது. தன்னைச் சுற்றும் போது சூரியனையும் சுற்றுகிறது. அதற்கு 365 நாட்களாகின்றன. இவ்வாறு பள்ளியில் கற்றவர்க்கும் இத்தலைப்பு ஒரு கணம் அதிர்ச்சியே தருகிறது.

இவ்விஞ்ஞான உண்மை மூலம் பரம்பரைக் கருத்தும் நாள்தோறும் அனுபவத்தின் மூலம் காண்பதும் அடிபட்டுப் போகின்றன.

இவ்வாறு பல்வேறு தவறான கருத்துகள் எமது சிந்தனையைக் கவர்ந்துள்ளன. அவை கருத்தியலாக நமது சிந்தனை ஆற்றலையே தடுக்கின்றன. இதனால் மனிதன் என்ற உயர்வு நிலைக்குரிய உணர்வு நிலை அல்லது விழிப்பு நிலையும் பாதிக்கப்படுகிறது.

மனித இனத்தின் பாதி மக்கள் பெண்கள். பரம்பரை பரம்பரையாக உலகில் ஆணாதிக்கம் நிலை பெற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டது. அத்தோடு பெண்ணினம் பற்றிய பல்வேறு தவறான கருத்துகளும் ஆண்களின் சிந்தனையில் மட்டுமல்ல பெண்களின் ஆழ் மனதிலும் பதிந்து விட்டன அவை வெறும் பரம்பரைக் கருத்துகள். ஆணாதிக்கத்தால் பல வகையில் பெண்ணினத்தை அடிமைப் படுத்துவதற்காக நிலை நாட்டப்பட்ட கருத்தியல்கள். அவை விஞ்ஞான பூர்வமற்றவை.

இக்கருத்தியல்களால் பெண்கள்படும் துன்பம் அளப்பரியது. அவற்றில் சிலவற்றை எடுத்துக் காட்டுவதும் இந்நாவலின் நோக்கமாகும்.

காதல் என்ற அழகான, இனிய சொல்லின் பின்னால் மறைந்திருக்கும் பரம்பரையாக வந்த பாலுறவுக் கட்டுப்பாடுகள் பெண்ணினத்தை அடிமைப்படுத்துகின்றன. சிறைப்படுத்துகின்றன என்பது மட்டுமல்ல; உற்பத்தியில் பெண்ணினம் ஆற்றும் பெரும் பங்கு, அவர்களால் மட்டுமே செயற்படும் மனித இனத்தின் மறு உற்பத்தி, ஆண்கள் மட்டுமே பெண்களை உற்றுப் பார்த்தல், பாலுறவிலும் பெண்ணினத்தின் பலம், ஆணினத்தின் பலவீனங்கள் ஆகியவற்றைப் பெண்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

பத்மாசுரனுடன் சிவபெருமானால் போரிட முடியாத போது விஷ்ணு மோகினி வடிவம் எடுத்து வென்றதாகக் கூறப்படும் புராணக் கதை தொடக்கம் இன்று பண்ட விற்பனைக்குப் பயன்படுத்தப்படும கவர்ச்சி விளம்பரம், பண்ட விற்பனையிலும் பெண்களை ஈடுபடுத்தல் ஈறாகவுள்ளவற்றின் பின் புறத்தில் மறைந்திருக்கும் உண்மைகளைப் பற்றி எவரும் சிந்தித்துப் பார்ப்பதில்லை; பெண்ணினத்தின் உயர்வையும் சிறப்பையும் காண்பதில்லை. இக்கதைகள், கவர்ச்சி விளம்பரங்களின் பின்னால் பெண்ணினத்தின் ஆபாசத்தை ஏன் காணவேண்டும்; அவர்களின் உன்னத, உயர்ந்த நிலையைக் காணலாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது நல்வாழ்விற்காக தமது உன்னத நிலையை பெண்ணினம் எவ்வாறு கையாளலாம் என்பதையும் இந்நாவலில் சுட்டிக் காட்ட முயன்றுள்ளேன்.

கற்பு என்ற வார்த்தை தமிழில் தரும் அர்த்தம் போல வேறு எந்த மொழியிலும் காணமுடியாது. ஆங்கிலத்தில் (Chastity) என்பதுகூட அத்தனை ஆழமானதல்ல. அங்கு கண்ணகி, நளாயினி, அகலிகை போன்ற கதைகளோ, 'தெய்வம் தொழாள் கணவற் தொழுதெழுவாள்' போன்ற குறள்களோ கிடையாது.

பெரியார் கற்புப் பற்றிய பொய்மைப் பிரசாரத்தை ஆழமாகச் சாடினார். கண்ணகி மட்டுந்தான் கற்பானவள் எனின் எங்கள் தாயார், மனைவி, பிள்ளைகள், தங்கையர் கற்பு இல்லாதவர்களா? என்று கேட்டார்.

ஆண்கள் அனைவரும் கற்பு இல்லாதவராயின் அடிமைப்படுத்தப்பட்ட பெண்கள் மட்டும் எவ்வாறு கற்பைப் பேண முடியும் என்பதைக் கூட எவரும் எண்ணிப் பார்ப்பதில்லை. கன்னி கழிவது என்பது எந்தப் பெண்ணுக்கும் எவ்வேளையும் விபத்தாகவே ஓடியாடி வேலை செய்யும் போதே நடைபெறலாம் என்பது டாக்டர்கள் கூற்று. இந்த நடைமுறை உண்மையைக் கூட பெரும்பாலான ஆண்கள் அறிவதில்லை. விதவைகள், விவாக ரத்து செய்த பெண்களின் மறுமணம் கூட கற்பு என்ற பொய்மைக் கருத்தியல்களாலேயே பாதிக்கப்படுகின்றன.

உற்பத்தியே சமூக உறவுகளில் முதன்மையானது. சமூக உற்பத்தி பாதிக்கப்படும்போது சமூக உறவுகளிலும் கட்டுப்பாடு, மாற்றம் ஏற்படுகிறது. கட்டுப்பாடற்ற பாலுறவால் புராதன சமூகத்தின் உற்பத்தி பாதிக்கப்பட்ட காலகட்டத்தில் கணக்குழுத் தலைவர்களே பாலுறவில் கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தனர். அடிமைச் சமூகத்தில் அடிமைகளைப் பெருக்கும் நோக்குடன் பாலுறவு பயன்படுத்தப்பட்டது. உரோமாபுரியில் மிருகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணைகளைப் பெருக்கப் பயன்படுத்துவது போல பாலுறவு பயன்படுத்தப்பட்டது. நிலப்பிரபுத்துவத்தில் தனிச்சொத்துரிமையை நிலை நாட்டும் போக்கில் குடும்பத்துள் பெண்ணின் பாலுறவு கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

முதலாளித்துவம் யந்திர உற்பத்தி மூலம் பண்ட உற்பத்தியைத் துரிதமாகவும் பரவலாகவும் பெருக்கியது. கட்டுப்பாடற்ற பாலுறவால் உற்பத்தி பாதிக்கும் நிலை யில்லை. அத்தோடு தொழிலாளிவர்க்கம் தன் உழைப்புச் சக்தியின் திறனை உணர்ந்து அதனை விற்கும் நேரங் களையும் கட்டுப்படுத்தியது. இவற்றால் முதலாளித்துவ நாடுகளில் பாலுறவுக் கட்டுப்பாடுகளிலும் தளர்ச்சி ஏற் பட்டுள்ளதைக் காண்கிறோம். விவாகரத்து, மறுமணம், திருமணத்தின் முன்னைய பாலுறவு ஆகியவை சமூக மதிப்பும் பெற்று விட்டுள்ளன.

பாலுறவு பற்றிப் பல எழுத்தாளர்களும் அறிஞர் களும் தமது கருத்துகளை ஆங்காங்கே கூறியுள்ளனர். பாலுறவு தணியாத தாகம், கெடு என்று பர்னாட்ஷா கூறினார். அது பரபரப்பான உணர்ச்சி மட்டுமே, அது மட்டுமே இன்பவாழ்வல்ல என்றார் மராத்திய எழுத்தாளர் காண்டேகர். மனிதர்கள் எதிர்பாலாரைத் துன்புறுத் துவதன் மூலம் இன்பமும் அடைய முயல்கிறார்கள் என்றார் பிரெஞ்சு அறிஞர் ஜீன் போல் சாத்ரே.

இந்நாவல் கருத்துகளை நிலப்பிரபுத்துவ உற்பத்தி உறவின் மேலாதிக்கத்திலுள்ள தமிழகத்தார் பலர் ஏற்கச் சிரமப்படலாம். இலங்கையின் அரசியல் போராட்ட நிலைப்பாடு அங்குள்ள தமிழர்சமூகத்தையும் தாக்கியுள்ளது. குடும்ப அமைப்புகள் உடைய இளம் வயதினர் வீட்டுச் சிறையை விட்டு வெளிவந்து கொழும்பு நகருக்கும் கனடா ஜெர்மனி, பிரான்சு, இங்கிலாந்து, நோர்வே போன்ற முதலாளித்துவ நாடுகளுக்கும் குடியேறிக் கொண்டிருக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றனர். புதியஉற்பத்தி உறவுகளில் ஈடுபடவும் முன்னேறிய சமூகத்தில் வாழும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

கிராமங்களில் அடங்கி ஒடுங்கிக் கிடந்த இளம்பெண் களெல்லாம் கட்டாய இலவசக் கல்வியாலும் குடும்ப, நுகர் பண்டத் தேவைகளாலும் நகர கூலிச் சந்தைக்கு இழுத்துவரப் பட்டுள்ளனர். இவற்றாலும் பாலியல் உட்பட முன்னிருந்த பழைய சமூக மதிப்புகளிலும் பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. இந்நாவலிலும் இத்தாக் கத்தைக் காணலாம்.

பெண் விடுதலை என்பது நீண்ட காலப் பயணம் ஆகலாம். ஆயினும் இன்று நிலவும் தவறான கருத்து களுக்குப் பின்னால் மறைந்து கிடக்கும் தர்க்க ரீதியான, பகுத்தறிவான, விஞ்ஞானக் கருத்துக்களை முதலில் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும். தவறான கருத்து களை நேர்மையோடு ஒப்புக் கொள்ள வேண்டும். எதிர்க்க வேண்டும்.

இந்நாவலை சில நாட்களில் எழுதி முடிக்க நேரிட்டது. விரைவாக அச்சிட உதவிய திருமதி இராமன், அச்சகத் தொழிலாளர்க்கு நன்றி. அட்டையில் பெண்ணின் பரந்த நிலையை வெளிப்படுத்தும் ஓவியத்தையும் விரைவில் வரைந்து தந்த நண்பர் மணியம் செல்வனுக்கும் என் நன்றி.

சென்னை
29-11-89

செ. கணேசலிங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரின் பிற நூல்கள்

### நாவல்கள்

பொய்மையின் நிழலில்...
அயலவர்கள்
புதிய சந்தையில்
இளமையின் கீதம்
அந்நிய மனிதர்கள்
வதையின் கதை
மண்ணும் மக்களும்
போர்க்கோலம்
தரையும் தாரகையும்
செவ்வானம்
சடங்கு
நீண்ட பயணம்

### சிறுகதைத் தொகுப்புகள்

சிறுவர்க்கான சிந்தனைக் கதைகள்
கொடுமைகள் தாமே அழிவதில்லை
சங்கமம்
ஒரே இனம்
நல்லவன்

### கட்டுரைகள்

கலையும் சமுதாயமும்
குந்தவிக்குக் கடிதங்கள்
குமரனுக்குக் கடிதங்கள்
மான்விழிக்குக் கடிதங்கள்

---

விற்பனை :

**பாரி நிலையம்**

184, பிராட்வே, சென்னை 108.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை

## 1

'ஒன்பது மணிக்கு மீனாட்சி வந்து விடுவாள் என்றாய் ஒன்பதரை ஆகிவிட்டது''

சித்திரா துபாயில் வாங்கிய தங்க முலாம் பூசிய தன் கைக்கடிகாரத்தை அடிக்கடி பார்த்தபடியே அவளது பள்ளித் தோழி உமாவைப் பார்த்துச் சொன்னாள். வராவிட்டால்...என்ற நினைவால் ஏற்பட்ட பரபரப்பும் பயமும்.

''தோட்டக்காரப் பெண்தானே, அவளுக்கு உன் கைக்கடிகார நேரமெல்லாம் எங்கே தெரியப் போகிறது.''

அமைதியிழந்து வந்த சித்திராவுக்கு உமா பதிலளித்தாள்.

''தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்த பெண் என்றாய். பனிக் குளிரிலே கூட நேரத்துக்கு எழுந்து, சங்கூதப் பெயர் போட்டு கொழுந்து பறித்துப் பழகிய பெண் தானே, நேரமா தெரியாது.''

''பதற வேண்டாம். அவள் கட்டாயம் வருவாள், டீ ஆறப் போகிறது.''

தேநீர் குவளையை எடுத்துக் கொடுத்தபடி உமா சொன்னாள். தானும் தேநீர் குவளையை எடுத்து உதட்டில் பதித்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திராவின் வீட்டில் வேலை செய்வதற்காக உமா தன் கணவன் மூலம் மீனாட்சி என்ற பெண்ணை ஏற்பாடு செய்திருந்தாள். இருவரும் அவளது வருகைக்காக காத்திருந்தனர்.

''வராவிட்டால் நாளைக்கு என் பயணமெல்லாம்... பெரிய பிரச்சனையாகிவிடும்.''

''அவர் கண்டிப்பாக சொல்லியிருந்தார். வராமலா விடுவாள். தேயிலைத் தோட்டம் முன் ஒரு கால கட்டத்தில் அவளுக்குப் பழகிய வாழ்க்கை, சங்கூதி அச்சுறுத்துவார்கள். நேரம் பார்த்து வேலை செய்து மாதம் முடிய சம்பளம் வாங்கும் உழைப்பு. 1981 ல் தேயிலைத் தோட்டங்களில் நடைபெற்ற இனக் கலவரத்தின் பின்னர் கிளி நொச்சிப் பகுதிக்கு வந்து விவசாயம் செய்தாளாம். புருஷன் ஒரு ஓட்டலில் வேலை செய்தானாம். அங்கெல்லாம் சூரியனைப் பார்த்துத்தான் நேரம் கணிப்பார்கள். தற்போது பரந்தன் கிளிநொச்சிப் பகுதியிலும் வாழமுடியாமல் அகதியாய் யாழ்ப்பாணம் வந்த பெண். அவளிடம் எப்படி சரியான நேரங்காலமெல்லாம் எதிர்பார்க்க முடியும். எப்படியும் அவர் சொன்னதற்காகவாவது வந்து விடுவாள். இப்போது என்ன தான் அவசரம்? உன்னைக் கண்டு பேசுவதே எனக்கு ஒரு ஆறுதலாயிருக்கிறது.''

உமா தன் கணவர் ஏற்பாடு செய்ததனால் அப்பெண் அங்கு வீட்டு வேலைக்குத் தவறாது வருவாள் என்பதையும் அழுத்திக் கூறினாள்.

''பயணத்திற்குப் பெட்டியெல்லாம் நான் அடுக்க வேணும். எத்தனை பேருக்கு பயணம் சொல்ல வேணும். அதற்கு ஒரு லிஸ்டே தயாரித்திருக்கிறேன். இல்லாவிட்டால் தவறவிட்டவர்கள் என்ன சொல்லுவார்கள் தெரியுமா? புதுப்பணக்காரி. பணச் செருக்கு. எங்களை எட்டியும் பார்க்கவில்லை என்பார்கள்.''

''பொறாமைக் குரலாகத்தான் இருக்கும்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமாவின் நினைவிலி மனதில் பதிந்திருந்த கருத்து அப்படியே வெளிவந்து விட்டது. மற்றவர்கள் சித்திராவை அளப்பதை வைத்தே கூறியதாக தன் மனதை உமா தேற்றிக் கொண்டாள்.

உண்மையில் தன் பள்ளித் தோழியான சித்திரா மேல், அவளது உடையையோ புதுப்பணத்தையோ கண்டு உமா பொறாமைப்படவில்லை. சித்திராவின் சுதந்திரமான போக்கையும் தீர்மானங்கள் எடுக்கும் துணிவையும் பார்த்தே பொறாமைப்பட்டாள்.

பள்ளி நாட்களில் அவளது அழகைப் பார்த்தும் பொறாமைப்பட்டதுண்டு. அதே வேளையில் கல்வியில் தான் விவேகமாக இருந்ததைப் பார்த்து சித்திரா பொறாமைப்பட்டதையும் உமா அறிவாள்.

சித்திரா மட்டுமென்ன வேறும் பல மாணவர்களும் பொறாமைப் பட்டதை உமா அறிவாள். உமாவிற்கும் கல்விச் செருக்கு இருந்தது.

ஆனாலும் இன்றைய நிலையென்ன? ஒரு குடும்பத்திற்கு அடிமையான துன்பமான வாழ்க்கை. சித்திரா சுதந்திரமாக உழைத்து செருக்கோடு வாழ்கிறாள்.

''ஏழையான உறவினர், அயலவர்கள் என்னை தற்போது பார்த்துப் பொறாமைப் படலாம். ஆனால் பணத்தை உழைப்பது, சேர்ப்பதிலுள்ள கஷ்டம் ஒன்றும் அவர்களுக்குத் தெரியாது.''

சித்திரா பெருமூச்சு விட்டுக்கொண்டே கூறினாள். துபாயிலுள்ள அடிமை உழைப்பு அவள் நினைவில் வந்தது. உமாவின் மௌனத்தைப் பார்த்து சித்திரா தன் நிலை மையை நீதிப்படுத்த மேலும் தொடர்ந்தாள்:

''துபாயில் எண்ணெய் பணம் குவிந்து கிடக்கிறது. நாமெல்லாம் அள்ளிக்கொண்டு வருகிறோம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் நினைக்கிறார்கள். அந்த அந்நிய பாலைவன நாட்டில் நாங்கள் படும் கஷ்டங்களையும் தனிமைத் துன்பத்தையும் எவரும் அறியமாட்டார்கள். அதுமட்டுமா அப்பா அம்மாவை இந்த நிலையில் விட்டுச் செல்வது எத்தனை கவலையாயிருக்கிறது.''

சித்திரா உண்மையாகக் கூறுகிறாளா, நடிப்போடு சொல்கிறாளா என்பதை உமாவால் ஊகிக்க முடியவில்லை.

''அங்குதானே அந்த வயதான அரேபியக் குடும்பத்தவர்கள் மிக நல்லவர்கள். 'தங்கள் பிள்ளைபோல் என்னைக் கவனிக்கிறார்கள்' என்று நீ தானே சொன்னாய். பிறகு என்ன கவலை? அங்கு சென்று வரும் மற்றப் பெண்களெல்லாம் அங்கு வேலை வாங்கும் கொடுமையைத்தான் சொல்லுகிறார்கள். நீ அதிர்ஷ்டக்காரிதான்.''

சித்திராவின் மனநிலையை ஓரளவு ஆற்ற முயல்பவளாக உமாவின் பேச்சு இருந்தது.

''அது உண்மைதான். நான் புறப்படும்போது ஒரு மாதத்தில் வந்து விடு மகளே, பணம் ஏதாவது தேவையென்றால் அனுப்பி வைப்போம் என்றும் வழிக்கு வழி சொல்லி அனுப்பினார்கள். ஆனாலும் அம்மா அப்பாவையும் இந்த நிலையில் விட்டுப் போவதும் கவலையாய் இருக்கிறது.''

''அதற்குத்தானே இந்தப் பெண் மீனாட்சி வரப் போகிறாளே''

உமாவின் பேச்சில் சித்திராவின் ஐயத்தைக் களையும் உறுதியிருந்தது.

''இந்தப் பெண்ணை வீட்டு வேலைக்கு ஏற்பாடு செய்து தருவதுதான் நீ எனக்குச் செய்யும் பெரிய உதவி. இதை நான் என்றும் மறக்க மாட்டேன். அவள் கேட்கும் சம்பளத்தைத் தவறாது மாதந்தோறும் கொடுத்து விடலாம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதெல்லாம் பெரிய உதவியா? அந்தப் பெண்ணுக்குத் தான் நீ செய்யப்போவது பெரிய உதவி. நீ தருவதை அவள் வாங்கிக் கொள்வாள். நான் சொன்னேனே, அவளது புருஷன் ஒரு ஓட்டலில் வேலை செய்து மாட்டுப் பட்டு சிறையில் இருக்கிறான். இன்னும் இரண்டு ஆண்டு கள் இருந்தே தீரவேண்டும். இவர்தானே சீவ் வார்டன். அதனால் அந்தப் பெண் எங்கள் சொல்லுக்குக் கட்டுப் பட்டே இருப்பாள். அதில் சந்தேகமேயில்லை.'

உமா தன் கணவனின் ஏற்பாட்டுள் மறைந்திருக்கும் அடிமைத்தனமான கட்டுப்பாட்டையும் மறைமுகமாகத் தெரிவித்தாள்.

"ஏதோ என் அதிர்ஷ்டந்தான்."

சித்திரா சிரித்தபடியே சொன்னாள்.

"நீ எல்லாவற்றிலும் அதிர்ஷ்டக்காரிதான்."

"என் உழைப்பையும் உடுப்பையும் பார்த்துச் சொல்ல வேண்டாம். நான் கூட உன்னைப்போல் கலியாணம் செய்து குடும்பமாகவே வாழ விரும்புகிறேன்."

"நான் செய்த தவறை நீயும் செய்யப் போகிறாயா? எல்லாம் இக்கரைக்கு அக்கரை பச்சைதான்."

உமா சோகக் குரலில் சொன்னாள்.

"இன்னும் இரண்டு மூன்று வருஷத்தில் நான் திரும்பி வந்து விடுவேன். இந்தச் சமூகத்தில் ஒரு பெண் கலியாணம் செய்யாமல் வாழ முடியுமா?"

உமாவின் கூற்றைப் பொருட்படுத்தாதவளாக சித்திரா வினா எழுப்பினாள்.

சித்திராவின் வினாவிற்கு உமாவால் உடன் பதில் கூற முடியவில்லை. சிறிது நேரம் சிந்தித்தாள். 'ஆண்களால் முடியும் ஏன் பெண்களால் முடியாதா' என்று கேட்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்தாள். அதற்கிடையில் அந்தப் பெண் வந்தாள், கையிலே சிறு மூட்டை முடிச்சு.

"நீ மீனாட்சி தானே" - உமா கேட்டாள்.

"ஆமாங்க"

உமாவைப் போலவே கருமை நிறமாக அப்பெண்ணும் இருந்தாள். 'உழைக்கும் பெண்களெல்லாம் கறுப்பாகவே இருப்பார்கள்' என்று பள்ளித் தோழன் பாலன் ஒரு தடவை சொன்னது அவளது நினைவில் வந்தது. திருமணச் சந்தையில் நுழையும் வேளையில் தோல் நிறத்தால் ஏற்படக் கூடிய பிரச்சனைகளையும் தன் அனுபவத்தைக் கொண்டே எண்ணிப் பார்த்தாள்.

"இந்த அம்மா வீட்டில்தான் நீ வேலை செய்ய வேண்டும்."

சித்திரா பக்கமாக தலையைத் திரும்பியபடி உமா சொன்னாள்.

"சரியுங்க"

மீனாட்சி சிரித்தபடியே சித்திராவை ஏறிட்டுப் பார்த்தாள். உடையும் அலங்காரமும் அழகும் அவளது அந்தஸ்தைக் காட்டின. நல்ல வசதியான இடத்திற்கே வேலைக்குச் செல்வதான திருப்தி அவ்வேளை மீனாட்சிக்கு ஏற்பட்டது.

மீனாட்சியின் கரிய நிறமும் போஷாக்கான உணவின்மையைக் காட்டும் முன்புறக் கழுத்து எலும்பின் தோற்றமும் உமாவின் சிந்தனையைக் கிளறிக் கொண்டிருந்தன. அவளது கணவன் எங்கோ ஓட்டலில் வேலை செய்து மாட்டுப்பட்டுச் சிறையில் இருப்பது தவிர வேறு எவ்வித விபரத்தையும் உமா அறிந்ததில்லை.

"உன் புருஷன் சொந்த உறவா?"

"இல்லைங்க"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அபபடியென்றால் வேறு தோட்டத்திலிருந்து சீதனம் தந்து பேசிச் செய்த கலியாணமா?"

"இல்லைங்க."

சிரித்தபடியே மீனாட்சி கூறிய பதில் உமாவுக்கு ஏமாற்றமளித்தது.

"அப்ப காதல் கலியாணமா?" சித்திரா சிரித்தபடியே கேட்டாள்.

"இல்லைங்க. அவரு அடுத்த தோட்டம். எங்க தோட்டத்திற்கு எங்க உறவினரைப் பார்க்க வருவாரு. அடுத்த லயத்திலேயே நாங்க இருந்தோம். அவராகவே என்னைக் கேட்டாரு. எனக்கும் அவரைப் பிடித்திருந்தது. எங்க குடும்பத்தில் அப்பா, அம்மா உடன்பட மாட்டாங்க என்று தெரிந்ததும் அவரோடு அவரின் தோட்டத்திற்கு நானும் போய் விட்டேன்".

ஓரளவு வெட்கம் மேலிட நிலத்தைப் பார்த்தபடி சிரித்துக் கொண்டே மீனாட்சி தொடர்ந்து சொன்னாள்: "கலவரம் ஏற்பட்ட வேளைதான் இருவருமாகக் கிளிநொச்சிக்கு வந்தோம்"

உமாவிற்கு அவளது துணிச்சலான முடிவும் செயலும் வியப்பளித்தது. தன் கோளைத்தனத்தை எண்ணி வெட்கப்பட்டாள். அடிமனதில் வேதனையும் ஏற்பட்டது. ஆறியதாகக் கருதியிருந்த பழைய புண் ஊறல் எடுத்தது.

"ஏழைத் தொழிலாளர்களிடை உள்ள நேர்மையையும் துணிச்சலையும் நடுத்தர வர்க்கத்தினரிடம் காண முடியாது."

தனபாலன் அன்றொரு நாள் கூறியது உமாவின் நினைவில் தோன்றியது.

பழைய நினைவுகளில் ஊறிவிடாது யதார்த்த நிலைக்கு உமா தன் நினைவை ஈர்த்துச் சொன்னாள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இந்த அம்மாவோடு நீ போய் அவங்க வீட்டைப் பார்த்துக் கொள். வயதான அவங்க அப்பா அம்மாவைக் கவனமாகப் பார்க்க வேணும். நானும் இடையிடை வருவேன்.''

உமா மீனாட்சியின் வேலைப் பணிகளை விரிவாகக் கூறினாள்.

''அய்யாவிட்டைச் சொல்லி அவரையும் அடிச்சுக் கிடிச்சுப் போடாம பார்க்கச் சொல்லுங்கம்மா''

மீனாட்சி நயமாகச் சொன்னாள். சிறையில் அதிகாரிகள் காட்டும் அடக்குமுறை பற்றி கணவன் மூலம் மட்டுமல்ல மற்றவர் வாயிலாகவும் மீனாட்சி அறிந்த அனுபவத்தை வைத்தே சொன்னாள்.

''நீ பயப்படாதே நான் அவரிடம் சொல்லி வைப்பேன்.''

உமா ஆறுதல் கூறியபோதும் மீனாட்சி அவளைப் பார்த்துப் பரிதாபப் பட்டாள். அவள் மூலம் ஜெயில் வார்டனான கணவனுக்கும் ஒரு வார்த்தை போடுவதில் ஓரளவு பயனிருக்கும் என்பதை மீனாட்சி உணராமலில்லை. தன்னிலும் பார்க்க வசதியான குடும்பப் பெண்கள் கணவன்மாரின் நடத்தை பற்றி நன்கு அறியாது ஏமாந்து போகிறார்களே என மனதுள் எண்ணி உமாவிற்காக இரக்கப் பட்டாள். கறுப்பானாலும் கவர்ச்சியான பெண். படித்த பெண். அப்படியிருந்தும் ஏமாற்றப்பட்டு விடுகிறார்களே என எண்ணிக் கொண்டாள்.

''உங்க தயவிலை நான் நல்லாய் வாழுவேனம்மா''

மீனாட்சியின் வழக்கமான வார்த்தை உதிர்ந்தது.

''தண்ணீர் குடிப்பம்மா'' என்று கூறியபடி மீனாட்சி உள்ளே நுழைய கால்கள் முந்தின.

''நில், நான் எடுத்துவருகிறேன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குப் பழகிய வீடு எனக் காட்டியிருக்கப்படாது என மீனாட்சி தன்னைக் கடிந்து கொண்டாள்.

உமா மீனாட்சிக்காக இரக்கப்பட்டாள். கணவன் சிறைப்பட வீட்டு வேலை செய்து வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டதற்காகப் பரிதாபப்பட்டாள். ஆயினும் பாலன் ஒரு தடவை சொன்னதும் அப்போது அவள் நினைவில் வந்தது.

''உழைக்கும் தொழிலாளிப் பெண்கள் என்ன நிலைமையையும் சமாளித்துக் கொள்வார்கள். நடுத்தர வர்க்கப் பெண்களே விதியை நொந்து கொண்டிருப்பார்கள்.''

சித்திரா மேலும் தாமதிக்க விரும்பாது எழுந்தாள். மறுநாள் பயணத்திற்காகச் செய்ய வேண்டிய வேலைகள் எல்லாம் அவள் நிலையில் அமைதியின்மையை ஏற்படுத்தியது.

தோழியிடம் விடை பெற்றாள். மீனாட்சியும் உமாவிடம் நன்றி கூறிவிட்டுப் புறப்பட்டாள்.

''ஒழுங்காக வேலை செய். அம்மா மட்டுமென்ன நாங்களும் உன்னைக் கைவிட மாட்டோம்,''

உமா ஆர்வமூட்டினாள். வழியனுப்ப வாயில் படலை வரை வந்தாள். திடீரென நினைவு வந்தவளாகக் கேட்டாள்.

''உன் தம்பி யோகநாதன் வந்திருப்பதாகச் சொன்னாயே. போய் விட்டானா?''

''இல்லையே. ஊர்சுற்றப் போய்விட்டான். இனி ராத்திரிக்குத்தான் வருவான்.''

சித்திரா சோர்வோடு சொன்னாள்.

''உன் பயணம் பற்றி அவன் ஒன்றும் சொல்லவில்லையா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அவன் கத்திக்கொண்டே இருக்கிறான். அது பெரிய பிரச்னை. நாளைக்கு வரும்போது சொல்லுகிறேனே.''

## 2

சித்திரா வீட்டை அடைந்ததும் மீனாட்சிக்கு அறைகளையும் அடுக்களை, கிணறு, மோட்டர், கழிவறை ஆகியவற்றையும் முதலில் காட்டினாள்.

தான் தேடி வைத்திருக்கும் நவீன கருவிகளையும் காட்டினாள். காஸ், எலக்டிக் குக்கர், கேட்டில், பிரிட்ஜ் யாவும் மீனாட்சிக்கு வாய்ப்பாக இருப்பதை உணர்ந்து கொண்டாள். தண்ணீர் குழாயில் தாராளமாக வந்தது.

''அடுப்பூதும் வேலை உனக்கில்லை. காஸ் முடிந்தாலும் எலக்டிக் குக்கரைப் பயன்படுத்தலாம். எலெக்டிக் கேட்டிலில் டீ தயாரிக்கலாம்''—கூறியபடியே டீ தயாரிக்க சுவிட்சைப் போட்டாள்.

சித்திரா அங்குள்ள வசதிகளை விவரித்ததோடு அவை பற்றி அவள் கவனிக்க வேண்டிய விஷயங்களையும் அச்சுறுத்திச் சொன்னாள். அத்தனை வசதியான வீட்டை மீனாட்சி முன்னர், வேறு வீடுகளில் வேலை செய்த போதும், கண்டதில்லை.

''அம்மா சமையற்கட்டையே அழகாக வைத்திருக்கிறீங்க.''

மீனாட்சி பாராட்டினாள்.

''இதெல்லாம் என் உழைப்பில் வாங்கியவை. இது அம்மாவின் பழைய சீதன வீடு. நானே என் பணத்தில் திருத்திக் கட்டினேன்.''

''பெண்ணாகப் பிறந்தவளே உழைச்சு இவற்றையெல்லாம் தேடியதென்றால் உங்களுக்கும் பெருமைதானே அம்மா.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரா பாராட்டை ஏற்றுக்கொண்டு தான் தயாரித்த தேநீரை மீனாட்சிக்கு ஒரு கிளாசிலேயே கொடுத்தாள். மீனாட்சி தயக்கத்தோடு பெற்றாள்.

சித்திராவும் ஒரு கிளாசில் ஊற்றிப் பருகினாள்.

தான் வேலைக்காரியாக அந்த வீட்டிற்கு வந்தபோதும் வேறுபாடு காட்டாது தேநீர் தருவது மீனாட்சிக்கு விசித்திர மாகத் தோன்றியது. துபாயில் சித்திராவும் வேலைக்காரி யாக பணிபுரிவதை மீனாட்சி அறியாள்.

''நீ எதற்கும் இங்கே தயங்கவேண்டியதில்லை. உன் வீடு போலப் பழகலாம்.''

மீனாட்சியின் மனதை சித்திராவின் செயலும் பேச்சும் தொட்டது.

''வா. அப்பா அம்மாவைப் பார்ப்போம். தூங்கி எழுந்திருப்பார்கள்.''

ஒரு அறையின் கதவைத் திறந்து உள்ளே அழைத்துச் சென்றாள்,

அரவம் கேட்டு படுக்கையிலிருந்து அப்பா எழுந்து தூங்கியிருந்த அம்மாவை தட்டினார்.

''அம்மா, இவள் தான் மீனாட்சி. உமாவின் புருஷன் ஜெயிலர் ஏற்பாடு செய்தார். உங்களையெல்லாம் நல்லாய் கவனிச்சுக் கொள்ளுவாள்.''

''ம்ம்...''

வேண்டா வெறுப்பான ஓசை.

''அப்பா... மீனாட்சி...''

''தேயிலைத் தோட்டத்துப் பெண்ணா நீ...''

''ஆமுங்க. பிறகு பரந்தனிலை வந்து குடியேறினோம். கலவரம் தொடங்கிய பிறகு அகதியாய் இங்கேயே வந்து விட்டோம்,''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இவள் புருஷன் யாரோ கேஸிலை மாட்டி மறியல் வீட்டிலை இருக்கிறாங்க.''

சித்திரா மேலும் சில விபரங்களைக் கூறினாள்.

கணவன் சிறையிலிருந்து வெளிவரும் வரை அவள் நிச்சயம் அங்கே வேலை செய்வாள் என்பதை சித்திரா மறைமுகமாகத் தெரிவித்தாள்.

''அம்மா, அப்பாவும் சாப்பிட்டார் தானே இப்ப கோப்பியா, டீயா குடிப்பீங்கள்''

''என்னவென்றாலும் கொண்டுவா''

வேண்டா வெறுப்பான குரல்.

சித்திரா மீனாட்சியுடன் அடுக்களையை நோக்கிச் சென்றாள்.

அங்கு தேநீர் தயாரிக்கும் போது அப்பாவிற்கும் அம்மாவிற்கும் சாயம், சீனி போடவேண்டிய அளவுகளை சித்திரா விவரமாகச் சொன்னாள்.

''அப்பாவிற்கு சர்க்கரை வியாதி. கண்டபடி சீனி போட்டு விடவேண்டாம். இனிப்புப் பண்டங்கள் வேண்டாம். கிழங்கு வகை சமைக்க வேண்டாம். பனங்கட்டி துண்டு ஒன்றைக் கொடுத்து விடு. அவர் சத்தம் போட்டுக் கேட்டால் நான் அப்படித்தான் சொல்லி வைத்தேன் என்று கண்டிப்பாகச் சொல்லிவிடு''

''சரியம்மா''

மீனாட்சியைத் தடுத்துவிட்டு சித்திராவே பெற்றாருக்கு தேநீர் கொடுத்துவிட்டு வந்தாள்.

''நீங்க துபாய்க்குப் போவது அம்மா, அப்பாவிற்கு விருப்பமில்லைப் போல் தெரியுதும்மா''

மீனாட்சி தயக்கத்தோடு சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எந்தப் பெற்றாருக்குத்தான் விரும்பமாயிருக்கும். அதுவும் வயதான வேளையில், நோய் வேறை இருக்கும் போது. அம்மாவிற்கும் வாதக்குணம். மூட்டெல்லாம் வலி என்று சொல்லிக் கொண்டேயிருப்பா"

"அப்ப ஏனம்மா நீங்க போகவேணும்?"

"அதுக்குப் பல காரணங்களுண்டு. வாழுவதற்குப் பணமும் வேணுமல்லவா? எப்படியானாலும் இதெல்லாம் உனக்குத் தேவையில்லாத விஷயங்கள். நீ கவனமாக அப்பா அம்மாவை மட்டும் கவனித்துக் கொள். உனக்கு மற்றவர் தரக்கூடியதிலும் பார்க்க மாதம் இருநூறு ரூபா கூடத் தருவேன். நான் திரும்பி வரும் வரை நீ எங்கேயும் போய்விடவேண்டாம்."

கண்டிப்பான குரல். பணத்தின் ஆதிக்கமும் குரலில் ஒலித்தது.

"அப்படியெல்லாம் உங்களை நடுத்தெருவில் விட்டு விடமாட்டேன்."

அவ்வார்த்தைகள் சித்திராவுக்கு ஆறுதலளித்தது.

இருவரும் சமையலில் ஈடுபட்டு நண்பகல் உணவை முடித்தனர்.

பின்னர் தளவாடங்களைத் துடைத்து வீட்டைப் பெருக்கும் வேலையைச் செய்யும்படி மீனாட்சியைப் பணித்துவிட்டு தன் பயணத்திற்காக பெட்டியை அடுக்கும் வேலையில் சித்திரா ஈடுபட்டாள்.

சித்திராவின் அறையைக் கண்ட மீனாட்சி ஒரு கணம் வியப்படைந்தாள்.

வெள்ளை சீட் விரித்த கட்டில். வர்ண வேலை செய்யப்பட்ட உறை கொண்ட தலையணைகள். உடைகள தொங்கும் பீரோ. நிலைக் கண்ணாடியும் அதன் முன் உட்காரக் கூடிய ஸ்ரூல். கண்ணாடி முன் அழகாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்கப்பட்டிருந்த அழகு சாதன புட்டிகளும் டப்பாக் களும்.

சித்திராவின் அறையைச் சேர்ந்து தனிக்குளியலறையும் இருந்தது.

மீனாட்சி அறையைச் சுற்றிவரப் பார்த்து வியப்படை யும் வேளையில் சித்திரா குளியலறைக்குச் சென்று முகத் தைக் கழுவிவிட்டு வந்தாள்.

''வீட்டைப் பார்த்துக் கொள். முன்புற வராந்தாவைப் பெருக்கி விடு. நான் இன்னும் சிலபேருக்குப் பயணம் சொல்லிவிட்டு வருவேன். பின்னர் இரவுச் சாப்பாடு தயாரிக்கலாம்.''

சித்திரா சொல்லிக் கொண்டே தன்னை அலங்கரித்துக் கொள்ள நிலைக் கண்ணாடி முன் உட்கார்ந்தாள்.

மீனாட்சி வராந்தாவைப் பெருக்கி விட்டு அறையுள் நுழைந்த போது புதிய நறுமணம் அவளது மூக்கைத் துளைத்தது. பல்வேறு டிசைன் அச்சிட்ட நைலெக்ஸ் சேலை ஒன்றை சித்திரா உடுத்துக் கொண்டிருந்தாள்,

''நல்ல வாசமம்மா. இந்தச் சேலை கூட உங்களுக்கு நல்லாயிருக்கு.''

மீனாட்சி பாராட்டினாள்.

''துபாயில் வாங்கியது. இப்படியான சேலையோ, சென்டோ இங்கே கிடையாது.''

தன் தனித்துவத்தை சித்திரா பறை சாற்றினாள். அதேவேளை மீனாட்சி வெறுமனே பாராட்டுகிறாளா அல்லது உண்மையாகவே சொல்கிறாளா என்ற ஐயமும் சித்திரா மனதில் எழுந்தது. ஆண்களில் சிலர் அவ்வாறு பாராட்டி நெருங்கிவர முயல்வதையும் அவள் அறியாம லில்லை. அப்படிப் பட்டவர்களை எவ்வாறு தரம் பிரித்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையாள்வது என்பதையும் அவளது விவேகம் அறியாமலில்லை.

சித்திரா அறையை விட்டு வெளியே வந்தபோது மீனாட்சி கேட்டாள்.

"உங்க தம்பி நீங்க திரும்பி வரமுன்னர் வந்து விடுவாரா?"

மீனாட்சியின் குரலில் சிறிது அச்சம் தொனித்தது.

"சில வேளை வந்து விடுவான். ஏதாவது கேட்டால் உண்மையையே சொல்லு. அவன் சிலவேளை சத்தம் போடுவான். நீ அவை பற்றிக் கவலைப்பட வேண்டாம்."

சித்திரா சொல்லிவிட்டுச் சென்று விட்டாள். அவள் வீடு திரும்ப முன்னரே தம்பி யோகநாதன் வந்துவிட்டான்.

மீனாட்சி பற்றிய விபரங்களைக் கேட்டு அறிந்து கொண்டான்.

மகனின் குரலைக் கேட்டதும் தாயும் தந்தையும் அறையை விட்டு வெளியே வந்தனர்.

"ஏதாவது குடிக்கிறாயா தம்பி" வாஞ்சையோடு தாயார் கேட்டாள். அதைப் பொருட்படுத்ாதவனாக அவன் சொன்னான்.

"கேட்டியா அம்மா கதையை. உங்க மகள் தோட்டக் காரப் பெண்ணை இங்கே வேலைக்கு உங்களைக் கவனிப் பதற்கு ஏற்பாடு செய்துவிட்டு டுபாயிலை அராபியக் கிழடுகளைப் பார்க்க நாகரிக வேலைக்காரியாகப் போகப் போகிறா."

யோகநாதனின் நளினப் பேச்சு மூலம் பல உண்மை களை ஒரே தடவையில் மீனாட்சி அறிந்து கொண்டாள்.

"அவள் நிட்சயமாக நாளைக்குப் போகப் போகிறாள். நீ சத்தம் போடுவதால் ஒரு பயனும் இருக்கப் போகிற தில்லை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இல்லையம்மா. இது வேடிக்கையாகத் தெரியேல் லையா? இது எங்க வீட்டு விஷயம் மட்டுமில்லை. சிங்கள, முஸ்லிம் பெண்கள்கூட தங்கள் வீட்டுப் பெற்றோரைத் தவிக்க விட்டு விட்டு அரேபிய வீடுகளில் வேலை செய்யப் படையெடுத்து விமானத்தில் பறக்கிறார்கள். வெள்ளைக் காரன் இந்தியாவிலிருந்து கூலிப் படைகளை இந்நாட் டுக்குள் இறக்குமதி செய்து நாட்டை நாசமாக்கினான் என்று சிங்கள-பௌத்த அரசியல்வாதிகள் கூச்சல் போட்டுக் கொண்டே இருக்கிறாங்கள். அதேவேளை வெட்கமில்லாமல் வனாந்தரங்களுக்குத் தங்கள் ஜாதிக் கூலிகளை, பௌத்த சிங்களக் கூலிகளையும் அனுப்பு கிறார்கள்.''

சிரித்தபடியே வேடிக்கைக் கதை சொல்வது போலச் சொன்னான். அவன் கூறிய கருத்து தந்தையாருக்கும் நன்கு பிடித்துக் கொண்டது.

''எல்லாம் பணம்... எல்லோரும் பணத்திற்குப் பின்னால் ஓடுகிறார்கள். யார்தான் மானம் மரியாதையை இந்தக் காலத்தில் பார்க்கிறார்கள்.''

தந்தையார் தம்பையா யாவையும் பொதுமைப் படுத் தினார். அவரது அனுபவ ரீதியான கூற்றின் அடிப் படையில் மறைந்திருக்கும் சித்தாந்தத்தையும் யோக நாதனால் உணர முடிந்தது.

''எங்க நாட்டு மானம் மரியாதை எப்படி காத்தில் பறக்கிறது என்பதற்கு ஒரு கதை சொல்லுவேனப்பா. என் டாக்டர் நண்பன் ஒருவன் சுவீடனுக்கு ஒரு மாநாட் டுக்குச் சென்றிருந்தான். அங்கே சவுதி அரேபியாவிலிருந்து வந்த டாக்டர் அருகே உட்கார நேரிட்டது. அவன் என் நண்பரை எந்த நாடு என்று கேட்டுவிட்டுச் சொன்னா னாம். 'ஓ ஸ்ரீலங்காவா, அங்கேயிருந்துதான் எங்க கூலி ஆட்களை வரவழைக்கிறோமே' என்று. இதைவிட மானக் கேடான வார்த்தை என்ன இருக்கிறது? இந்த நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இந்தியக் கூலிகள்' என அரசியல் தலைவர்கள் கேவல மாகப் பேசுகிறார்கள்.''

''அவங்க தானே கூலிகளை அனுப்பவே ஒரு அரசாங்க டிப்பாட்மென்டே வைத்திருக்கிறார்களே.''

தந்தையார் மகனுக்குப் பதில் சொன்னார்.

''இது மற்றொரு வெட்கக் கேடான செயல். எங்கள் நாட்டில் பாதிப் பேர் வறியவர்கள், அரச மானியத்தில் வாழ வேண்டி உள்ளார்கள் என்று சொல்லும் அரசாங்கம் மக்களைக் கொண்டு எங்கள் வளமான நாட்டின் உற்பத்தியைப் பெருக்கி வறுமையை ஒழிப்பதை விட்டு வேற்று நாட்டான் வனாந்திரங்களை வளமாக்க அனுப்பு கிறார்கள். இதுவும் பெரிய முரண்பாடாகவும் வேடிக்கை யாகவும் தெரியவில்லையா?''

''வேதனையான செயலும் கூட''

தந்தையாரின் கூற்றுடன் அவனது மனவேதனையும் ஒன்றியது.

''என்ன இருந்தாலும் தம்பி அவள் பயணம் போகிற நேரத்தில் வீணாகச் சண்டை பிடிக்காதே. வயதான நேரத்தில் பெத்த மகள் இல்லாவிட்டாலும் ஆராவது உதவாமலா போகப் போகினம்.''

தாயார் சமாதானம் கூறினார்.

''பெற்றவர்களை விட்டுவிட்டு ஊராருக்கு உதவ அந் நிய நாட்டுக்குச் செல்வதுதான் எனக்குப் புரியாம லிருக்கு''

''கலியாணம் கட்டிக் கொடுத்திருந்தாலும் பெரும் பாலும் உதவாமலும் போகலாம். அது புருஷனைப் பொறுத்தது.''

''அப்படியென்றாலும் ஆபத்துக்கு வந்து பார்க்கலாம் தானே''



08 DEC 2021
704556
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகநாதன் சொன்னான்.

"இப்ப இங்கே எங்கே மாப்பிளை கிடைக்குது. வெளி நாட்டு மாப்பிளைதான் பார்க்கவேணும். இவள் தானே இப்ப கலியாணமே வேண்டாமென்று காசுழைக்கத் திரிகிறாள். வெளிநாட்டுக்கு கலியாணம் கட்டிப் போய் விட்டாள் என்று நாங்க நினைத்துக் கொண்டிருப்போம்."

"அப்படி நடந்தால் அது வேற விஷயமம்மா. நடக்காததை வைத்து சமாதானம் பேசப் பார்க்கிறீர்கள்."

தாயின் சமாதானங்களுக்கு யோகநாதன் பதில் கூறிக் கொண்டிருந்தான். மீனாட்சியும் அங்கு வந்த நாளிலேயே அங்கே நிலவும் முரண்பாடுகளை எட்ட நின்று கேட்டுக் கொண்டு நின்றாள்.

அவ்வேளை படலை திறந்த அரவம் கேட்டது. யோக நாதன் தன் அறைக்குச் சென்றான்.

"தம்பி வந்து விட்டானா' என்ற வாஞ்சைக் குரலுடன் சித்திரா உள்ளே வந்தாள்.

தான் பார்த்து வந்தவர் பற்றிய விபரங்களை தாயிடம் கூறினாள்.

சாப்பாட்டு வேளைகளில் வீட்டிலுள்ள முரண்பாடுகள் முற்றி வெடிப்பது வழக்கம். அன்று இரவுச் சாப்பாடு அமைதியாக நடந்தது. மனதுள் பல விஷயங்கள் குமைந் திருந்த போதும் யாவரும் அடக்கிக் கொண்டிருந்தனர்.

"அப்பாவிற்கு காலையில் குரக்கன் பிட்டு அவிப் போமா?';

சித்திரா மௌனத்தை முறித்தாள்.

"ஏதோ அப்பாவிலை பெரிய பாசம் வைத்திருப்பது போலக் கேட்கிறாய். நாளை இரவும் கேட்டு அப்பாவுக்குப் பிடித்தது பண்ணுவாயோ"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயாரின் மனப் புகைச்சல் வெளி வந்தது.

"ஏனம்மா சும்மா சண்டைக்கு வருகிறாய். இங்கேயுள்ள அரசியல் நிலைமை தெரியாதா. நான் மட்டுமா. எத்தனை பெண்கள் நாட்டை விட்டே ஓடுகிறார்கள். என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய் அம்மா இப்போது."

"ஒரு கலியாணத்தைக் கட்டி இங்கேயே இரேன்"

"வர்றவன் அப்பாவுக்குச் சமைச்சுப் போட விடுவானா? தனக்கு மட்டும் ஆக்கிப் போடும்படி அதிகாரம் செலுத்துவான்."

"அதுக்காக அந்நியனுக்குச் சமைச்சுப் போடப் போறியா?"

"அங்கே சும்மா இல்லை. பத்துச் சமையல்காரரின் சம்பளம் தருவார்கள். அங்கே அடுப்பூத வேண்டிய தேவையுமில்லை."

"அதுக்காக நீ கலியாணம் கட்டாமல் இருக்கப் போறியா?"

"கலியாணம் கட்டியவையெல்லாம் சந்தோஷமாக வாழுவது போலப் பேசுகிறாய்."

அன்று உமா கூறி, மனதில் பதிந்திருந்த செய்திகள் அம்பாகப் பாய்ந்தன.

"காதலிலை தோல்வியடைந்தவர்களும் இப்படித்தான் பேசுவது வழமை."

தாயும் மகளும் மோதிக் கொண்டிருப்பதற்கிடையே யோகநாதன் குறுக்கிட்டுச் சொன்னான்.

தந்தையார் மௌனமாக யாவையும் கேட்டுக் கொண்டிருந்தார். மீனாட்சிக்கும் இப்பேச்சாடல்கள் வேடிக்கையாக இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காதல் என்று விழ நான் அத்தனை ஏமாளியல்ல.''

''கலியாணம் என்றாவது ஒரு மாப்பிள்ளையை உன்னால் பிடிக்க முடியேல்லைத் தானே.''

''ஏன் ஒரு மாப்பிளை. நான் நினைச்சால் நூறு மாப்பிளையை என்னால் பிடிக்க முடியும்.''

என்ன அர்த்தத்தில் சித்திரா சொன்னாள் என்பதை எவராலும் ஊகிக்க முடியவில்லை. அவளது தீர்மானங்களை, பிடிவாதத்தை எவராலும் மாற்றிவிட முடியாது என்பதை மூவரும் அறிவர்.

''இங்கேயுள்ள அரசியல் குழப்ப நிலையில் அவள் எங்காவது போவதும் நிம்மதி. பாதுகாப்பானதும். சும்மா ஏன் வீண் விவாதம்? சித்திரா என்றைக்கும் இப்படித் தானே. வீணாகச் சண்டை வேண்டாம்.''

தந்தையார் பொறுமையிழந்து சொன்னார். அவர் பெரும்பாலும் சித்திராவின் பேச்சையும் செயலையும் ஆதரித்தே வந்தார். மனைவியின் புறுபுறுப்பிற்காக பெரும் பாலும் மௌனமாயிருப்பார்.

''நீங்க அளவுக்கு மிஞ்சி சுதந்திரம் கொடுத்து வளர்த்த குணம். திமிர் பிடித்துப் பேசுகிறாள்.''

தாயார் வழக்கமான குரலில் பாடினாள்.

''அவளை நான் வளர்த்தது போலவே சுதந்திரமாகப் பேசுகிறாள். இதில் என்ன தவறு?''

யோகநாதன் மௌனமாக இடியப்பத்தைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். சிந்தனையில் நாட்டமிருந்ததால் உணவின் ருசி தெரியவில்லை. இவ்வேளை ஏதாவது எதிர்த்துப் பேசினால், 'உன்னைக் கட்டுப்படுத்தியா வளர்த்தேன்' என்று கேட்டு விட்டால் மேலும் பேசுவது சிரமமாகி விடலாம் என்று எண்ணிக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் சமுதாய அமைப்பை மீறி நடப்பது, பேசுவதினால் ஏற்படக் கூடிய பிரச்சனைகளைத் தாயார் அறிவாள். ஊரில் நாலு பேர் நா வளைத்துப் பேசும் மானப் பிரச்சனை. தந்தையார் வீட்டுக்குள்ளேயே பெரும்பாலும். அவர் கவலைப் படுவதில்லை.

'ஏன் உன் அக்காவிற்கு கலியாணம் பேசிக் கட்டி வைக்கவில்லை. வயதாகிறது' என்று நண்பர்கள் கேட்ப தற்கு பதிலளிக்க வேண்டிய சமூகப் பிரச்சனை யோக நாதனுக்கும் இருந்தது.

# 3

இரவு மீனாட்சியையும் தனது அறையிலேயே பாய் போட்டுப் படுக்க சித்திரா ஏற்பாடு செய்தாள். உடுத்த சேலையோடு அவள் படுத்தாள். புதிய இடம். மீனாட்சிக்குத் தூக்கம் வரவில்லை. மறுநாள் பிரயாண நினைவில் சித்திராவுக்கும் நித்திரை வரவில்லை.

சித்திரா ரோசாப்பூ நிறத்தில் 'நைட்ரெஸ்' அணிந்த படி படுத்திருந்தாள். இத்தனை அழகும் கவர்ச்சியும் வசதியுமுள்ள பெண் இன்னும் மாப்பிளை தேடாமலிருக் கிறாளே என மீனாட்சி அங்கலாய்த்தாள்.

"இந்த இளம் வயதில் கலியாணம் செய்து அனுப விக்கிற சுகங்களும் இருக்கம்மா. உங்க அம்மா சொன்னது போல ஒரு கலியாணம் செய்து வாழுறதுதானே அம்மா."

மீனாட்சி நயமான உணர்வோடு சொன்னாள்.

"உமா என் பள்ளித் தோழி. அவள் எத்தனை மாணவர்களை உதறித் தள்ளி ஒழுக்கமாக வாழ்ந்தவள். இப்போது அந்த ஜெயிலரைக் கட்டி எத்தனை கஷ்டப் படுகிறாள் என்பது எனக்கல்லவோ தெரியும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெரும்பாலான ஆம்பிளைகளெல்லாம் அப்படித் தான் இருப்பாங்கம்மா. அதுக்காக ஆராவது கலியாணங் கட்டாமல் இருப்பாங்களா?"

அவள் தன் அனுபவத்தைக் கூறுவதுபோல இருந்தது.

"ஜெயிலர் வீட்டிலையும் ஒரு சிறைக் கூடம் வைத்த மாதிரி மனைவியை வைத்திருப்பாங்களா? படித்த பெண், பலரோடு பழகிய போதும் இப்போது சிறைக் கைதிபோல கட்டுப்பாடுகள். பிள்ளை வளர்ப்பது, அவனுக்குக் கால் பிடிக்கிறதும்தான் தொழில். இப்படி ஒரு கலியாணம் வேண்டிக் கிடக்கா?"

மீனாட்சி உள்ளூரச் சிரித்துக் கொண்டாள். அவள் கருதிச் சொன்னது ஏதோ. சித்திரா நினைத்தது வேறு எதுவோ.

ஒவ்வொருவர் மனதிலும் உள்ளூற ஓடுவது ஏதோ, வெளியே தவிர்க்க முடியாது மறைமுக வார்த்தைகளாக சில சொற்களே வருகின்றன.

"நீங்க சொல்லும் கட்டுப்பாடுகளைக் கூட எந்தப் பெண்ணும் பொறுத்துக் கொள்வாள். புருஷன் விஷயத்தில் பெண்கள் பொறுக்க முடியாத விஷயமும் ஒன்று இருக்கம்மா. அதைக் கெட்டித்தனமாக ஆண்கள் மறைத்துக் கொள்கிறார்கள். அதைத்தான் சொல்ல வந்தேன்."

மீனாட்சி மறைமுகமாக தான் கருதிய விஷயத்தை சித்திராவுக்கு உணர்த்தினாள். சித்திராவும் புரிந்து கொண்டாள். ஜெயிலரின் பாலுறவு ஒழுக்கம் பற்றி தவறாக உமா எதுவும் கூறியதாக அவளுக்கு நினைவில்லை. பெண்கள் பெரும்பாலும் இது பற்றி அறிய விரும்பு வதில்லை. அறிந்தாலும் வெளியே சொல்ல மாட்டார்கள். ஒரு சிலருக்கே அந்தத் துணிவு வரலாம்.

'கண்ணகி நளாயினி மட்டும்தான் கற்புக்கரசிகளா. உங்கள் தாய், மனைவி, சகோதரி வீட்டார் எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபசாரிகளா?' என்று பெரியார் கேட்டார் என அவள் எங்கோ படித்திருந்ததும் அவ்வேளை நினைவில் வந்தது.

உமா ஆற்றா நிலையில் கூறிய ஒரு சம்பவம் மட்டும் சித்திராவின் நினைவில் வந்தது. அக்கூற்று அவளது மனதையும் குடைந்து கொண்டே இருந்தது. 'இந்த ஜெயிலர் என்ன மனுஷன்?' என்று அவளது மனமும் வினா எழுப்பிக் கொண்டே இருந்தது.

மோக முள் உறுத்தும் கலியாணம் கட்டிய காலத்தில் தான் பேணி வந்த கற்பு நிலையை உணர்த்துவதாக கணவனிடம் அந்நியோன்னியமாக உமா கூறியிருந்தாள். 'உங்களுக்காகவே என் கற்பு நிலையை பெரிசாகிய பிறகும் பதின்நாலு ஆண்டுகளாகக் காப்பாற்றி வந்தேன்' என்ற அடி மனதின் கூற்றைக் கூறியதற்கு அவள் எதிர் பார்க்காத பதில் செருப்படி போல வந்தது.

'யார் உன்னைக் காப்பாற்றச் சொன்னது' எந்தப் பெண்ணும் மறக்க முடியாத, மன்னிக்க முடியாத கூற்று.

ஜெயிலர் கற்பொழுக்கம் இல்லாதவன் என்பது மறைமுகமாக அவனே கூறிவிட்டான் என்பதை சித்திராவால் எண்ணிப் பார்த்து உணர முடிந்தது. உமாவிடம் அது பற்றி அவள் எதுவும் பேசவில்லை.

அப்படிச் சொன்னவனே பள்ளித் தோழன் பாலனை அவள் எதிர்பாராது கண்டு கதைத்த போதும் கணவனை அறிமுகம் செய்து வைத்த போதும் சிரித்துப் பேசி விட்டு வீடு வந்து 'இவன் தானா உன் கள்ளக் காதலன்' என்று கூறி கன்னத்தில் அடித்தானாம். எத்தனை முரண்பாடான மனிதர்கள். ஆணாதிக்கம் அவர்களுக்கே நீதி பேசுகிறது. சித்திரா எண்ணிக் கொண்டாள்.

''நீ என்னத்தைச் சொல்லுகிறாய் என்று எனக்குப் புரியேல்லை மீனாட்சி.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் கருதியதை சித்திரா ஓரளவு புரிந்து கொண்ட போதும் மீனாட்சியின் வாயிலாக அந்தப் பொதுமைக் கருத்தை அறிய விரும்பினாள்.

''அதுதானம்மா வீட்டிலே கிளி போல வேண்டிய தெல்லாம் பண்ண பெண்டாட்டியிருக்க வெளியே மேச்சலுக்குப் போகிற விஷயம்''

''ஜெயிலரைப் பற்றியும் நீ சொல்லுகிறாயா?''

''ஆமம்மா...''

''உமாவிற்கு தெரியாமலா இருக்கும்?''

''புருஷன் வெளிய மேயிறதை கெட்டிக்காரப் பெண்ணாலை கண்டு பிடிச்சிடலாம். அல்லது அந்தம்மா வெறும் அப்பாவி அடிமையாயிருக்க வேணும்.''

உமாவை குறைவாகக் கூறியதை சித்திராவால் பொறுக்க முடியவில்லை.

''உனக்கெப்படி இதெல்லாம் தெரியும்?...மற்றவர்கள்...''

மேலும் தொடர்ந்து 'ஊர் விஷயங்கள், வம்புகள் உனக்கு அவசியமில்லை' என கண்டித்துச் சொல்ல விரும்பிய சித்திரா அத்தோடு நிறுத்திக் கொண்டாள். உமா வீட்டு மர்ம விஷயம் இவளுக்குத் தெரிய வேண்டும், அதை அறியலாம் என எண்ணினாள்.

''உங்களுக்கும் சொல்லி வைக்க வேணுமம்மா. ஜெயிலர் அய்யாவுக்கு என்னிலை ஒரு கண் அதனால் தான்....''

''எப்படி நீ சொல்லுவாய்?''

சித்திரா இடைமறித்துக் கடூர குரலில் கேட்டபடியே முழங்கையை தலையணை மேல் ஊன்றியபடி கீழே படுத்திருந்த மீனாட்சியின் முகத்தை நீல நிற பெட்றூம் மின் ஒளியில் பார்த்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன் புருஷன் விஷயமாக வீட்டிலே வந்து பார் என்று ஒரு நாள் ஜெயிலர் அய்யா சொன்னார். நான் போன போது வீட்டிலே ஒருவருமில்லை. அறைக்குள்ளேயே கூட்டிச் சென்றார்..."

"நீ சத்தம் போடல்லையா?"

"சினிமாவிலைதான் சத்தம் போடலாமம்மா. என் புருஷன் ஜெயிலிலை. அவர் ஜெயிலர். உள்ளே வா என்று நயமாகக் கூறி மார்பிலே பிடித்தாரம்மா. உடனே அதிர்ச்சியாயிருந்தது. ஆனா நாங்கள் உணர்ச்சியில்லாத மனுஷரா? பிறகு அடிமையாகி விடுகிறோம்..."

"அவ்வளவுக்குப் போய் விட்டுதா?"

"இதையெல்லாம் நீங்களும் தெரிந்திருக்கிறது நல்லதம்மா. பிறகு என் மேல் குறை சொல்ல வேண்டாம். நானே சொல்ல இருந்தேன். இங்கே நல்ல இடத்தில் எனக்கு வேலை தேடித் தந்ததாக அவர் சொன்னார். அதற்குள்ளே சுயநலமில்லாமலில்லை. நீங்க பாருங்கம்மா, ஜெயிலரையா இனி மேல் இங்கே வந்து உங்க குடும்பத்தோடு நல்லாய் பழகுவார். பிறகு வீட்டிலே ஒருவருமில்லாத வேளையில் இங்கே வந்து, 'அவசர வேலைக்கு வீட்டுக்கு ஒரு மணி நேரம் அனுப்புங்க' என்று உங்க அம்மா விட்டைக் கேட்டால் நான் என்ன செய்ய முடியும்? அம்மாவால் அனுமதி மறுக்க முடியுமா?"

மீனாட்சியின் கூற்றுகள் சித்திராவின் தூக்கத்தையே சிதற அடித்து விட்டது.

மீனாட்சியின் விவேகமான ஊகத்தையும் அவளால் அறிய முடிந்தது. 'உமாவிற்கு துரோகமா?' என்ற வினாவும் எழுந்தது. மீனாட்சிக்கும் அவளால் எவ்வித பதிலும் கூற முடியவில்லை, மீனாட்சியை விட்டால் வேறு தக்க ஆள் கிடைக்கப் போவதுமில்லை. மறுநாள் பயணம்.

"உனக்கு வாயிலை வயிற்றிலை ஏதாவது வந்து விட்டால்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அந்த விஷயத்திலை அவர் கவனமாயிருக்கிறார். மானம் மட்டுமில்லையம்மா. ஆராவது குழந்தையைப் பெத்து சொத்திலை பங்கு கேட்டுருவாங்களோ என்றும் வசதியான குடும்பத்து ஆம்பிளைங்க பயப்படுவாங்க. அது போக பெண்டாட்டிமாரும் புருஷன் ஊரில் மேஞ்சாலும் சரி, சின்ன வீடு வைச்சிருந்தாலும் சரி வேறு குழந்தை பெத்து விடப்படாது என்றுதான் பார்ப்பாங்க. தங்க சொத்தையும் பாதுகாப்பையுந்தான் எல்லாப் பெண்களும் அதிகமாய்ப் பார்ப்பாங்க.''

மீனாட்சியின் பேச்சுகளிலிருந்த உண்மைகளை சித்திரா உணராமலில்லை. ஆனாலும் இத்தனை துணிச்சல் காரியாகவும் இத்தனை விதமாகப் பேசக்கூடியவளாகவும் இருப்பதுவே சித்திராவுக்கு வியப்பாயிருந்தது.

''நீ எப்படி இதெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாய்?''

''நீங்கம்மா அந்நிய நாட்டுக்குப் பறந்து போறீங்க. நாங்க இந்த மண்ணிலையே வாழுகிறம். எங்க தராதரம் சார்ந்த பெண்களோடு கூடிப் பேசிப் பழகிறம். எல்லாம் ஊருலகத்திலே காணுற அனுபவம் தானம்மா. உங்க சமூகத்தில் இதையெல்லாம் மூடி மறைப்பாங்க. பேச மாட்டாங்க. நாங்க சாதாரணமாகப் பேசிக் கொள்வோம்''

மீனாட்சியின் பதில் யதார்த்த அனுபவமாக இருப்பதை அவளால் உணர முடிந்தது. இவ்வாறெல்லாம் கற்பனை யாகக் கூறக் கூடிய ஆற்றல் அப்பெண்ணிடம் இருக்க முடியாது என்றும் எண்ணிக் கொண்டாள்.

புதிய, விஷயங்கள் சிந்தனையைக் குழப்பியதால் நேரம் காலம் தூக்கம் யாவும் மறந்து விட்டது.

''ஜெயிலர் விஷயம் உன் புருஷனுக்குத் தெரிந்து விட்டால்...''

சித்திரா பதட்டத்தோடு சொன்னாள்.

''என் புருஷன் பெரிய யோக்கியன் என்று நான் வாதாட வரவில்லை அவனும் காதலித்ததென்று என்னைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டிக் கொண்டு ஓடியபோதும் அந்த ஆசையும் மோகமும் கொஞ்சக் காலந்தான். பிறகு தவிர்க்க முடியாமல் புருஷன் மனைவி என்று வாழுறதுதானம்மா வாழ்க்கை. இப்ப அவருக்குக் கஷ்டம் வந்துவிட்டதென்று நான் வேறு எவரோடாவது ஓடிவிட்டால் அவரால் என்ன செய்ய முடியும்? அப்பிடி ஓடுறவர்களும் எங்க ஆட்களிலேயும் இருக்கிறாங்க. நாங்க சொத்துப் பத்தில்லாதவங்க தானே. உங்க ஆட்களிலைதான் அடி உதை வாங்கிக் கொண்டும் சொத்துக்காகக் கிடப்பாங்க. எங்க ஆட்களில் கஷ்டப்பட்டாலும் நாங்க உழைச்சு சீவிந்து விடுவோம்...''

''அதுக்காக, உழைக்கிறதென்றால்...''

நடுத்தர வர்க்கத்தவரை அவள் இழிவாகப் பேசுவது சிறிது ஆத்திரமூட்டிய போதும் அவளது கூற்றில் உண்மை இருப்பதையும் சித்திராவால் காண முடிந்தது. அவளது பேச்சைத் திசை திருப்ப முயன்றாள்.

''முதலில் பசி... வயித்தை நிரப்ப வேணுமம்மா... அதுதான் சோறு வேணும். அதுக்காக மனுஷர் என்ன செய்யவும் தயாராவார்கள். அதற்குப் பிறகுதானம்மா நீங்க பேசுகிற மானம், மரியாதை ஒழுக்கமெல்லாம்...''

'சோறு, உணவு ஒரு பொருள், அதன் பிறகுதான் மற்றெல்லாம்' என பாலன் கல்லூரியில் பொருள் முதல் வாதம் என உமாவுக்கும் அவளுக்கும் கூறியது சித்திராவின் நினைவில் அப்போது வந்தது.

ஆனாலும் அவளால் அவனது சித்தாந்தத்தை முற்றாகக் கிரகிக்க முடியவில்லை.

''நான் கேட்ட கேள்விக்கு நீ இன்னும் பதில் கூற வில்லையே. உன் புருஷன் ஜெயிலர் விஷயத்தை அறிந்தால்... பெரிய ஆபத்தாகி விடுமே.''

''அவர் போய் கொலை செய்து போடுவார். பிறகு காலம் பூராவும் சிறையிலேயே வாழுவார். அதல்லம்மா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு எப்படித் தெரியப் போகிறது? ஜெயிலர் சொல்லப் போகிறாரா அல்லது நான் சொல்லி 'கொலை செய்து விட்டு வா' என்று கத்திக் கொடுக்கப் போகிறேனா? அதுபோக மனைவி தவறாக நடந்தாள் என்ற செய்தி ஊரெல்லாம் தெரிந்தாலும் கடைசியாகத்தான் புருஷன் காதில் விழும். அவளைப் புருஷன் கேட்க நேர்ந்தாலும் அவள் மறுத்துவிட்டு மேலும் கூடிய ஆசை காட்டி மயக்கி விடலாம். சில வேளை அடித்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஒன்றுமில்லாமலே சந்தேகப் பட்டு அல்லது நீ அவனோடு 'சிரிச்சுக் கதைச்சாய்' என்று பொய் குற்றம் சாட்டி அடிக்கிற புருஷனில்லையா?''

சந்தேகத்திற்கும் நடைமுறையில் தவறாக வாழ்வதற்கும் இடையில் இருக்கும் மெல்லிய கோட்டை சித்திராவால் காண முடிந்தது. உமா எத்தனை கட்டுப்பாடாக வாழ்ந்தும் ஜெயிலரிடம் அடியும் பேச்சும் வாங்கியதும் அவள் நினைவில் வந்தது.

உமாவின் வாழ்க்கையைப் பார்த்து, 'குடும்பம் ஒரு சிறைச்சாலை. கணவன் ஒரு ஜெயிலர்' என்று பொதுமைப் படுத்துவதா என்று சித்திராவின் மனம் ஈடாடியது. அவளது வயதை எட்டிய மீனாட்சியிடமிருந்து இத்தனை உண்மைகளை அறிய முடிந்ததே என வியப்படைந்தாள். எங்கள் வாழ்க்கை வெறும் பொய்மையா என்ற வினாவும் மனதைக் குடைந்தது.

''நீ எல்லா ஆண்களையும் பொதுமைப் படுத்திப் பேசுகிறாய்.''

''எல்லாம் வெளியே தெரிந்துவிடப் படாது என்ற பயந்தானம்மா மனுஷரை கட்டி வைத்திருக்குது. சந்தர்ப்பம் கிடைக்காததால்தான் மானம் ரோசமெல்லாம். எப்படியிருந்தாலும் ஆண்களுக்குத்தான் இந்த உலகமெல்லாம். சட்டம், நீதி, நியாயமெல்லாம் அவங்கதான் வைக்கிறாங்க. இந்த சிறையுக்குள்ளேயிருந்து பெண்ணும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ வேணுமெண்டால் துணிச்சல் வேணுமம்மா. இல்லா விட்டா அடிமையாயிருந்து ஆடு, மாடுபோல பிள்ளைப் பெத்திட்டு சாக வேண்டியதுதான்.''

''இத்தனை வயதில் எல்லா அநுபவமும் பெற்று ஏதோ சித்தாந்தமெல்லாம் பேசிறாய். துணிச்சலாகத் தலையெடுக்க பெண்களிடம் என்னதான் இருக்கு''

அவளின் எண்ணத்தையும் அறியும் நோக்கில் சித்திரா கேட்டாள்.

''அங்கேதானம்மா நீங்க பிழை விடுறீங்க. உங்களைப் போல பெண்ணிடம் எல்லாமிருக்கு. துணிச்சலான பெண்ணும் தலை நிமிர்ந்து வாழலாமம்மா. உங்களுக்குப் பின்னால பையன்கள் சுத்தாமலா விட்டிருப்பாங்க. அந்தப் பெரிய குடும்பத்து ஜெயிலர் நல்ல குடும்பத்து மனைவி யிருக்க என்னைக் கூப்பிட்டான். அதுதானம்மா பெண் களிடமுள்ள பெருமை...''

மேலும் தொடர்ந்து பேசினாள். மீனாட்சி இப்படி யெல்லாம் பேச எங்கே கற்றுக் கொண்டாள்? தான் கல்லூரியில் கற்காத விஷயமெல்லாவற்றையும் இவள் அனுபவ உலகத்தில் கற்றாளா? புராணக் கதையெல்லாம் அவளுக்குத் தெரிந்திருந்தது. அவள் கூறிய விளக்கம் பயங்கரமாக இருந்தது. ஆனால் அது யதார்த்த உண்மையே.

இத்தனை காலமும் அவள் எண்ணிக் கடைப்பிடித்த எண்ணங்கள், கருத்துக்கள், ஒழுக்கங்கள் யாவும் ஓரே இரவில் சிதறிப் போவதாக உணர்ந்தாள். புத்தகங்களில் சினிமாவில் நாடகத்தில் கண்டவை, கற்றவையாவும் வெறும் பொய்மையாக அவளுக்குத் தெரிந்தன.

''ஜெயிலர் இனிமேலும் உன்னோடு சேஷ்டைவிட வருவாரென்று நினைக்கிறாயா?''

பேச்சை திசை திருப்புவதாக சித்திரா கேட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாளைக்கு பயணம் அனுப்புகிற சாட்டில் அந்தம்மா வையும் அழைத்துக்கொண்டு வருவார். பொறுத்துப் பாருங்கோ. நீங்க இல்லாத வேளை, அந்தம்மாவிற்கு மேலாலை பேசி வீட்டையெல்லாம் தான் அடிக்கடி வந்து கவனிப்பதாகச் சொல்லுவார். எனக்கும் நீங்க கேட்கத் தக்கதாக 'உன் புருஷனை நான் தொல்லையில்லாது பார்த்துக் கொள்ளுவேன்' என்று உறுதி கூறுவார். அந்தம்மாவுக்காக நீங்க பாவம் பார்க்கலாம். அந்தக் குடும்பத்தை நீங்க உடைப்பீங்களா? இதே மாதிரித்தான் எல்லாக் குடும்பமும்.''

''உன்னைவிட ஜெயிலரய்யா வேறு பெண்களோடும் தொடர்பு வைத்திருக்கிறாரென்று நினைக்கிறாயா?''

''நிச்சயமா...''

''அதெப்படி உனக்குத் தெரியும்?''

''நெருங்கிப் பழகும்போது பெண்ணிடம் கெட்டித்தன மிருந்தால் இதெல்லாம் அறிந்து கொள்ள முடியுமம்மா.''

அதற்கு மேலாக உமா-ஜெயிலர் விஷயத்தை சித்திரா கிளப்ப விரும்பவில்லை. ஆனால் மீனாட்சியின் வாழ்க் கையில் நடந்த சம்பவங்கள் சிலவற்றை அவள் இன்னும் கூறவில்லை என்பதையும் அவளால் ஊகிக்க முடிந்தது. கிண்டினால் அவள் மறைக்கமாட்டாள் என்பதும் உண்மையே. கிளிநொச்சிப் பகுதியிருந்து வகுப்புக் கலவரத்தின் பின்னர், இயக்கங்களுக்கும் சிங்கள இராணுவத்திற்குமிடையில் ஏற்பட்ட மோதல்களின் பின்பு, அகதியாக யாழ்ப்பாணத்தைச் சார்ந்த கைதடி அகதி முகாமிற்கு வந்தது பற்றி உமா வீட்டில் கூறியதும் சித்திராவின் நினைவில் வந்தது. அவ்வேளை அவளும் பாதிக்கப்பட்டாளா என்பதை அறியும் நோக்குடன் கேட்டாள்.

''கலவரத்தின்போது பரந்தனோ, கிளிநொச்சி, பகுதியில் இருந்ததாகச் சொன்னாய். நீ ஒரு விதமாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்படவில்லையா? இராணுவத்தினர் பெண்களையெல்லாம் கெடுத்தார்கள், கற்பழித்தார்கள் என்றெல்லாம் செய்தி வந்ததே.''

''அந்தக் கதையை ஏனம்மா இப்ப கேட்கிறீங்க. கெடுக்கிறது அழிக்கிற தென்றெல்லாம் ஏனம்மா சொல்லுறீங்க. அவங்களெல்லாம் ஆணினத்தைச் சேர்ந்தவங்க தானே. அதை விட சட்டம நீதி எல்லாம் அவங்க கையில். ஆயுதம் வேறை. என்னதான் செய்ய மாட்டாங்க. ஆனாலும் நான் முன்னர் சொன்ன எங்க பலம் இருக்கே. அதனாலதான் எல்லோரும் தப்பினோம் எப்படியும் உயிர் தான் பெரிசம்மா. அதைக் காப்பாற்றினால்தான் மற்றது எதையும் சாதிக்க முடியும்.''

மீனாட்சி முன்னர் கூறியவை மனதில் மீண்டும் கிளர்ந்தது. இத்தகைய போர், கலவரங்களின் போது நிலையான சமூகத்தில் கட்டிக் காக்கப்படும் ஒழுக்கங்கள், சமுதாய மதிப்புகள் எல்லாம் எவ்வாறு சிதறடிக்கப்பட்டு புதிய எண்ணங்கள் விளக்கங்கள் எவ்வாறு தோன்றுகின்றன எனவும் எண்ணிப் பார்த்தாள்.

மீனாட்சி பாதி நித்திரையில் பேசுபவற்றையும் சித்திராவால் ஊகிக்க முடிந்தது. அவளை அதன்மேல் மேலும் விசாரணை செய்து குழப்ப விரும்பாதவளாக சித்திரா புரண்டு படுத்தாள். தானும் மறுநாள் பயணத்தை நினைந்து தூங்க விரும்பினாள். தூக்கம்தான் வரமறுத்தது. சிந்தனையில் பல்வேறு நினைவுகளும் புதிய கருத்துகளும் வந்து மோதிக் கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

தன் வாழ்க்கையில் முன் நடந்த சம்பவங்களையும் சித்திரா அசைபோட்டுப் பார்த்தாள். தவறான பொய்மைக் கருத்துகளால் தன்னை மனமார நேசித்தவர்களைக் கூட உதாசீனம் செய்த சம்பவங்கள் மனநோவை ஏற்படுத்தின. மனம் சுகத்தை நாடிய போதும் சமூகக் கட்டுப்பாடுகள் எவ்வாறு அவற்றை உடைக்கின்றன.

ஒழுக்க வரம்புகள் நாட்டுக்கு நாடு வேறுபடுவதையும் எண்ணிப் பார்த்தாள். துபாயில் உள்ள ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்கள் எவ்வாறு அடிமைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதும் நினைவில் வந்தது. செல்வத்தைப் பொறுத்து வீட்டிலேயே மனைவிகள். சட்டமே இடமளிக்கிறது. பெண்கள் அடிமையாக வாழும் நாடுகளில் சட்ட அனுமதியின்றி சின்ன வீடுகள். பல நாடுகளில் லைசென்சு பெற்ற விபசார விடுதிகள்.

பாலுறவு பலருக்குப் பொழுது போக்காகிறது. மற்றும் பலருக்கு அது வாழ்வுப் பிரச்னையாகிறது.

பாலன் ஒரு தடவை உமாவோடு பேசும்போது கூறிய தர்க்க நியாயமும் அவள் நினைவில் வந்தது.

"அறுபது வயது தாண்டியவனும் பதினாறு வயதுப் பெண்ணை திருமணம் செய்து பாலுறவு கொள்ள சட்டம் இயற்றியிருக்கிறார்கள். அது பாவமில்லை. நான் உன்னை முத்தமிட்டாலே அது பெரிய பாவம். கற்பு போய்விட்டது என்று கூக்குரலிடுவார்கள் என்று நீ பயப்படுகிறாய்."

உமா எத்தனை பொய்மையில் வாழ்ந்து சந்தோசமாக வாழவேண்டிய காலத்தை எல்லாம் சிதைத்தாள். இன்று எத்தனை துன்பம்?

"பாலன் அரசியல் பேசித்திரிகிறான். அவன் காதலிப்பது என்பது உண்மைதான். கலியாணத்தின் பின் அவனால் எனக்கு என்ன பாதுகாப்புத் தரமுடியும்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமா கூறிய நியாயம் அன்று சரி போலவே தெரிந்தது. இன்று பார்க்கும்போதுதான் ஆணாதிக்க பாதுகாப்பு என்பது எத்தனை கொடுமையாகத் தெரிகிறது. அவன் நிச்சயமாக சுதந்திரமாகவாவது வாழவிட்டிருப்பான். மனித வாழ்க்கையில் சுதந்திரமில்லாத வாழ்வு அடிமை வாழ்வு. ஆடு மாடுகள் போன்ற வாழ்வு. நல்ல வேளை. நான் இந்த வலையிலிருந்து இதுவரை தப்பிவிட்டேன்.

கற்பு என்ற பெயரில் பெண்ணொருத்தி பதினான்கு ஆண்டுகளாக இன்ப உணர்வுகளைத் துறந்து காப்பாற்றியதை திருமணமான முதல் நாளே 'யார் காப்பாற்றச் சொன்னது?' என்று ஒருவன் கேட்டுவிட்டான். ஆண்களுக்கு அவசியமில்லாதது. பெண்களுக்கு சுமையாக இருப்பது. இது என்ன ஏமாற்று; கொடுமை.

உமாவிற்காக அவள் மனம் வருந்தியது. பாலனை என்றோ ஒரு நாள் காண வேண்டும் எனவும் அவள் மனம் ஏங்கியது.

உமா ஒரு தடவை எதிர்பாராது கடைத்தெருவில் கண்டாளாம். குடும்ப வாழ்க்கைப் பற்றி விசாரித்தபோது கணவன் பற்றி அவள் எவ்வித குறையும் கூறவில்லை. மாமன் மாமிக்கும் தொண்டு செய்யவேண்டியது பற்றியும் வீட்டு வேலைகள் பற்றியும் மட்டும் குறை கூறினாள்.

''தனிக் குடித்தனம் போறதுதானே?''

''அவர் சம்மதிக்கவேண்டுமே''

''அதற்குப் போராட்டம் நடத்து''

''என்னையும் சிறைக்குப் போகச் சொல்கிறீர்களா?''

''வீட்டையே நீ சிறைச்சாலையாக்கி வைத்திருக்கிறாயே''

''அவர் ஜெயிலர் என்பதை நினைவூட்டுகிறீர்களா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறைச்சாலையில் அவருக்கு நல்ல பெயரில்லை. வீட்டில் மட்டும் உனக்கு நல்ல கணவராக வாழ்ந்தால் போதும். எப்படி வாழ்கிறாரோ எனக்குத் தெரியாது."

இருவரும் நெஞ்சங்களை மறைத்து சிரித்துப் பேசிப் பிரிந்தனர்.

'பின்னர்தான் என் கண்கள் கலங்கின' என்று உமா கூறியிருந்தாள். பாலன் கொழும்பில் ஒரு கம்பெனி நிர்வாகப் பகுதியில் வேலை செய்வதாகவும் கூறியிருந்தாள். பத்திரிகை ஒன்றில் கட்டுரைகள், கதைகள் எழுதுவதாகவும் தெரிவித்தாள்.

பாலனைத் தூரத்தில் கண்டு பேசுவதற்காக உமா ஓடுகிறாள். நெருங்கியதும் அவனது கரங்களை பின்புற மாக மடித்து ஜெயிலர் அடிக்கிறான். பாலன் திமிறி விடுபட முயல்கிறான்.

பாலனை விட்டுவிடு என்று கத்தவேண்டும் போல குரல் எழுப்ப முயன்றாள். முடியவில்லை. அப்படியே வியர்வை கொட்ட விழித்து விட்டாள். பொழுது விடிந்து விட்டது.

# 5

அன்று மீனாட்சி கூறிபடியே நடந்தது.

பலர் வந்து பயணம் சொன்னதோடு அரசியல் நிலை களையும் பேசிச் சென்றனர்.

"நீ வெளிநாட்டுக்கு ஓடு நாங்கதான் கஷ்டப்பட வேண்டியிருக்கு."

உமா தன் இரு குழந்தைகள், ஜெயிலரோடு வந்திருந் தாள். பொம்மை போல தன்னை அலங்கரித்திருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவர் அவ்வாறு விரும்புவதாக அவள் முன்னர் கூறியிருந்தாள்.

ஜெயிலர் சித்திராவின் அப்பா அம்மாவோடும் சரளமாகப் பேசினார். உமாவும் தானும் வீட்டில் பெற்றோரை அடிக்கடி வந்து பார்த்துக் கொள்வதாக சித்திராவிடம் உறுதியளித்தார்.

மீனாட்சி கொண்டு வந்த தேநீரை சித்திரா வாங்கிப் பரிமாறினாள்.

மீனாட்சி சொன்னவற்றையே ஜெயிலரும் சொன்னார் அவளது கணவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம் என அவளிடம் கூறி வீட்டை நன்கு கவனிக்க வேண்டும் என்றும் நினைவு படுத்தினார்.

நல்ல நாடகம். சித்திராவும் மீனாட்சியும் உள்ளூற சிரித்தனர்.

தன் கணவன் தோழியின் வீட்டில் எடுக்கும் கவனம் பற்றி உமா பெருமைப்பட்டாள். அவர் உறுதி கூறியபடி அங்கு வரமாட்டார் என நினைத்துக் கொண்டாள்.

சித்திரா உமாவின் நிலைக்காக இரங்கினாள். மீனாட்சி சித்திராவைப் பார்த்துச் சிரித்துக் கொண்டாள்.

சித்திரா கொடுத்த சேலை, சட்டையோடு மீனாட்சி அன்று புதுமையாகவே காட்சியளித்தாள். நீல நிறத்தில் வெள்ளை டிசைன் கலந்த நைலோன் சேலை அவளது கருமை நிறத்தை மறைத்தது. கீழ்ப் பார்வையில் ஜெயிலர் பார்த்து உதட்டைக் கடிப்பதை மீனாட்சி மட்டுமல்ல சித்திராவாலும் காண முடிந்தது.

உமாவைப் பார்க்க மீனாட்சி வெட்கப்பட்டாள்.

சித்திரா உமாவின் குழந்தைகளை அழைத்து சாக்லெட் கொடுத்து நயமாகப் பேசினாள். அவளையும் ஜெயிலர் உற்றுப் பார்ப்பதை அவள் அறியாமலில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துபாயில் வாங்கி வந்த புதிய டிரெஸ்சிங் கவுன் ஒன்றை அவள் அணிந்திருந்தாள். அவளது கவர்ச்சி, உடையோடு ஒப்பிடும்போது மீனாட்சி மிகச் சிறியவளே.

"ஆண்களுக்குப் பெண்களைக் கண்டால் கெடு. உற்றுப் பார்ப்பார்கள். எட்டக் கூடியவர் அழகானவரா, இல்லையா என்றே பார்க்க மாட்டார்கள். வெளி மயக்கத்தில் என்ன வார்த்தையெல்லாம் பேசுவார்கள். பிறகு இப்படியெல்லாம் சொன்னீர்களே என்றால் பொய் என்றும் சொல்லுவார்கள்."

மீனாட்சி இரவு கூறியதும் அவள் நினைவில் வந்தது.

அம்மா வந்து உமாவின் சேலையையும் நகைகளையும் பார்த்துப் பாராட்டினாள். ஜெயிலர் காதிலும் அவை விழுந்தன.

"ஆண்கள் தம் மனைவியரை பொம்மைகளாக்கி விளையாட விரும்புகிறார்கள். சமத்துவமாகவோ மனிதர்களாகவோ அவர்கள் மதிப்பதில்லை."

பாலன் முன்னர் ஒரு தடவை கூறியது சித்திராவின் நினைவில் ஓடியது. உமாவும் மறந்திருக்க மாட்டாள்.

விடைபெற்றுப் புறப்படும்போது சித்திராவிடம் மட்டும் உமா மெல்லிய விரக்திக் குரலில் கூறினாள்:

"இந்த ஆடம்பரமெல்லாம் எனக்குப் பிடிக்காது. அவருக்காக பிடிக்காததெல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது. உங்க அம்மாவின் பாராட்டு ஒன்றே போதும். அதையே இனி சொல்லிக் கொண்டே இருப்பார். என்னை நாலு பேர் புகழ, தான் வைத்திருக்கிறாராம். எல்லாம் வெளி வேஷமும் பகட்டும். நான் நடிக்க வேண்டியிருக்கிறது."

அவர்கள் சென்ற பின்னர் யோகநாதன் வந்து சித்திராவிடம் சொன்னான்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஜெயிலரின் சம்பளமென்ன? கைதிகளுக்கு சிக ரெட்டும் பீடியும் விற்ற பணத்திலைதான் உன் தோழியை உடுத்தி அழகு பார்க்கிறார்போல் தெரியுது. அவனைப் பற்றி நல்ல பேரில்லை. இயக்கத்தவரிடம் மாட்டுப்படப் போகிறான். எங்காவது மாறுதல் எடுத்து ஓடிவிடச் சொல்லு.''

''நீயே சொல்லியிருக்கலாமே.''

''உன் தோழிக்காகத்தான் எச்சரிக்கிறேன். பிறகு நாங்க சொல்லேல்லை என்று மட்டும் சத்தம் போட வேண்டாம்.''

உமாவிற்காக பல வழிகளில் சித்திரா இரங்கியபோதும் அவளால் எதுவும் உதவ முடியவில்லை.

# 6

சித்திரா யோகநாதனின் துணையோடு கொழும்புக்கு பஸ்ஸில் புறப்பட்டாள். ரெயில் பாதைகள் கண்ணி வெடிகளால் தகர்க்கப் பட்டிருந்ததால் ரெயில் வண்டிகள் ஓடவில்லை. பிரயாணம் பாதுகாப்பற்றதாக இருந்த போதும் பயணத்தைத் தள்ளிப் போட முடியாத நிலை.

பிரயாண ஏற்பாடுகளைச் செய்த ஏஜென்சி பயண நாளை முன்கூட்டியே தெரிவித்திருந்தான்.

வழியில் பஸ் நிறுத்தப்பட்டு பல இடங்களில் பயணிகள் இறக்கப் பட்டனர். பெட்டிகள் இடையிடை திறக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது.

அச்சம் நிறைந்த நீண்ட பிரயாணம். ஒரு புறம் இயக்கத்தவர். மறுபுறம் சிங்கள இராணுவம், பொலிசார், இடையில் சிங்கள காடையர், இனவெறியர் பழிவாங்கலாம் என்ற பயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரில் பல கதைகள் பரவியிருந்தன. பொருட்களை, நகைகளை, பணங்களை இழந்தவர்கள் காயமடைந்தோர் கொல்லப் பட்டோர் ஈறான கதைகள்.

வழக்கமாக ஏழு மணி நேரம் எடுக்கும் பிரயாணம் பதினைந்து மணி நேரம் பிடித்தது. கண்ணி வெடியால் தெருக்கள் சீரில்லாததால் வேறு பாதை வழியே பஸ் சுற்றி வரவும் நேரிட்டது.

பம்பலப் பிட்டியில் யோகநாதன் தங்கியிருந்த உறவினர் வீட்டிலேயே சித்திராவும் தங்க நேரிட்டது.

ஏஜென்சி ஏற்பாடு செய்த திகதியை ஒரு வாரம் தள்ளிப் போட்டிருந்தான். அதுவும் சித்திராவிற்கு ஏமாற்ற மாகி விட்டது. மேலும் ஒரு வாரம் வீட்டில் பெற்றாரோடு தங்கியிருக்கலாம் என்றும் அங்கலாய்த்தாள்.

கொழும்பில் வாங்க வேண்டிய சில பொருட்களுக்காக புறக்கோட்டைப் பக்கம் சென்றாள். நாட்டின் நிலைமையை ஒட்டி வெளிநாடு செல்ல ஏராளமான தமிழர்கள் தெருக் களில் சுற்றுவது தெரிந்தது. இளம் பெண்களும் பையன் களும்கூட கவலையையும் துன்பங்களையும் மறந்து கூடிப் பேசிச் சிரித்துச் சென்றனர்.

ஒரு மாலை கொழும்பிலுள்ள காலிமுகத்திடலுக்குச் சென்றபோதும் இக்காட்சிகளைக் கண்டாள். முன்போல அவற்றைத் தவறாக அவள் கருதவில்லை.

சித்திரா படித்த காலத்திலும் பார்க்க சமூகம் எத்தனை மாறுதலடைந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தாள். இனக் கலவரம் சமூகக் கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்திருப்பதை அவளால் காண முடிந்தது. குறை கூறுவாரில்லை. முன்போல நாக்கு வளைப்பாரில்லை.

இளம் பெண்கள் தனியே கொழும்புக்குக்கூட பிரயாணம் செய்வதையும் கண்டாள். அங்கு மட்டுமல்ல ஜெர்மனி, பிரான்சு, கனடா, நார்வே போன்ற நாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் செல்கிறார்கள். அந்நாடுகளுக்கு அசல் போன்று நகல் விசா கொடுக்கும் ஏஜென்சிகள். வழியிலே அகப் பட்டுத் திரும்புவோர், சிறை பிடிக்கப்படுவது, தெண்டம் செலுத்தப் படுவதைப் பற்றி கவலைப்படாது மீண்டும் மற்றொரு விமான மூலம் வேறு பாதையில் பிரயா ணத்தைத் தொடரும் இளம் பெண்களும் வாலிபர்களும்.

ஒரு காலத்தில் கேவலமாகக் கருதப்பட்டவையெல்லாம், பிற நாட்டுள் திருட்டுத்தனமாக நுழைவதெல்லாம் தீரச் செயலாகப் பேசப்பட்டது.

முன்னர் மாதத்தில் நடைபெறும் ஓரிரு கொலைகளை யும் அவை பற்றிய பொலீஸ் விசாரணை வழக்குகளையும் பத்திரிகைகள் பக்கம் பக்கமாக எழுதின. தற்போது நாள் தோறும் நடைபெறும் பல பத்துக் கொலைகளின் தொகை மட்டும் சாதாரணமாக பத்திரிகைகளில் வெளியிடப் பட்டன. பொலீஸ் விசாரணை, வழக்குகள், நீதி மன்ற வாதங்கள் எதையும் காண முடியவில்லை.

பகல் வேளையில் கோட்டைக்கு பஸ்ஸில் செல்லும் போது காலிமுகத்திடலில் காலையிலேயே சோடி சோடி யாக காதலர்கள்; தெருவை மறைப்பதாக குடைகளை விரித்து வைத்துவிட்டு கடலைப் பார்த்து நெருங்கியிருந்து பேசி மகிழ்வதையும் வேடிக்கையாகப் பார்த்தாள்.

துபாயில் நினைக்க முடியாத காட்சிகள். பெண்களின் முகத்தையே பார்க்க முடியாத முக்காடு. பெண்களை உற்றுப் பார்த்தாலே பொலீசாரின் கண்ணில் பட்டால் கைது; கசையடி.

எல்லா இன்பமும் வீட்டுக்குள்ளேயே; நடைமுறைக்கு ஒவ்வாத சட்டங்கள்; யாவும் வீட்டுக்குள்ளேயே மூடி மறைக்கப்படுகின்றன. வெளியே அம்பலமாகும் ஓரிரு சம்பவங்கள் மட்டுமே குரூரமாகத் தண்டிக்கப்பட்டு பிரச்சாரம் செய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிப் பெண்களாக அரபிய நாடுகளுக்குச் செல்பவர் களின் வாழ்க்கை பற்றி அவள் நன்கு அறிவாள். அவற்றைப் பற்றி எவரும் வெளியே பேசுவதில்லை. மர்ம விஷயங்கள். அவற்றைப் பற்றி வெளியே தெரியவரின் அவற்றால் ஏற்படக் கூடிய விபரீதங்களை அனைவரும் அறிவர்.

பாலன் இடையிடை கட்டுரை, கதைகள் எழுதுவதாகக் கூறப்பட்டு சஞ்சிகையை லோகநாதனிடம் நினைவூட்டி அவள் பெற்றிருந்தாள்.

'பெண்ணுரிமை' என வெளிவந்திருந்த நூலொன்றிற்கு அவன் விமர்சனம் எழுதியிருந்தான். அக்கட்டுரையை இரண்டு தடவை படித்தாள். முற்றாகப் புரியாதபோதும் காதல் என்பது வெறும் கருத்தியல், புலவர்களாலும் எழுத்தாளர் சினிமாக்காரராலும் கட்டி எழுதப்பட்ட பொய்மை என சாடியிருந்தான். காதல் என்ற பொய்மை யில் ஏமாளி பெண்களே. பெரும்பாலும் கோழைத்தனமாக தற்கொலை செய்து கொள்கின்றனர். இதற்கெல்லாம் அதைப் புனிதப்படுத்தி பிரச்சாரம் செய்யும் கலைஞர்களே இக்கொலைகளுக்குப் பொறுப்பேற்க வேண்டும். கொடுமை யான தற்கொலைகளை காதல், தியாகம் எனப் பரப்பும் ரோமியோ—யூலியெட், லைலா—மஞ்சு, அம்பிகாபதி— அமராவதி போன்றவற்றைப் பள்ளிகளில் கற்பிப்பதை நிறுத்த வேண்டும் என்றெல்லாம் போர் முரசு கொட்டி யிருந்தான்.

கட்டுரையில் முக்கிய இடம் எனக் கருதியவற்றை சித்திரா தன் மஞ்சள் நிறப் பேனாவால் அடையாள மிட்டாள்.

உமாவின் காதல் தோல்வியால் ஏற்பட்ட விரக்தியில் இப்படி எழுதியிருப்பானோ எனவும் அவளது மனம் ஆராய்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயினும், அவன் முன்னர் தங்களிடம் பேசி வந்தது போன்ற அடிப்படைச் சித்தாந்தம் ஒன்றை வைத்தே இவ்வாறு எழுதுவதென்பதையும் மறுக்க முடியாது. காதல் என்பது பாலுணர்வின் உந்தலால் தற்காலிகமாக பரபரப்பூட்டும் உணர்வு. வாழ்க்கை என்பது அது மட்டுமேயல்ல என்பதுபோல் கூறுவான்.

புராதன சமுதாயத்தில் உயர் நிலையிலிருந்த பெண்ணை வேலைப் பிரிவினையும் தனிச் சொத்துடமையும் பாலுறவுக் கட்டுப்பாடுகளுமே அடிமை நிலைக்குக் கொண்டு வந்தது என்பான்.

அத்து மீறிய பாலுறவால் உற்பத்தி பாதிக்கப்பட்ட வேளை கணக்குழுத் தலைவர்களால் பாலுறவில் கட்டுப்பாடுகள் கொண்டுவரப் பட்டன. அடிமைச் சமூகத்தில் அடிமைப் பெருக்கத்தை நோக்காகக் கொண்டு கட்டுப்படுத்தப்பட்டது. நிலவுடைமையில் ஆணாதிக்க தனிச் சொத்துடைமையுடன் பிணைக்கப்பட்டு குடும்பப் பெண்ணுக்கு மட்டும் கற்பு திணிக்கப்பட்டது.

பாலனின் கருத்துகளை முற்று முழுதாக அவளால் புரிய முடியவில்லை. புரிய முடியாதவையெல்லாம் தவறானவை என அவள் கொள்வதற்குமில்லை. முதலாளித்துவத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தை மட்டும் அவளால் ஓரளவு புரிய முடிந்தது.

"முதலாளித்துவத்தில் உற்பத்திச் சாதனங்கள் வேகமான வளர்ச்சியடைந்ததினாலும் தொழிலாளர்கள் தமது உற்பத்திச் சக்தியின் மதிப்பை உணர்ந்து வேலை நேரங்களில் கட்டுப்பாடுகளை விதித்ததாலும் மேல்நாடுகளில் பாலுறவுக் கட்டுப்பாடுகள் தளர்ச்சியடைந்து வருகின்றன. பெண்களும் தமது பலத்தை உணர்ந்து ஆணாதிக்கத்திலிருந்து விடுதலை பெறப் போராடி வருகின்றனர். முதலாளித்துவ உற்பத்தியை பாலுறவுக் கட்டுப்பாடுகளின் தளர்ச்சி எவ்விதமும் பாதிக்கவில்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும், 'குடும்ப அமைப்பு முதலாளித்துவச் சுரண்டலுக்கு வாய்ப்பளிக்கிறது. அவ்வமைப்பு மூலம் பெண்களின் கூலி இல்லா உழைப்பை சுரண்டக் கூடியதாக இருப்பதால் குடும்ப அமைப்பை அவர்கள் உடைக்க விரும்பவில்லை. மதம் மூலமும் வலியுறுத்துகின்றனர்' என்று அவன் கூறுவதை முற்றாகப் புரிந்துவிட முடியவில்லை. காணும் வேளை விளக்கம் கேட்க வேண்டும்.

பாலனை ஒரு தடவையாவது பயணம் போகுமுன் கண்டு பேச வேண்டும் என்ற அவளின் ஆவல் அதிகரித்தது.

உமா குறிப்பிட்ட கம்பனியை டெலிபோனில் எடுத்து விசாரித்தாள். அன்று வெள்ளிக்கிழமை. அவன் லீவில் இருப்பதாகக் கூறி திங்கட்கிழமையே எதிர்பார்க்கலாம் என்றனர்.

அவனது வீட்டு விலாசத்தை விசாரித்தாள். டெலிபோனில் பேசியவன் சிறிது பொறுக்கும்படி கூறிவிட்டு மற்றொருவனை அழைத்துப் போனைக் கொடுப்பது புரிந்தது.

'நீங்க சி.ஐ.டி. இல்லையே' என்று கேலியாகக் கேட்டுவிட்டு விலாசத்தைச் சொன்னான். பெண் என்றதும் பெரும்பாலான ஆண்கள் உதவ முன்வரும் குறைபாட்டை அவள் நன்கு அறிவாள்.

''ஆண்களின் பலவீனங்களைக் கண்டறிந்து பெண்கள் வெற்றி கொள்ள முன்வர வேண்டும்.''

பாலன் ஒரு தடவை எதற்கோ கூறியது அவள் நினைவில் வந்தது.

பாலன் தங்கியிருந்த வீடு நாலு கிலோ மீட்டர் தூரத்தில் தெகிவளையில் இருந்தது. அவனை வரவழைப்பதிலும் பார்க்க அதிகாலையில் தானே சென்றால் வீட்டில் கண்டு விடலாம் என முடிவு செய்தாள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

மறுநாள் சனி அதிகாலையில் சித்திரா சென்று ஒரு சிங்கள வீட்டில் தனியறையில் பாலனைக் கண்டாள். சாரமும சேட்டுமாக காலைப் பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தான்.

சித்திராவைக் கண்டதும் வியப்போடு வரவேற்று தன் நாற்காலியைத் தந்துவிட்டு அவன் கட்டிலில் உட்கார்ந்தான்.

ஒழுங்கு படுத்தப்பட்ட அழகான அறையாக அது இருக்கவில்லை. நூல்களும் பத்திரிகைகளும் பரவிக் கிடந்தன. மூலையில் ஒரு எலெக்டிக் அடுப்பு. அதன்மேல் அலுமினியப் பாத்திரம். குளியலறை அறையோடு சேர்ந்து இருந்தது.

மேசைமேல் பாதி எழுதிய தாள்கள் கிடந்தன.

இருவரும் சுகம் விசாரித்துக் கொண்டனர். சித்திரா தன் துபாய் பிரயாணம் பற்றிச் சொன்னாள்.

"நீங்க ஏன் இன்னும் கலியாணம் செய்யாது தனி அறையில் இருக்கிறீங்க"

சித்திரா சிரித்தபடி கேட்டபோதும் குரலில் அழுத்தமிருந்தது.

"இதே கேள்வியை நானல்லவா கேட்கவேண்டும்."

"நான் துபாய்க்கு உழைப்பதற்குச் செல்லுகிறேன். நீங்க தனி அறையில் ஏன் இருந்து கஷ்டப்பட வேண்டும்?"

"கஷ்டமா? கலியாணம் பெண்களுக்குத்தான் அவசியமே ஒழிய ஆண்களுக்கல்ல."

"ஏனப்படி? எனக்கும் அவசியமில்லை என்று நான் சொல்லுகிறேன்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வெளி நாட்டில் தற்போது வேலை செய்வதால் சொல்லுறீங்க. வேலையை விட்டு இங்கு வந்த பிறகுதான் அதன் தவிர்க்க முடியாத தேவையை உணருவீங்க.''

''என்ன தேவையை?''

''திருமணமென்பது தொழிலாளி தவிர்க்க முடியா நிலையில் தன் உழைப்புச் சக்தியை விற்க முதலாளியிடம் ஒப்பந்தம் செய்வதுபோல பெண்ணும் விரும்பியோ விரும்பாமலோ ஒரு ஆண் மகனுடன் தவிர்க்க முடியா நிலையில் ஒப்பந்தம் செய்ய நேரிடுகிறது. எங்க சமூகத்தில் இதிலிருந்து தப்பிவிடுவது அத்தனை சுலபமல்ல.''

''ஒருவனுக்குச் சமைத்துப் போட்டுப் பிள்ளைப் பெற்றுக் கொடுத்து அடிமைப் பணிகளும் செய்ய நான் தயாரில்லை.''

சித்திராவின் கூற்று பாலனை ஒரு கணம் வியப்பில் ஆழ்த்தியது.

''உங்க வாய் வீரம் பரவாயில்லையே. நடைமுறையைப் பொறுத்திருந்து பார்ப்பமே.''

''பொறுத்துப் பாருங்கோ''

சித்திராவின் குரலில் அழுத்தம் தொனித்தது.

''எங்க சமூகத்தில் இத்தகைய பிடிவாதம் பிடித்தால் மற்றொரு சுகத்தையும் இழக்க நேரிடும்.''

பாலுறவின்பத்தை மறைமுகமாகச் சுட்டிக்காட்டுகிறார் என்பதை சித்திரா ஊகிக்காமலில்லை.

''அதை எப்படிப் பெறுவது, அனுபவிப்பது என்பதையும் நான் அறிவேன்.''

''உங்க துணிச்சலை நான் வரவேற்கிறேன். பெண்கள் தமது சிறப்புகளை உணர்ந்து தலை நிமிர்ந்து விட்டால் போதும். உலகத்தையே வென்றெடுக்கலாம் என்பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நீங்க வந்ததும் இந்த அறையை நோட்டம் போட்டதை நான் அறிவேன். ஆண்கள் சோம்பேறிகள். என்னையும் சேர்த்தே சொல்லுகிறேன். தேனீக் கூட்டை அமைப்பது, தேன் சேர்ப்பது, பகிர்ந்து உண்பது, மறு உற்பத்தி, யாவையும் கூட்டாக உழைத்து நடாத்துவது பெண் தேனீக்களே. ஒழுங்கமைப்பான ஒரு சோஷலிச கம்யூனிசை சமூகத்தைக் கூட பெண்ணினம் தலையெடுத்துத்தான் கட்டி எழுப்ப முடியும் என நான் எண்ணுகிறேன்.''

''அப்படியா. புதிய சித்தாந்தமாயிருக்கிறது.''

''அது மட்டுமல்ல இன்று பெண் குழந்தை என்று அறிந்ததும் கருவிலே கொல்ல முயலுகிறார்கள். பெண்கள் தலையெடுத்த சமூகம் வரும்போது ஆண்களை அவர்கள் கருவிலேயே சிதைத்தும் விடலாம்.''

''அப்போது இன விருத்தி?''

''தேனீக்கள் இன விருத்திக்காக ஆண் தேனீக்களை வளர்ப்பது போல பெண்களும் வளர்க்கலாம்''—கூறிவிட்டு பாலன் சிரித்தான்.

பாலன் தன் புதிய சித்தாந்தங்களையெல்லாம் அவளிடம் சிரித்தபடியே கூறினான். அவனோடு தர்க்கம் பேசி வெல்லமுடியாது.

''உங்கள் அறிவுரை ஒன்றும் உமாவிற்கு பயன்படாது போய் விட்டது. அவள் பாதுகாப்புத் தேடிப்போய் ஜெயிலர் ஒருவரிடம் மாட்டுப்பட்டு விட்டாள்.''

''அவளைச் சொல்லி என்ன. எல்லாப் பெண்களுமே இப்படியான அடிமை ஒப்பந்தத்தில் மாட்டுப்பட்டு துன்ப வாழ்க்கை வாழ நேரிட்டு விடுகிறது. இன்றைய சமுதாயத்தில்...''

''இதற்கு விடியவேயில்லையா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏனில்லை. முற்று முழுதான பெண்களின் விடுதலை என்பது நீண்டகாலமெடுக்கலாம். முதலில் உணர்வு பெற்ற பெண்களாவது தமக்கு ஆதரவு காட்டக்கூடிய ஆணாதிக்க வெறியில்லாதவர்களுடன் ஒன்றிணைந்து முன்னேற முயலவேண்டும். இல்லாவிடின் உமாவின் முடிவுதான் எல்லோருக்கும்.''

தன்னைவிட்டு உமா ஜெயிலரைக் கட்டிய தவறை அவனே அறியாது சுட்டிக்காட்டுவதுபோல் அவன் கூற்று இருந்தது.

இவர் வீரம் பேசுகிறார். உமாவின் தோல்வியால்தான் திருமணம் வேண்டாம் எனத் தனிமை வாழ்க்கை பற்றிப் பேசுகிறாரோ எனவும் சித்திரா சிந்தித்தாள்.

''எங்க சமூகமெல்லாம் ஒருபுறம் போராட்டமாகவும் மறு பக்கம் சிதறி நாலா பக்கமும் அந்நிய நாடு நோக்கி ஓடுவதாகவும் இருக்கிறது. நீங்க எந்தக் கட்சியில் நின்று வேலை செய்கிறீர்கள்?'

சித்திரா பேச்சாடலை அரசியல் பக்கமாகத் திருப்பினாள்.

''என்னிடம் இயக்கமுமில்லை. போராடும் ஆயுதமுமில்லை. சோஷலிசத்தைக் கட்டுவதன் மூலம் பிரச்சனைகளைத் தீர்த்து விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருந்தோம். எல்லாவற்றிற்கும் காலம் கடந்து விட்டது.''

''உங்க பேச்சில் சோர்வு தட்டுகிறது. இதற்கு முடிவேயில்லையா?''

''பொருளாதார வளர்ச்சியில் பெரிய தேக்கம். படித்த வேலையில்லாத் திண்டாட்டம் பூதாகாரமாக வளர்ந்து விட்டது. சிங்கள இனம், மொழியோடு பௌத்த மதமும் இரண்டறக் கலந்திருப்பதால் இலங்கை பூராவும் தமது சிங்கள-பௌத்த நிலம் என கருத்தியலாகி அவர்களை ஆட்டிப் படைக்கிறது. தமிழர் வாழும் நிலத்தையும் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த நிலமாக அவர்கள் எண்ணிக் கொண்டிருக் கிறார்கள். இந்த நிலை மாறி நாட்டில் அமைதி ஏற்பட நீண்ட காலமாகலாம். அதற்கிடையில் ஏற்படும் உயிர், உடைமை அழிவைக் கட்டி எழுப்ப மேலும் பல காலமாகலாம்.''

நீண்ட ஆயுளைக் கணக்கிட்டு ஆருடம் சொல்பவன் போல அவனது பேச்சு இருந்தது.

பாலன் தன் மின் அடுப்பில் தேநீர் தயாரித்துக் கொடுத்தான்.

''சாப்பாடெல்லாம் நீங்களே ஆக்குகிறீர்களா?''

''அதெற்கெல்லாம் நேரம் கிடையாது. வெளியே சாப்பிட்டுக் கொள்ளுவேன்.''

''அதற்கெல்லாம் கலியாணம் செய்து ஒரு அடிமையை வீட்டில் வைத்திருக்க உங்களுக்குத் தெரியேல்லை.''

சித்திரா நளினமாகவே கூறினாள்.

''கூலி கொடுக்காத அடிமையை வீட்டில் வைத்திருப்பது கூட எத்தனை தொல்லை என்பதை நானறிவேன்''

''எத்தனை கலியாணம் செய்து அறிந்தீர்கள்?''

''அதற்கு கலியாணம் செய்ய வேண்டுமா? எல்லாக் குடும்பத்திலும் தானே பார்க்கிறேனே. அமைதியான குடும்பம் ஒன்றையும் என்னால் காண முடியவில்லை. உழைப்புச் சுரண்டப்படும் இடமெல்லாம் பகைமை உறவே நீடிக்கும் என்பது விஞ்ஞான ரீதியான முடிவு. அதனால் தான் குடும்பங்களியெல்லாம் எசமான்—அடிமைப் போராட்டமே நடந்து கொண்டிருக்கிறது.''

''தண்ணீருக்குள் இறங்காதே தத்துவம் பேசுகிறீர்கள்''

''இது அனுபவ வாதம் என்பது மட்டுமல்ல. விஞ்ஞான பூர்வ சித்தாந்த உண்மை''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பல விஷயங்கள் பேச்சில் அடிபட்டன. அவனுடன் நாள் பூராவும் பேசிக் கொண்டிருக்கலாம் போலத் தெரிந்தது. நேரமாகிக் கொண்டிருந்தது. பத்து மணிக்கு ஒரு கலந்துரையாடலுக்கு அவன் போக வேண்டியிருந்தது.

அவனைக் கண்டு பேசிய திருப்தியோடு விடை பெற்றாள். அவள் பயணம் புறப்படுமுன் தான் வந்து பார்ப்பதாக பாலன் கூறி அவளது முகவரியையும் பெற்றுக் கொண்டான்.

## 8

வீடு சேர்ந்ததும் நடைபெற்ற பேச்சுகளின் சுருக்கத்தை தம்பியார் யோகநாதனிடம் சித்திரா கூறினாள். அவனது கருத்துகளை அவள் புகழ்ந்து கொண்டிருந்தாள்.

அவனது கட்டுரை, கதைகள் வரும் இதழ்களை தனக்குத் தவறாது அனுப்பி விடும்படி தம்பியிடம் வேண்டினாள்.

"உங்க பேச்சுகளைப் பார்த்து என்னால் ஒரு விஷயத்தை ஊகிக்க முடிகிறது."

உள்ளூறச் சிரித்தபடி யோகநாதன் கூறினான்.

"என்னத்தைத் தான் கண்டாய்"

"உங்களுக்கு பாலன்மேல் காதல்"

மீண்டும் சிரித்தபடியே சொன்னான்.

"உமா தான் அவனைக் காதலித்தாள். அவனும் நேசித்தான். எனக்கும் காதல் இருக்கலாம். அதில் என்ன தவறு. காதலிலும் பார்க்க அவன்மேல் அதிக மதிப்பு இருக்கிறது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அப்பொழுது அவனை நீ கலியாணம் கட்டுகிறது தானே ''

''கலியாணம் என்பது வேறு விஷயம். பெரிய விஷயம். குடும்பம் என்ற கூடு அமைக்கிற விஷயம். நீ நினைப்பது போல அத்தனை எளிதாகச் செய்துவிட முடியாது. நானே தற்போது அதற்குத் தயாரில்லை. துபாய்க்குப் போகிறேன். அவன்கூட திருமணம் அவசியமில்லை என்றே இன்றும் சொன்னான்.''

''ஓ எல்லாம் கேட்டுப் பார்த்து விட்டாயா?''

''நான் எப்படிக் கேட்பேன். சும்மா பேச்சுவாக்கில் சொன்னான்.''

''நான் கேட்டுப் பார்க்கட்டா.''

''நான் கலியாணம் கட்ட வேணுமென்றால் நானே கேட்பேனே. எனக்குத் தரகர் ஒருவரும் வேண்டாம்.''

''இந்த வீட்டு மாமா மாமி மற்றும் காணும் நண்பர்களெல்லாம் உன் கலியாணத்தைப் பற்றியே கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்ன பதில்தான் சொல்லுறது.''

''அவர்களே என்னைக் கேட்டு பதில் சொல்லி விட்டேன். மாமா வேலையிலிருந்து ஓய்வு பெற்றபின் என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்கிறார். என்னை வைத்தே கலியாணத் தரகர் வேலை பார்க்கலாம் என்று நினைக்கிறார்.''

''அவர் தனது ஏ பி சி டி ஈ எப் எச் வாய்பாடு பற்றி உங்களுக்குச் சொல்லவில்லையா?''

''இல்லையே. அது என்ன?''

''சாதகப் பொருத்தத்தோடு **Age, Beauty, Caste, Dowry, Education, Family** ஆகியவற்றையும் ஒத்துப் பார்த்து ஏதாவது சரிவராதிருந்தால் **Dowry**-யை கூட்டிக் குறைத்து சரிப் பண்ணி விடலாமாம்.''

கூ—4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நல்ல வாய்பாடுதான். அப்படியென்றால்...''

''உங்களுக்கு அழகிருக்கிறது. மாப்பிளை குறைவா யிருந்தால் சீதனத்தைக் குறைத்து விடலாம் என்பார்.''

''எனக்கு இத்தனை காலமும் இந்த வேடிக்கையான வாய்பாடு தெரியாது போய் விட்டதே.''

சிரித்தபடியே சித்திரா சொன்னாள்.

''தமிழரிலுள்ள வாலிபரெல்லாம் வெளிநாடு போய் விட்டார்கள். மற்றவர்கள் இயக்கங்களில் சேர்ந்துவிட்டனர். வேலையிலுள்ள மாப்பிளைகளுக்கு நல்ல கிராக்கி. போதிய சீதனம் கேட்கலாம் என்றும் சொல்லுவார்''

''அதுவும் உண்மைதான்.''

''கலியாணம் கட்டும் வயதிலுள்ள வாலிபர்களை அறிமுகம் செய்து வைக்கும் படியும் என்னிடம் சொல்லு கிறார். பாலன் வந்தால் அவரையும் அறிமுகப்படுத்தி வைக்கப் போகிறேன்.''

''நல்லாய்த்தானிருக்கும். இவர் சாதகம் கேட்பார். அவன் சிரிப்பான்''

''உங்களுக்குப் பேசும் படியும் சொல்லிப் பார்ப்பனே.''

''உனக்கு வேறு வேலையில்லை. நடைமுறைக்குச் சாத்தியமில்லாதவை பற்றிப் பேசப்படாது''

சித்திரா கண்டிப்பான குரலில் சொன்னாள்.

சித்திரா கொழும்பில் தங்கியிருப்பதை அறிந்து ஊரவர்கள், உறவினர்கள், நண்பர்கள் என பலர் வந்து போய்க் கொண்டிருந்தனர்.

சிலர் துபாயில் வேலை கேட்டனர், வேறு சிலர் அவளது கலியாணம் பற்றி விசாரித்தனர் ஒரு சிலர் பண உதவி, கடன் வேண்டினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளோடு பிரயாணம் செய்ய வேண்டிய சிங்கள, முஸ்லிம் பணிப் பெண்களையும் அவள் கண்டு பேசினாள். முன்னர் பழக்கமாயிருந்த ஒரு சிலர் வந்து பார்த்துச் சென்றனர். அவர்களது ஆடம்பரத்தையும் அலங்காரத்தையும் பார்த்து யோகநாதன் கிண்டல் செய்தான்.

''விமானத்தில் செல்லும் நவீன கூலிப் படைகள்'' சித்திரா கேட்கத் தக்கதாக கேலி செய்தான்.

''என்னையும் சேர்த்துத்தான் சொல்லுகிறாயா?''

''நீதானே தலைவி. நீங்களெல்லாம் ஏன் அந்த வனாந்தரத்திற்குச் செல்லுகிறீர்கள்? உங்கள் உழைப்பைச் சுரண்டிச் சீவிப்பவர் யார் என்றெல்லாம் நீங்கள் அறிவதில்லை.''

''நீ மட்டும் அறிவாயாக்கும்''

''வேலை தேடித்தரும் ஏஜென்சி தரகர்கள், விமான சேவை நடத்துபவர்கள் நேரடியாகச் சுரண்டுகிறார்கள். நாள் பூராவும் வேலை வாங்கி எசமான்கள் சுரண்டுகிறார்கள். எஞ்சிக் கிடைப்பதை யப்பான்காரனும் அமெரிக்கனும் நவீன நுகர் பண்டங்களை விற்றுச் சுரண்டுகிறார்கள். அதற்காகவே பிறந்து உழைக்கிறீர்கள். அதற்கு மேலாக அவர்களது ஒழுக்கத்தை......''

யோகநாதனை மேலும் தொடர்ந்து பேசவிடாது சித்திரா சினத்தோடு சொன்னாள்:

''பாலன் போலவே உழைப்பைச் சுரண்டுவது பற்றியே நீயும் பேசுகிறாய். கிராமங்களில் சாதி, சமயம், கற்பு என்றெல்லாம் பேசி அடக்கி ஒடுக்கி வைத்திருக்கும் பெண்களையெல்லாம் கூலிச் சந்தைக் கென்றாவது இழுத்து வருகிறார்களே. அது எல்லாம் முன்னேற்றமில்லையா?''

''அதை நான் மறுக்கவில்லை. எசமான்மார் இப்பணிப் பெண்களை தங்களது......''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நீ என்ன சொல்ல வருகிறாய் என்று எனக்குத் தெரிகிறது. பெண்களும் உடன்படாமல் எதுவும்நடக்காது. இங்கே வீடுகளில் வேலை செய்யும் பெண்களெல்லாம் வீட்டுக்காரரோடு...''

யோகநாதனை இடைமறித்துப் பேசிய சித்திராவை அவன் இடைநிறுத்திச் சொன்னான்.

''இங்கே உள்ள சமூகத்தின் பண்பாட்டு நிலை வேறு அங்கே வேறு...''

''அங்கே பெண்கள் மதத்தாலும் சமூகத்தாலும் மேலும் அடிமைப் படுத்தி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறலாம். ஆனாலும் உலக நுகர் பண்டங்களும் பணமும் அங்கே தாக்கம் ஏற்படுத்திக் கொண்டே இருக்கின்றன. பணிப்பெண்ணாகப் போன போதும் இவர்களது சுதந்திரமும் அப்பெண்களைப் பாதிக்கவே செய்கிறது.''

''பாலியல் சுரண்டல் இல்லையென்று சொல்லுகிறாயா?''

''இங்கே மட்டும் முற்றாக இல்லை என்று நிரூபிப்பாயா? அங்கே சிறிது கூடியளவாக இருக்கலாம். பெண்களும் எல்லா மனித உணர்வும் கொண்டமனிதர்கள் தான். சுகத்திற்காக அல்லது பணத்திற்காக உடன்படலாம். இதில் என்ன தவறு? இன்பத்திற்கும் குழந்தைக்கும் இன்று ஒரு தொடர்புமில்லை. கருத்தடைச் சாதனங்கள் பலவுண்டு. பணத்தோடும் நுகர் பண்டத்தோடும் திரும்பும் பணிப் பெண்களைக் கட்ட சிங்கள வாலிபர்கள் போட்டி போடுகிறார்கள். ஒரு பெண்ணின் கற்பொழுக்கத்தை யார் எங்கே தேடிக் காணப் போகிறார்கள்? கற்பு என்பதெல்லாம் வெறும் கற்பனை. இலக்கியத்திலும் சினிமாவிலும் தான் வாழ்கிறது. சினிமா உலகத்திலும் இல்லை. அங்கே விதவையில்லை. விவாகரத்து இரண்டாம் மூன்றாம் திருமணம் நடைபெறுகிறது. நாமெல்லாம் வெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்மையிலே எம்மை ஏமாற்றி வாழ்ந்து கொண்டிருக்கிறோம்''. சித்திரா தீவிரமாகவே பேசினாள்.

''ஓ நீ இவ்வளவெல்லாம் பேச வந்து விட்டாயா. இனிமேல் உனக்கு கலியாணம் பேசுவதே ஆபத்து. நீ விரும்பிய வேளை விரும்பிய மாப்பிளையைப் பிடித்துக் கொள்.''

''அது எனக்குத் தெரியும்.''

சித்திராவின் உறுதியான குரல்.

''நீ கலியாணம் செய்து ஒரு பேரப் பிள்ளையை பெத்துத் தருவாய் என்று அம்மா கனவு கண்டு கொண்டிருக்கிறா. நீ என்னவென்றால்...''

''கலியாணத்திற்கும் பிள்ளைப் பெறுவதற்கும் என்ன தொடர்பு? எனக்குப் பிள்ளை வேணுமென்றால் தெருவிலே போகிற எந்த வாலிபனோ, கிழவனோ கூடத் தயாராக இருப்பாங்க. நான் விரும்பினவனைக் கூப்பிட்டே என்னைச் சினைப் படுத்த முடியும். அது என் பிள்ளையாகவும் இருக்கும். என் கருவில் சுமந்து, இரத்தத்தைச் சிந்திப் பெற்று, இரத்தத்தைப் பாலாக்கிக் கொடுத்து வளர்க்கும் பிள்ளையை மற்றொருவன் உரிமை பேசவிட மாட்டேன்.''

''ஓ நீ அவ்வளவு முற்போக்காகப் பேச முன்வந்து விட்டாயா? நடை முறையில்தான் எல்லாவற்றையும் பொறுத்துப் பார்க்க வேண்டும்''

யோகநாதனே அவளது பேச்சையும் தர்க்க நியாயத்தையும் கேட்டு வியப்படைந்தான். இவள் எங்கோ படித்ததையோ, கேட்டதையோ துணிச்சலோடு அலட்டுகிறாள் என்று எண்ணிக் கொண்டான்.

''நீ கலியாணம் பேச வேண்டாம். பொறுத்துப்பார்.''

சித்திரா சபதம் எடுப்பதுபோல அழுத்திச் சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெண்கள் தமது பெருமையையும் சிறப்பையும் உயர்வையும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஆண்களால் ஒரு குழந்தையைப் பெற்று வளர்க்க முடியாது. தனித்து இன்பம் தேட முடியாது. அதனால்தான் பெண்களைப் பார்த்துப் பல்லைக் காட்டித் திரிகிறார்கள்."

பாலன் எங்கோ படித்துக் கூறிய கருத்தும் அவளது நினைவிலி மனதில் பதிந்திருந்து, தம்பியாருக்கு தக்க பதில் கூற அக்கருத்துப் பயன்பட்டதை எண்ணி மகிழ்ந்தாள்.

# 9

பயணத்தின் முதல் நாள் பாலன் சித்திராவைப் பார்க்க வந்திருந்தான்.

யோகநாதனும் அவனை நீண்ட காலத்தின்பின் அன்றுதான் பார்க்க முடிந்தது.

"அக்கா இப்பொழுதெல்லாம் உங்கள் எழுத்துகளைத் தேடிப் படிக்கிறா. இனிமேலும் எழுதுவதையெல்லாம் துபாய்க்கு அனுப்பச் சொல்லி இருக்கிறா. நீங்கதான் அவளின் குருபோலத் தெரிகிறது."

யோகநாதன் ஓரளவு நளினமாகவே சொன்னான்.

"நல்லது. எனக்கு ஒரு சிஷ்யன் கிடைக்கவில்லை. சிஷ்யையாவது கிடைத்தது வெற்றியே."

"அறிஞர்கள் அடக்கமாகவே பேசுவார்களாம்."

சித்திரா குறுக்கிட்டுச் சொன்னாள்.

"நான் பெரிய அறிஞனில்லை. நான் சொல்லுபவை, எழுதுபவை எல்லாமே என் சொந்தக் கருத்துகளில்லை. வேறு பல விஞ்ஞான பூர்வமான சிந்தனையாளர்களைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கிறேன். அவற்றையும் சிந்தித்து எழுதுகிறேன்; பிறருக்கும் கூற முயலுகிறேன்.''

"அவையெல்லாம் புதிய கருத்துகளாக இருக்கின்றன. நடைமுறைப் பிரச்சனை தான் இருக்கிறது.''

''அது உண்மைதான். சூரியன் கிழக்கே உதிக்கிறது என்று குழந்தைகளுக்குச் சொல்லி ஏமாற்றிக் கொண்டிருக்கலாம். விஞ்ஞானம் படிக்கத் தொடங்கிய பிள்ளைகளை ஏமாற்றிவிட முடியாது. ஆனாலும் நாங்கள் எல்லோருக்கும் பழங்கதைகளையே கூறிக் கொண்டிருக்கிறோம். அவற்றுள் மறைந்துள்ள துல்லியமான உண்மைகளைக் கூறி விடுவதில்லை. சரி என்று கூறினாலும் கடைப்பிடிக்கத் தயங்குகிறார்கள்.''

''அது ஏன்?''

சித்திராவிற்கு அதன் பதில் அவசியமாகத் தேவைப்பட்டது. அவள் யோகநாதனிடம் பேசிய வீரங்களை நடைமுறைப் படுத்துவதிலுள்ள சிரமங்களை அவளே அறியாமலில்லை.

''சமுதாயம் வளர்ச்சியடையாததே. உற்பத்தி உறவுகள் வளர்ச்சியடையவே சமுதாயமும் வளர்ச்சியடைந்து விஞ்ஞான உண்மைகளுக்கு வழி வகுக்கும். முன்னேறிய நுகர் பண்டங்களை நாம் பயன்படுத்தும்போது சிந்தனை நிலப்பிரபுத்துவ காலத்திலேயே சாதி, மதம், இன, நிற, பால்பேதப் பிரிவுகளிலேயே நிற்கிறது. ஆயினும் இவையெல்லாம் சிறிது சிறிதாக உடையத் தொடங்குவதையும் காணலாம். மிகவும் முன்னேறிய நுகர் பண்டங்களை வாங்குவதற்காக உங்களைப் போன்ற பெண்கள் அராபிய நாடுகளுக்குச் சென்று உழைப்பை விற்க நேரிடுகிறது. அதையொட்டி இத்துவரும் பழைய பல கட்டுப்பாடுகள் பண்பாடுகளெல்லாம் உடைக்கப் படுகின்றன. என்ன கூறினும் நாம் வளர்ச்சிப் போக்கிலேயே போய்க் கொண்டிருக்கிறோம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரா மட்டுமல்ல யோகநாதனும் அவனுடைய கருத்துகளை ஆவலோடு கேட்டுக் கொண்டிருந்தான்.

யோகநாதன் உள்ளே சென்று மாமனாரை அழைத்து வந்தான். பாலனை, 'கம்பனி நிர்வாகத்தில் பணி புரிபவர், திருமணச் சந்தையில் நிற்பவர்' என அறிமுகம் செய்தான். பாலன் உள்ளூறச் சிரித்துக் கொண்டான்.

மாமனார் பாலனின் கம்பனிப் பெயர், சம்பளம், குடும்பம் ஆகியவற்றை மறைமுகமாக விசாரித்து விட்டு, 'ஐந்து லட்சம் கூட ரொக்கம் வாங்கலாம்! கொழும்பில் வீடு வளவு வேறு' என சந்தை நிலையை மதிப்பிட்டார்.

சித்திரா அவரது அநாவசிய ஆராய்ச்சியை திசை திருப்ப முயன்றாள்.

''மாமா, அவர் ஒரு இலட்சியவாதி. ஒரு குறைந்த சாதி ஏழைப் பெண்ணைக் காதலிக்கிறார். அதையே கட்டப் போகிறார். அவருக்கு வீணாக நீங்க கலியாணம் பேசுவதில் பயனில்லை.''

''உங்கள் நிலைக்காக நான் பரிதாபப்படுகிறேன். உங்களுக்குக் கிடைக்கக்கூடிய நல்ல வாய்ப்புகளையும் எதிர் காலத்தையும் விட்டு விட்டு காதல், கீதல் என்று மாட்டுப் பட்டு வாழ்க்கையைப் பாழாக்கப் போகிறீர்கள்''

மாமா பாலனைப் பார்த்துக் கூறியதை அவனும் சிரத்தையோடு கேட்டு உள்ளூறச் சிரித்துக் கொண்டான். 'காதல், கீதல்' என அனுபவ மூலம் அவர் கூறியதிலுள்ள யதார்த்த உண்மையை அவனால் புரிந்து கொள்ள முடிந்தது.

''நீங்க எங்கே வேலை செய்தீர்கள்? ஓய்வு பெற்று விட்டீர்களா?''

பாலன் அவரிடம் வினவினான்.

மாமனார் மாணிக்கம் தான் வேலை செய்த வெள்ளைக் காரன் கம்பனி, வேலை செய்த காலத்தில் கம்பனிக்காகச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த வீர, தீரச் செயல்கள் யாவையும் அவர்களுக்குச் சலிப்பு ஏற்படும்படி கூறி ஓய்வு பெற்று வீட்டோடு இருக்கும் நிலையையும் தெரிவித்தார்.

''வேலையில்லாது இருப்பது அவருக்குக் கஷ்டமாக இருக்கிறது. கலியாணத் தரகு வேலையாவது செய்து பொழுதுபோக்கலாமோ என்று பார்க்கிறார்.''

யோகநாதன் அவருடைய ஆற்றா நிலையை சுருக்க மாகக் கூறினான்.

''அங்கிள், நீங்க ஒரு முக்கிய உண்மையை அறிந்து கொள்ளாது விட்டு விட்டீர்கள். அதனால் தான் இன்று அமைதியும் மகிழ்ச்சியுமடைய வேண்டிய காலத்தைத் துன்பமயமானதாகக் கருதுகிறீங்க''

''தம்பி, என்ன சொல்ல வாறீங்க''

மாமனார் மாணிக்கம் ஆவலோடு கேட்டார்.

''அங்கிள், நீங்க இதுவரை காலமும் உங்களுக்காக உழைக்கவில்லை. உங்க கம்பனிக்காரங்கள் வசதியாக வாழ்வதற்காகவே உழைத்தீர்கள். கம்பனி உங்க உழைப் போடு வளர்ந்ததோடு இன்று வளர்ந்தும் இருப்பதென்றால் முதலாளிகள் மேலும் சிறப்பாக வாழுகிறார்கள் என்பது தான். 'வயதாகி விட்டது இனிமேல் உங்கள் உழைப்பு தேவையில்லை, அதிக பயன் தராது' என அவர்களே உங்களை ரிட்டயராக்கி விட்டார்கள். நீங்க சோர்வடைய நியாயமில்லை. சந்தோஷப்பட வேண்டும். இனிமேல் தான் நீங்க உங்களுக்காக வாழ வேண்டும். அதை நீங்க முன் னரேயே திட்டமிட்டிருக்க வேண்டும். அதனாலேதான் இன்று வீணாகக் கவலைப்படுகிறீங்க. முதுமையிலும் மற்ற வர்க்கு உழைக்கும் எண்ணத்தை விட்டு விட்டு ஓய்வாக, அமைதியாக வாழப் பழகுங்கள். உங்களுக்குப் பிடித்த பொழுது போக்குகளில் ஈடுபட்டு சந்தோஷமாக வாழுங்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலன் அமைதியாக அவருக்கு அறிவுரை கூறினான். அவனது கூற்றில் உண்மை இருப்பதை அவரால் ஓரளவு உணர முடிந்தது. உழைப்புச் சக்தியை விற்று உபரி அபகரிக்கப்பட்டு ஓடாய் தேய்ந்த உண்மைகளை அவரால் அறிய முடியவில்லை. அவர் புரியுமளவிற்கு அவற்றை சுருக்கமாக விளக்குவதிலுள்ள சிரமத்தையும் அவன் அறிவான்.

"கம்பெனி ஓய்வூதியப் பணம் கொடுத்திருந்தான்......" யோகநாதன் இடையிட்டுக் கூறினான்.

"அது இவர் கம்பனிக்காக உழைத்ததில் ஒரு சிறு பகுதியே. பெரும் பகுதியாவையும் கம்பனியே பறித்தெடுத்து விட்டது. அல்லது இத்தனை பெரிதாக கம்பனி வளர்ந்திருக்க முடியாது. இனிமேல் இவரது முதுமை உழைப்பு கம்பனிக்குப் பயன்படாது. கம்பனி இவரது மகனை அல்லது இன்னொரு வாலிபனை கூலிச் சந்தையிலிருந்து தேர்ந்து உழைப்புச் சக்தியை குறைந்த விலையில் கம்பனி வாங்கிக் கொள்ளும்"

பாலன் மேலும் விளக்கமளித்தான்.

"நாமெல்லாம் மற்றவர்களுக்கு எங்கள் உழைப்புச் சக்தியை விற்கும் கூலி அடிமைகள், அதற்காகவே பிறந்திருக்கிறோம், என்று மறைமுகமாகச் சொல்லுகிறீர்கள். அப்படித்தானே"

யோகநாதன் இடையிட்டுக் கேட்டான்.

"ஆமாம். மற்றவர்கள் என்று கூற முடியாது. உற்பத்திச் சாதனங்களைக் கொண்டவர்களுக்கு என்று சொல்ல வேண்டும்."

பாலன் யோகநாதனின் கூற்றைத் திருத்திக் கூறினான்.

"நீங்களெல்லாம் கடுங்கோட்பாட்டாளராகத் தெரிகிறது". யோகநாதன் சொன்னான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்திலேயே மனித வாழ்க்கையையும் பார்க்கிறோம். கருத்தியில்கள் உணர்வு நிலையைக் கட்டுப்படுத்துகின்றன. கருத்து முதல் வாதப் பார்வையில், நாங்கள் கூறுவது தவறாகத் தோன்ற லாம். பூர்ஷ்வா வர்க்கம் அனைவருக்கும் ஆத்மா உண்டு, அனைவரும் சமம், சுதந்திர மனிதர் என்று கற்பனை உறவுகளையே காட்டிப் பேசி ஏமாற்றுகிறது. உலகை விஞ்ஞானக் கண்ணோட்டத்தில், இயக்கவியல் பொருள் முதல் வாதக் கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும். அப்பார்வையாக இன்று எல்லோராலும் மனித இனத்தைப் பார்க்க முடிவதில்லை."

பாலன் கூறியவை யாவையும் யோகநாதனால் கிரகிக்க முடியவில்லை,

"அக்கா போன பின்னர் நான் உங்களை வந்து பார்ப்பேன். எளிதாக இவற்றைப் படிக்கக் கூடிய புத்தகங்கள் இருந்தால் தந்துதவுங்கள்."

யோகநாதன் கூறியதற்கு பாலன் புன்னகை வரவழைத்து தலையசைத்து மகிழ்ச்சியும் தெரிவித்தான்.

பாலன் வாழ்த்துக் கூறி விடை பெற்றுச் செல்லும் போது சித்திரா நயமாகச் சொன்னாள்:

"உமாவைமுற்றாக ஒதுக்கி விடாதீர்கள். ஊருக்குச் செல்லும் போதெல்லாம் பார்க்க மறக்க வேண்டாம்."

யோகநாதன் விமான நிலையத்திற்குச் சென்று சித்திராவைப் பயணமனுப்பினான். வேறும் பல சிங்கள, முஸ்லிம் பெண்கள் அதே விமானத்தில் சென்றனர். சிலர் திருமணமானவர். திரும்பும்போது அவனது வானில் இரு பெண்களையும் ஒரு குழந்தையும் ஏற்றிவந்தான். அக்குழந்தை 'அம்மே அம்மே' என்று சிங்களத்திலும் ஏதோ சொல்லி அழுது வந்தது. முன்சீட்டில் இருந்த யோகநாதன் சிங்களம் நன்கு தெரிந்த டிரைவரைக் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏன் அந்தக் குழந்தை அம்மே அம்மே என்று அழுகிறது?''

''பிள்ளையின் அம்மா இதே விமானத்தில் துபாய்க்குப் போகிறாள்''

# 10

சித்திரா துபாய்க்குச் சென்ற பின் இலங்கை அரசியலில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டன.

இயக்கங்களின் தமிழீழப் போராட்டத்தை ஒடுக்க அரசு புதிய கட்டுப்பாடுகளை ஏற்படுத்தி தாக்குதல்களையும் தீவிரப்படுத்தியது.

யாழ்ப்பாணகுடா நாட்டுக்குள் உணவுப் பொருட்கள், எண்ணெய் முதலிய அத்தியாவசிய பண்டங்கள் எடுத்துச் செல்வது 1987 ஜனவரியிலிருந்து தடைப்பட்டது.

அது தவிர, யாழ்ப்பாண குடா நாட்டின் கிழக்குப் பகுதியாக இருந்த வடமராட்சிப் பகுதியை நாலாயிரம் இராணுவத்தினர், டாங்குகள், கவச வண்டிகளுடன் விமானப்படைப் பாதுகாப்புடன் தாக்கினர். தலைமை தாங்கிய இயக்கம் தாக்குப் பிடிக்க முடியாது தற்காலீக தந்திரோபாயமாகப் பின் வாங்கியது என்றனர்.

இந்திய அரசு உணவு, எரிபொருள் கட்டுப்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தது.

அது பற்றி இலங்கை அரசு கவலைப்படாதது கண்டு ஜூன் முதல் வாரத்தில் படகுகள் மூலம் யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருட்களை அனுப்பியது. அம்முயற்சியை இலங்கை அரசு தடுத்ததும் மறுநாள் விமானம் மூலம் அவற்றை யாழ்ப்பாணக் கிராமங்களிடை போட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை அரசு இச்செயலைக் கண்டித்த போதும் இந்தியாவுடன் சமரசப் பேச்சுகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையில் அரசுத் தலைவர்களால் அமைதி ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தம் ஒன்று 1987 ஜூலை 29ல் கைச்சாத்திடப்பட்டது. இவ் ஒப்பந்தத்தை சிங்கள மக்கள் எதிர்த்தனர். ஜே. வி. பி. என்ற சிங்கள இளைஞர்களின் இயக்கம் மீண்டும் வலுப் பெறத் தொடங்கியது.

அமைதியை நிலை நாட்ட இந்திய அமைதிப்படையை வடகிழக்குப் பகுதிக்கு வரவழைப்பதற்கு அனுமதியும் வழங்கப்பட்டது.

விடுதலைப்புலிகள் இயக்கத்திடம் வடகிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகத்தின் பெரும்பான்மை பலம் வழங்குவதற்கேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆயினும் இம்முயற்சி முற்றுப் பெறவில்லை.

இந்திய அமைதிப்படை விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைப் பறிக்கும் முயற்சியில் ஈடுபட்டு தொடர்ந்த போராட்டத்தில் தமிழர் பகுதிகள் மீண்டும் மோசமாகப் பாதிக்கப்பட்டன.

யாழ்ப்பாண உணவு, எரி பொருள் தடையின் முன்னரேயே யாழ்ப்பாண சிறைச்சாலையில் எஞ்சியிருந்த கைதிகள் கொழும்புக்கு மாற்றப்பட்டனர். ஜெயிலர் சிவநாதனும் கொழும்பு வெலிக்கடை சிறைக்கு மாற்றப் பட்டான்.

உமா குழந்தைகளுடன் கொழும்பில் குடியேறினாள். பொரளையில் சிறைப் பணியாளர்கள் தங்குவதற்கான மாடி வீடுகளில் இடம் கிடைத்தது. உமாவிற்கு மாமன் மாமியார் இல்லாது தனிக்குடித்தனம் நடத்துவது ஓரளவு நிம்மதியளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திராவின் பெற்றோருடன் மீனாட்சி கிராமத்திலேயே இருந்தாள். அவள் எதிர் பார்த்தபடியே ஜெயிலர் தனியாகயும் உமா வேறாகவும் சித்திரா வீட்டிற்கு வந்து சுகம் விசாரித்துச் சென்றனர்.

சித்திராவின் கடிதத்திற்குப் பதில் எழுதும் முகமாக உமா வந்து சென்றாள். சித்திராவின் தாயார் வேண்டியபடி பிள்ளைகளையும் அழைத்து வந்தாள். தாயாரும் மீனாட்சியும் வேண்டியபடி ஓரிரு நாள் உணவருந்தியும் சென்றனர்.

உமா குழந்தைகளுடன் கிராமத்தில் பெற்றாருடன் இடையிடை தங்கி வருவதற்கு ஜெயிலர் அனுமதியளித்து வந்தார். முன்னர் அத்தனை எளிதாக விடுவதில்லை.

உமா அவ்வாறு செல்லும் வேளை வீட்டைப் பெருக்க என மீனாட்சி அழைக்கப்பட்டாள்.

ஜெயிலரின் திட்டத்தை மீனாட்சி அறிந்த போதும் வீட்டில் எவ்வித முறைப்பாடும் கூறாது சென்று வந்தாள். சித்திராவின் பெற்றாரைப் பார்க்க உமா ஒரு தடவை வந்திருந்தபோது மீனாட்சியிடம் சொன்னாள்:

''எங்கள் வீட்டுக்கும் வேண்டும்போது மீனாட்சி உதவி செய்கிறாளா என சித்திரா அம்மா கேட்டு எழுதியிருந்தாள். நானில்லாத வேளை இரண்டு தடவை வந்து வீட்டைப் பெருக்கிச் சென்றாள் எனப் பதில் எழுதினேன். அந்த உதவிக்கும் உனக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.'

''இதற்கெல்லாம் என்ன நன்றியம்மா. அய்யா கேட்டால் நான் உதவத் தானே வேண்டும்.''

உள்ளூற பயமும் நகைப்பும் எழ மீனாட்சி கூறியபடி 'பாவம் அப்பாவிப் பெண்' என்றும் மனதிற்குள் சொல்லிக் கொண்டாள்.

கொழும்புக்கு மாற்றலானதும் அப்பிரச்சனை தீர்ந்தது. முன்போல தன் கணவனைச் சென்று பார்க்க முடியாததே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறையாக இருந்தது. மாதத்தில் இருதடவை சிறைக்குச் செல்லும் போதெல்லாம் 'ஜெயிலரய்யா இரக்கம் காட்டிப் பேசுகிறார். காசு கேட்காமலே எனக்கு மட்டும் பீடி தருகிறார்' என்று அவன் சொல்லிக் கொண்டிருந்தான்.

சித்திராவின் பெற்றோருக்கு வரும் கடிதங்களிலெல்லாம் மீனாட்சிக்கு சித்திராவின் செய்தி வந்து கொண்டிருந்தது.

## 11

கொழும்பில் உமாவின் வாழ்க்கையில் பெரிய திருப்பம் ஏற்படும் சம்பவம் ஒன்று நடந்து விட்டது.

ஜெயிலரிடம் குடிப்பழக்கமும் இருந்தது. அவர் தொடர்ந்து சிறைக் கைதிகளையும் சுரண்டிப் பிழைத்திருந்தார். உமா அவற்றை விரும்பவில்லை கண்டிக்கவோ தடுக்கவோ முடியவில்லை, எதிர்த்துப் பேசும் வேளை அவன் கைவரிசையைக் காட்டினான். அது பழக்கமாகி விட்டது. சுவருக்குள்ளேயே சிறைக் கைதி போல அவள் அழுது தீர்க்க வேண்டியிருந்தது.

பாலுறவில் கூட அவள் இன்பம் பெற்றதாக இல்லை. அவன் தேவைக்கு அவள் அடி பணிய நேரிட்டது. அவனது குடி வெறியையும் வாய் நாற்றத்தையும் அவளால் பொறுக்க முடியவில்லை.

குடிவெறியில் வரும் வேளை கற்பழிக்க வருபவனை பார்ப்பது போல அவள் நடுங்கினாள். அவ்வேளையோ நோயுற்ற வேளையோ மன்றாடி வேண்டினும் அவன் விடுவதாக இல்லை. அதனால் பாலுறவிலேயே அவளுக்கு வெறுப்பு ஏற்படத் தொடங்கியது.

பாலனை நேசித்திருந்த காலத்தில் தான் விட்ட தவறுகளையும் பொய்மையான கருத்துகளை நம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏமாந்ததையும் எண்ணி அவள் அடிக்கடி வருந்தினாள். முன்னரிலும் பார்க்க பாலன் அவனது நெஞ்சில் பலமாக ஒன்றுவதும் தெரிந்தது.

திருமணம் முடித்த சில மாதங்களில் சில நாட்கள் ஜெயிலர் கொழும்புக்கு உத்தியோக அலுவலாகச் சென்றிருந்தான்.

சில நாள் பிரிந்திருந்த தாபம். வேலை விட்டுவரும் வேளை பார்த்து, குளித்து உடை மாற்றி கவர்ச்சியாக அலங்காரம் செய்து அவனுக்காகக் காத்திருந்தாள். அவன் நேரம் கழித்தே வீடு வந்தான். ஆயினும் வாஞ்சையோடு இனிதாகப் பேசி உணவளித்தாள். படுக்கச் செல்லும் வேளை தன் பாலுறவுத் தாபத்தை மறைமுகமாகத் தெரிவித்தாள்.

"என்னடி, என்னோடு வேசையாடப் பார்க்கிறாயா?"

அன்று அவன் கூறிய கூற்றை அவளால் என்றும் மறந்துவிட முடியவில்லை. அதன்பின் பாலுறவில் அவனது தாபத்தைத் தணிக்கும் யந்திரமாகவே அவள் வாழ நேரிட்டது.

இரண்டு குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதில் பொழுது கழிந்தது. இரண்டாவது குழந்தையின் பிரசவத்தின்போது 'இனிமேல் பிள்ளை வேண்டாம்' என தானே தீர்மானித்து கருத்தடை செய்வதற்கு ஆஸ்பத்திரியிலேயே ஜெயிலர் ஏற்பாடு செய்து விட்டான். அவளே கஷ்டப்பட்டு மசக்கையால் துன்பப்பட்டு பெற்று வளர்த்த பிள்ளைகளை தன் பிள்ளைகள் என்று உரிமை பாராட்டுவதில் முன் நின்றான். இரவில் குழந்தை கத்தி அழுதாலும் தான் தூக்கி அணைக்காது 'மாடு மாதிரி தூங்கிறாய், எழும்படி' என்று உருட்டி எழுப்பி விடுவான்.

சிறைக் கைதிகளிடம் காட்டும் அதிகாரம் போலவே வீட்டிலும் உமாவுடன் மட்டுமல்ல குழந்தைகளுடனும் காட்டுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது சிறைச்சாலையுமில்லை. நாங்க உங்க கைதிகளுமில்லை."

ஆற்றா நிலையில் உமா கத்துவாள்.

"முடிந்தால் வெளியேறிப் பாரேன்" என்பதோடல்லாது 'பளார்' என கன்னத்திலும் விழும்.

தற்கொலை செய்து தன் பிரச்சனையைத் தீர்த்து அவனைப் பழி வாங்க வேண்டும் என்ற எண்ணமும் அடிக்கடி உமாவின் மனதின் அடித்தளத்திலிருந்து எழுந்து கொண்டிருந்தது. தற்போது பிள்ளைகளின் நினைவு நீரில் அழுத்திய மரக்கட்டை போல மிதந்து கொண்டே இருந்தது.

அதுதவிர, தற்கொலை பற்றி பாலன் முன்னர் கூறிய கருத்தொன்றும் அவளது நெஞ்சில் மிதந்து கொண்டே இருந்தது.

"தற்கொலை செய்வோர் அதன் மூலம் தமது பிரச்சனையை மட்டும் தீர்த்துவிட முயல்கிறார்கள். பழகி அன்பு வைப்பவர்மேல் அம்மூடச் செயல் எத்தனை தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும் என எண்ணிப் பார்ப்பதில்லை"

என் தற்கொலை பாலனின் நெஞ்சைக்கூட வருத்தலாம் என்ற எண்ணமும் மனதில் அவ்வேளைகளில் நிழலாடியது.

கொழும்புக்கு வந்த பின்னர் பாலனைக் காணமுடியவில்லை. அவளும் முயலவில்லை. திருமணம் நடக்கும் வரை பிறந்தநாள் வாழ்த்திதழ் ஒழுங்காக வந்து கொண்டிருந்தது. அதன் பின்னர் அதுவுமில்லை. பிறந்த நாட்கள் திருமணத்தின் பின் சாதாரண நாட்களாயின. கணவன் அது பற்றிக் கவலைப் படுவதில்லை. அவளது நெஞ்சில் மட்டும் பாலனின் வாழ்த்திதழ் பற்றிய நினைவு வரும். கனவுக் காதலனாகவும் அவனை எண்ணிக் கொள்வாள்.

சூ—5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தடவை பாலனின் டயரி ஒரு புத்தகத்தோடு அவள் கையில் வந்து விட்டது. அவள் பிரித்த படியே அவனைக் கேட்டாள்: ''இதை நான் படிக்கலாமா?''

''பிறருடைய டயரியைப் படிப்பதென்பது கதவிடுக்கால் பிறருடைய இரகசியத்தைப் பார்ப்பது போன்றது. அறை உள்ளே இருப்பவர்களிலும் பார்க்க ஓட்டையால் நோக்குபவர்கள் தான் அச்செயலால் வீணாக அதிகம் பாதிக்கப் படுவார்கள்''

''நான் பாதிக்கப்பட்டால் பரவாயில்லை. இது ஒரு அறிஞரின் டயரி. அங்கே இரகசியங்கள் இருக்கமாட்டாது''

பதில் கூறி விட்டு நடுவே ஒரு பக்கத்தை அவள் பிரித்தாள்.

''திருமணம் பெண்களின் உழைப்பை மட்டுமல்ல இன விருத்திக்கான திறனையும் இன்னற்படுத்துகிறது''

படித்த போது அக்கூற்று தவறு போலத் தோன்றியது. திருமணத்தின் பின்னரே அதன் உண்மையை அவளால் நன்கு உணர முடிந்தது. இவன் எந்த நூலில் இந்த உண்மைகளைக் கற்று எழுதி வைத்தான்.

ஜெயிலருக்கு யாழ்ப்பாணத்தில் ஆயுட் கைதிகளோடு பழகிய அனுபவம் குறைவு. அவர்கள் சிறையிலே ஓரளவு தனித்துவ மரியாதையுடன் அலுவலக வேலைகளிலும் ஈடுபடுத்துவது வழக்கம். குறைந்த கால சிறைத்தண்டனை பெற்று வந்து போகும் மற்றைய கைதிகளும் ஆயுட் கைதிகளுக்கு தனி மரியாதை செலுத்துவது மட்டுமல்ல அவர்கள் இட்ட வேலைகளையும் செய்வதும் வழக்கம்.

ஜெயிலர்கள் கூட ஆயுட் கைதிகளோடு நயமாகப் பழகி பிற கைதிகள் எதிர்க்கும் போது இவர்களைப் பயன்படுத்தி புதியவர்களை ஒடுக்க முயல்வர்.

ஜெயிலர் சிவநாதன் ஆயுட் கைதிகளை மற்றவர்கள் போல் குரூரமாக நடத்த முயன்றார். அதனால் ஆயுட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைதிகளிடை அவரது மதிப்பு குறைந்து வந்தது. முக்கிய மாக ஒரு கைதி அவனை மதிக்காது, 'உமது அதிகாரத்தை வீட்டிலே உமது பெண்டாட்டியோடு வைத்துக் கொள்ளும்' என்று மற்றைய கைதிகளின் காதில் விழத்தக்கதாக சொல்லி விட்டான்.

மனைவியை இழுத்துப் பேசுவது மானப் பிரச்சனை.

அதைக் கேட்ட பிற கைதிகளும் சிரித்து விட்டனர். மற்றைய ஜெயிலர்களிடமும் இச்செய்தி பரவி விட்டது.

''அவனை நான் அடக்கிக் காட்டுவேன்''. மற்றைய ஜெயிலர்களிடமும் சிவநாதன் வீரம் பேசினான்

பல நாட்கள் கழிந்த பின்னர் ஒருநாள் வெளிப் புறத்தில் இருந்த சிமிந்து 'பெஞ்ச்'சில் ஜெயிலர் சிவநாதன் உட்கார்ந்திருந்தபோது அந்த ஆயுட் கைதி அவ்வழி வந்தான். அவனை ஜெயிலர் அதிகாரக் குரலில் அழைத் தான். பிற கைதிகள் சிலர் அக்குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தனர்.

ஆயுட் கைதி ஜெயிலரை நெருங்கினான்.

''இந்த பூட்சை கழட்டி விடு''

'பெஞ்ச்'சில் நீட்டியிருந்த காலிலிருந்து பூட்சை கைதி கழட்டினான்.

''காலைப் பிடித்து விடு''

''ஏன் நான் உன் பெண்டாட்டியா?''

''காலைப் பிடியடா''

கூறியபடி குண்டாந்தடியை எடுத்து கைதியின் முதுகில் அடித்தான். கைதி குண்டாந்தடியைப் பறித்து வீசினான்.

08 DEC 2021
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருக்குமிடையில் சண்டை நடந்தது. பிற கைதிகள் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர். எவரும் சண்டையை நிறுத்த முயலவில்லை.

தூரத்தில் கூட்டத்தைக் கண்ட மற்றொரு ஜெயிலர் அபாய விசிலை அடித்துவிட்டு ஓடி வந்தான். ஓடி வந்தவன் நெருங்குவதற்கிடையில் ஆயுட் கைதி ஜெயிலரின் தலையைப் பிடித்துச் சுவரை நோக்கிப் பலமாகத் தள்ளி விட்டான். ஜெயிலரின் தலை சுவரில் பலமாக அடிபட்டு நிலத்தில் விழுந்தார். தலையிலிருந்து இரத்தம் வடிந்தது. அவசர சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தனர். பயனளிக்க வில்லை. தலைக்காய விபத்தில் மரணமடைந்தார்.

உமா குழந்தைகளுக்கு இச்செய்தி அதிர்ச்சியளித்தது.

தகனக் கிரியைகள் பெற்றார் வருவதற்காகத் தாமத மாக்கப்பட்டது. ஜெயிலரின் பெற்றாரும் உமாவின் அப்பாவும் வந்திருந்தனர்.

ஜெயிலர் கொழும்புக்கு மாற்றலாகி உமா குழந்தை களுடன் வந்த செய்தியை கிராமத்து நண்பன் ஒருவன் மூலம் பாலன் அறிந்திருந்தான். தனிக்குடித்தனம் அவளுக்கு ஆறுதலளிக்கும் என்று மகிழ்ச்சியடைந்தான். அவளைச் சென்று பார்க்க அவன் விரும்பவில்லை.

தகனக் கிரியை பற்றிய அறிவித்தலை டெய்லி நியூஸ் பத்திரிகையில் பார்த்ததும் பாலன் அதிர்ச்சியடைந்தான். வெலிக்கடைச் சிறையருகேயே இருந்த சிறைப் பணி யாளரின் வீடுகளைச் சார்ந்திருந்த அவளது வீட்டிற்கு காலையிலேயே சென்றான்.

உமா அவனைக் கண்டு வீரிட்டு அழுதாள். பத்திரி கையில் சிறைச்சாலைச் செய்தி வெளியிடப்படவில்லை. உமா சிறை அதிகாரிகள் மூலம் அறிந்த செய்தியை மட்டும் பாலனிடம் சுருக்கமாகக் கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயிலரின் தாயார் இடையிடை ஒப்பாரி சொல்லி அழுது கொண்டிருந்தாள்.

மாலையில் தகனக் கிரியை நடைபெறும் வரை பாலன் அங்கு நின்றான்.

கணத்தை மயானத்தில் தகனக்கிரியை முடிந்ததும், நேரே தன் வீட்டுக்குச் சென்று விடாது உமா வீட்டிற்கு மீண்டும் ஆறுதல் கூறிச் செல்ல வந்தான். உமா வாடி மெலிந்து போயிருந்தாள்.

''எனக்கு இங்கே உதவவோ, ஆறுதல் கூறவோ எவருமில்லை. அடிக்கடி வந்து போக மறக்கவேண்டாம்.''

உமா விம்மலோடு கூறினாள்.

பாலன் உறுதி கூறி விடை பெற்றான்.

ஜெயிலரின் அகால மரணம், உமா தேடிய சிறையை உடைத்து விடுதலை தரக்கூடியதா என்ற ஆராய்ச்சியுடன் பாலன் வீடு நோக்கிச் சென்றான். உமாவின் துன்பமான குடும்ப வாழ்க்கை பற்றி சித்திராவும் முன்னர் சொல்லியிருந்தாள்.

''அவளது வாழ்க்கையைப் பார்க்கும்போது கலியாணமே வேண்டாம் என்ற முடிவுக்கு நானும் வந்து விட்டேன்'' என சித்திராவும் கூறியிருந்தாள்.

எல்லாத் திருமணங்களிலும் கணவன் ஒரு ஜெயிலராக இருப்பதில்லை.

''பெரும்பாலான குடும்பங்களிலெல்லாம் கணவனின் ஆணாதிக்கம் வீடுகளைச் சிறைச்சாலையாக்கி விடுவதைக் காண்கிறேன். கேட்கிறேன்.''

சித்திரா தன் அனுபவத்தில் கண்டதைப்போலும் கூறினாள்.

''எதையும் பொதுமைப்படுத்த வேண்டாம்,''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பெண்களின் பாலுறவுக் கட்டுப் பாட்டிலாவது ஒவ்வொரு ஆணும் குடும்பத்தில் ஜெயிலராக இருக்கிறான் என நான் கூறுகிறேன்.''

சித்திராவின் கூற்று பாலனை வியப்பில் ஆழ்த்திச் சிந்திக்கவும் வைத்தது. திருமணமாகாத பெண்ணொருத்தி இத்தனை உறுதியாகக் கூறுகிறாளே, எங்கே படித்தாள், யார் சொல்லிக் கொடுத்தார்கள் என்றே ஆச்சரியப் பட்டான்.

''திருமணம் பெண்ணுக்கு சிறை. ஆணுக்கல்ல''

அனுபவ வாதத்திலும் பார்க்க விஞ்ஞான உண்மை களே சரியானவை. உயர்ந்தவை.

உமா ஆணாதிக்க சிறைச்சாலையிலிருந்து ஓரளவு விடுதலை பெற்றிருக்கலாம். ஆயினும் சமூகக் கட்டுப் பாடுகள். விதவை என்ற பட்டம். குழந்தைகள் வேறு. சமூக அந்தஸ்து, பொருளாதார நெருக்கடிகள், ஊர் வம்பு.

இளம் வயதிலேயே உமா இத்தனை துன்பத்திற்கு ஆளாக நேரிட்டது அவனை வருத்தியது. கணவனை இளந்த பெண்ணின் வாழ்க்கையை எண்ணிப் பார்த்தான். நிலப்பிரபுத்துவ கட்டுப் பாடுகளே கொடுமை செய் கின்றன. முதலாளித்துவத்தில் விவாகரத்து சாதாரண மாக வழங்கப்படுகிறது. கணவனை இளந்த பெண் விவாகரத்துச் செய்த நிலைக்கே அங்கு ஆளாகிறாள். பெரிய மாற்றமில்லை. ஒருவரின் அகால மரணம் மற்றவர் வாழ்வை ஏன் பாதிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

ஒரு வாரம் கழித்தே பாலன் உமாவிடம் சென்றான். அவளின் மாமன் மாமி உள்ளே இருந்தனர். தாலி, நகைகளின்றி வெள்ளைச் சேலை உடுத்தபடி உமா வெளியே வந்தாள். பாலனைக் கண்டதும் அவளது கண்கள் கலங்கின.

''ஏன் உமா இந்தக் கோலம்?''

வியப்புக் குரல் அடித்தொண்டையிலிருந்து வந்தது.

''அப்பா ஊருக்குப் போய்விட்டார். மாமியாரும் மாமாவும் கட்டளையிட்டுள்ளனர்.''

அவர்களின் மகனின் அகால மரணத்திற்கு அவளுக்குத் தண்டனையா என வருந்தினான்.

''என்ன செய்வதாகத் திட்டமிட்டிருக்கிறாய்?''

''கிராமத்திற்கே போய் பெற்றாருடனோ, தனித்தோ வாழப்போகிறேன்''

''மாமா மாமி என்ன சொல்லுகிறார்கள்?''

''அவர்களது கதையை தொடர்ந்து கேட்டால் எனக்கே பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது.''

''என்ன சொல்லுகிறார்கள்? பிள்ளைகள் இருப்பதால் அவர்களும் தலையிடவே செய்வார்கள்.''

''மகனை என்னிடமிருந்து பிரித்து தாமே வளர்க்கிற நோக்கமிருக்கு. சொத்துக்கு வாரிசாகப் பார்க்கிறார்கள். அதுமட்டுமல்ல மகனது, மரணத்திற்கும் என் மேலேயே பழிபோடுகிறார்கள். நான் அதிர்ஷ்டமில்லாதவளாம். பொருந்தாத சாதகத்தை எங்கப்பா சோதிடருக்கு பணம் கொடுத்துப் பொருந்தச் செய்தாராம். என் பூர நட்சத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரம் தான் புருஷனைக் கொன்றதாம். இதையெல்லாம் நாள்தோறும் கேட்டுக் கொண்டிருக்க முடியுமா.''

அடித்தொண்டையில் சொன்னபோதும், உமாவின் நெஞ்சடைத்து வாய் விம்மிக் கண்கள் கலங்கின. உள்ளே கேட்டுவிடுமோ என்ற அச்சம் பயமுறுத்தியது. வாயை சேலைத் தலைப்பால் பொத்திக் கொண்டாள்.

''என் துன்பத்தைச் சொல்லி அழவே எவருமில்லை. சுதந்திரமில்லை.''

நிலப்பிரபுத்துவ குடும்ப அமைப்புக் கலாச்சார பாரம் பரியங்கள் எத்தனை குரூரமானவை, பெண்களை வதைக் கின்றன என்பதை சில நேரத்திலேயே அவனால் அனுபவ ரீதியாகக் காணக் கூடியதாயிருந்தது.

''நீ இங்கேயே தங்கிவிடலாமே.''

நகரிலுள்ள முதலாளித்துவ அமைப்பு தனி மனிதராக்கி வழங்கக் கூடிய சுதந்திரம், வாய்ப்புகளை நினைத்தே பாலன் சொன்னான்.

''அதற்கேற்ற பொருளாதார வாய்ப்புகள் வேண்டும். அவரின் சேவை குறைவானதால் விதவைப் பென்சனும் குறைவாகவே இருக்கும். அப்படியானால் நானும் வேலை தேடவேண்டும். எதற்கும் 31ம் நாள் நடைபெறும் அந்தி யேட்டிச் சடங்குமுறைகளை முடித்துவிட்டு ஊருக்குச் செல்லவேண்டும். சில மாதங்களாவது கழிந்த பிறகுதான் அவைபற்றி யோசிக்கவேண்டும்.''

''அதுவும் சரிதான்.''

உமாவின் தீர்மானங்கள் சரியாகவே அவனுக்குத் தெரிந்தது. தமது சூழலோடு ஒட்டிய பார்வை அவர் களிடம் இருப்பதை அவன் பல தடவை கண்டு மகிழ்ந்த துண்டு. 'பெண் புத்தி பின் புத்தி' என்பது எத்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறான ஆணாதிக்க கூற்று. தக்கவேளையில் சரியான, நிதானமான தீர்மானம் எடுக்கும் திறமை பெண்களிட முண்டு என எண்ணிக் கொண்டான்.

"வேறு என்ன உதவி நான் செய்ய வேண்டும்"

சிறிது நேரமௌனத்தைக் கலைத்து விட்டு பாலன் கேட்டான்.

"சித்திராவிற்கு நடந்தவற்றை எழுதிவிடுங்கள். அவள் நிச்சயம் இரங்கத்தான் செய்வாள். பிறருடைய இரக்கத்தை யும் அனுதாபங்களையும் நான் விரும்பவில்லை. ஆனால் நீங்க வாரம் ஒரு தடவையாவது வந்து போக வேண்டும். அது நிச்சயம் எனக்கு ஆறுதலாயிருக்கும். சடங்குமுறை களை மாமாவும் அவரது நண்பர்களும் பார்த்துக் கொள் வார்கள்"

"பிள்ளைகள் எப்படி எடுத்துக் கொண்டார்கள்?"

"மூத்தவனுக்கு யாவும் புரிகிறது. இரவிலும் அழுகிறான். சின்னப் பெண்ணுக்கு எதுவும் நன்கு புரிய வில்லை. இடையிடை 'அப்பா எப்ப வருவார்' என்றும் கேட்டுக் கொண்டிருக்கிறது."

"காலம் ஒன்றுதான் யாவையும் ஆற்றிவிடக் கூடியது."

ஆறுதல் கூறிவிட்டு பாலன் புறப்பட எழுந்தான்.

"மறந்து விட்டேன். ஏதாவது குடிப்பீர்களா?"

"இன்று வேண்டாம். மறு தடவை வரும் போது கேட்டே குடிக்கிறேனே"

கண்ணீரிடை உமாவின் உதடுகளும் விரிந்தன.

"கட்டாயம் வாருங்கள். ஏமாற்ற வேண்டாம்"

கடைசி வார்த்தைக்கு, 'நான் எவரையும் ஏமாற்ற மாட்டேன்' என்ற பதில் அடித் தொண்டையில் புறப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டதை உதட்டால் கடித்துக்கொண்டு பேச்சைத் திருப்பினான்.

''இங்கு வந்து போவதில் மாமா, மாமி ஒன்றும் சொல்லமாட்டார்களா?''

''அவர்கள் என்ன சொல்வது? நடக்க வேண்டியதெல்லாம் நடந்து விட்டது. இனிமேல் நான் எவருக்கும் பயப்படவேண்டியதில்லை''

உமாவின் குரலில் ஒருவித தீவிரம் தொனித்தது. ஜெயிலரின் பாசிச ஆட்சியிலிருந்து ஓரளவு விடுதலை பெற்ற உணர்வாயிருக்கலாம்.

# 13

சித்திராவிற்குக் கடிதம் எழுதுவதற்காக அவள் தன் முகவரி எழுதிக் கொடுத்த துண்டை பாலன் தேடினான். கிடைக்கவில்லை. விலாசம் மாறியுமிருக்கலாம் என்ற நினைவுடன் யோகநாதனிடம் செல்ல எண்ணினான்.

யோகநாதன் முன்னர் சொன்னபடி பின்னர் பாலனிடம் வரவில்லை. ஆயினும் நினைவு வந்ததும் அவனைத் திருப்திப்படுத்த இரண்டு சிறுபுத்தகங்களை எடுத்துக் கொண்டு யோகநாதன் தங்கியிருந்த வீட்டுக்குச் சென்றான்.

தான் வந்து பார்க்க முடியாததற்குக் காரணங்கள் கூறி புத்தகங்களுக்கு நன்றி கூறினான் யோகநாதன்.

ஜெயிலரின் மரணம் பற்றி அவன் அறிந்திருக்கவில்லை.

பாலன் சொன்னதும் 'அப்படியா!' என்று கூறிவிட்டு சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். பாலனின் பழைய காதலி என்று சித்திரா முன்னர் கூறியதும் அவன் நினைவில் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலன் முற்போக்கானவன் பழைய காதலி, விதவை யானாலும் கட்டிக் கொள்ளலாம் என்ற எண்ணமும் அவன் மனதில் ஓடியது. பாலனுக்கு அக்காவா, விதவையா என்ற கற்பனையும் நெஞ்சில் ஒரு கணம் தோன்றி மறைந்தது. அக்காவும் பாலனை நேசிக்கிறாள் என்பதே அவனது கணிப்பு.

''அக்கா அரசியல் நிலைமையைக் கேட்டு எழுதியிருந் தாள். உங்களைக் கண்டு பேசியதா என்றும் கேட்டிருந் தாள். இன்னும் மூன்று மாதத்தில் வந்து விடுவாளாம்.''

''நல்லதே. அரசியல் நிலைமை தானே மோசமாகிக் கொண்டிருக்கிறதே. ஒரு புறம் இந்திய அமைதிப் படைக்கும் புலிகளுக்கும் மோதல். தெற்கிலேயும் சிங்கள தேசிய எழுச்சியுடன் ஜேவிபி வேகமாக வளர்ந்து வருகிறது.''

''இவற்றிற்கு முடிவே இல்லையா?''

''தேசீய பாசிசம் வளர்ந்து வருகிறது. தேசிய ஜன நாயகம் ஏற்படும் வரை அழிவுகள் நடந்து கொண்டே இருக்கும்.''

''ஜனநாயகம் எப்பொழுதுதான் தோன்றப்போகிறது''

''பாட்டாளிகள், தொழிலாளர்களது தலைமை ஏற்படும்போதுதான்.''

''பெருந்தோட்டத் தொழிலாளர்கள் தான் பெரிய பாட்டாளிகள் என்று நீங்க எங்கோ எழுதியிருந்தீர்கள். அவர்களுக்கு இப்போது நல்ல கூலி கிடைப்பதாகச் சொல்லுகிறார்கள்.''

''பொய். அவர்களும் வறுமையிலேயே வாடுகிறார்கள். பணவீக்கம் வேறு அவர்களது கூலியைப் பாதி ஆக்கி வருகிறது. உழைப்பிற்கேற்ற உரிமைகளில்லை, தக்க உணவில்லை, இருப்பிடமில்லை, உடையில்லை. பிள்ளை களுக்கு தக்க கல்வி தர வாய்ப்பில்லை. இவையெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையின் சின்னங்கள். அவர்களுக்குக் கிடைக்கும் கூலிப் பணத்தை வைத்துக் கொண்டு வறுமையை, அளக்க முடியாது. அவர்கள் அரசியல் போராட்டத்தில் முற்று முழுதாக இன்னும் நுழையவில்லை. வேறு வர்க்கங்கள் அரசியலாதிக்கத்திற்காக ஆயுதமேந்திப் போராடுகிறார் கள் உழைப்பவர்களுக்கு எங்கே நீதி கிடைக்கிறது? எமது உணவையெல்லாம் உற்பத்தி செய்யும் கூலி விவசாயிகள் தான் நாட்டிலே பாதி நாட்கள் பட்டினியாகக் கிடக் கிறார்கள். உழைக்காதவர் மூன்று வேளை உண்ணுகின் றனர்.''

பாலனின் வார்த்தைகளைக் கேட்கும்போது யோக நாதனும் ஆத்திரமடைந்தான். ஆனாலும் 'இயக்கமில்லாத பிரச்சாரம் அதிக பலன் தரப்போவதில்லை' என்று பாலன் முன்னர் கூறியதும் அவன் நினைவில் வந்தது.

யோகநாதன் சித்திராவின் முகவரியைக் குறித்து பாலனிடம் கொடுத்தான். தானும் உடனே அச்செய்தியை எழுதுவதாகத் தெரிவித்தான்.

''உமா பாவந்தான். கஷ்டப்படப் போகிறாள். என்ன செய்யப் போகிறாவாம்.''

சித்திராவுக்கும் எழுதும் நோக்கோடு யோகநாதன் கேட்டான்.

''ஏன் உமாவிற்காகப் பரிதாபப்பட வேண்டும். புருஷன் இல்லாவிட்டால் பெண்களால் உழைத்து வாழ முடியாதா? கிராமத்திலேயே பெற்றாரோடு விவசா யத்தைப் பார்க்கலாம். அல்லது வேலை தேடலாம்.''

பெண்கள் பற்றிய வழக்கமான கருத்துகளை பாலன் கூறுவது தெரிந்தது.

''எப்படியோ முன்னர் இருந்த வாழ்வோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது...''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முன்னர் புருஷனுக்குச் சமைத்துப் போட்டு வீடு பார்த்து பிள்ளைப் பெத்து துணிகள் தோய்த்து கால் பிடித்துப் பணி விடை செய்தாள். தற்போது தனக்கும் பிள்ளைகளுக்குமாக சுதந்திரமாக வாழலாம். முன்பு மட்டுமல்ல தற்போது ஆண்களின் துணை இன்றியே யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல மற்றைய இடங்களிலும் பெண்களே விவசாயம் செய்வதை நீ பார்க்கவில்லையா? ஆதிகாலத்திலும் அவர்களே உணவு தேடி பிள்ளைகளை, மனித இனத்தை வளர்த்தவர்கள். இன்றும்கூடத் தான், இந்த உண்மை ஆணாதிக்கத்தால் மறைக்கப்பட்டு விட்டது. பெண்களும் அடிமையாக உழைக்கவும் நேரிட்டு விட்டது.''

சமூகத்தால் மறைக்கப்படும் உண்மைகளை அவனால் காணமுடிகிறது என யோகநாதன் எண்ணிக்கொண்டான்.

பாலனோடு விவாதித்து வெல்ல முடியாது என்பதையும் அவன் அறிவான். தோல்வி என்பதல்ல, அவன் மூலம் அறியக்கூடிய புதிய சிந்தனைகள் அவனைக் கவர்ந்தன. எத்தனை நேரமும் பேசி, விவாதித்துக் கொண்டிருக்கலாம் போல அவனுக்குத் தோன்றியது. எவற்றிற்கும் மாற்றுக் கருத்து இருக்கிறது. பரம்பரையாக ஊறிய கருத்துக்களை அவனால் சாடி விவேகமான விஞ்ஞான பூர்வ கருத்துகளைக் காண முடிந்தது.

முன் பழகியது போன்ற புதிய குரலைக் கேட்டு மாமனாரும் வெளியே வந்தார். பாலனைக் கண்டதும் மகிழ்ச்சியோடு சொன்னார்:

''நீங்க அன்று சொன்னதிலும் உண்மை இருக்கிறது என்பதை பிறகு சிந்தித்தபோதுதான் தெரிய வந்தது. ஓய்வு பெற்றபின் கம்பனியார் கூட நன்றிக் கடன் காட்டாதது மட்டுமல்ல கஞ்சத்தனமாகவும் காட்டிக் கொள்ளுகிறார்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதிக்கப்பட்ட பின்னர்தான் சிலர் உண்மைகளை அறிந்து கொள்ளுகிறார்கள். இது ஒருவித அனுபவவாதமே. யதார்த்த போக்குகளை, உண்மை நிலைகளை சித்தாந்த ரீதியில் இவர்களால் அணுகிப் பார்க்க முடியாது போகிறது என்று பாலன் எண்ணிக் கொண்டான். மார்க்சிச கோட்பாடும் அதன் இரு கண்களான வரலாற்றுப் பொருள் முதல்வாதமும் இயக்கவியல் பொருள் முதல் வாதமும் தரக்கூடிய அறிவாற்றலையும் சிந்தனைப் பலத்தையும் வேறு எங்கணும் காண முடியாது என்ற நம்பிக்கை மீண்டும் அவன் நெஞ்சில் பலம் பெற்றது.

"ஓய்வுபெற்ற பின் கசக்கிப் பிழிந்த சக்கை 'கிழடு' என்றுதான் முதலாளிகள் கருதுகிறார்கள். விரைவில் செத்துப் போனால் தங்களுக்கு லாபம் என்றும் எண்ணிக் கொள்வார்கள்"

பாலன் யதார்த்த நிலையைக் கூறினான்.

"ரிட்டயரானதும் என்ன செய்வதென்று தெரியாமல் பலர் முதலாளிகளுக்கு லாபம் தேடுவதாகவும் செத்துப் போகிறார்கள்"

சோகமாக மாமனார் மாணிக்கம் சொன்னார்.

"அதற்காகத்தான் ஓய்வு பெறுவதை மகிழ்ச்சியாகக் கருதி இனிமேல்தான் எனக்காக வாழப் போகிறேன் என்ற விழிப்பு நிலையோடு வாழ வேண்டும் என்று சொன்னேன்"

"அது முற்று முழுதாக உண்மை. எனக்கே அந்த நினைவு தற்போது தெம்பு தருகிறது. அது போக முதுமை, நோய், நொடி போக விதி என்றும் ஒன்று இருக்கிற தல்லவா?"

"அப்படி விதி என்று ஒன்றும் இல்லை அங்கிள். நம்பிக்கையும் சிந்தனைப் பலமும் தான் முக்கியம். நோய்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொடிக்கெல்லாம் மருந்துகளும் மருத்துவர்களும் இருக்கிறார்கள். முன்னைய காலத்திலும் பார்க்க கூடிய காலம் வாழ முடியும். உயிரைப் பறிப்பதாகக் கூறும் யமன் தான் முதுமையடைந்து போனான்.''

''நல்லாய் சொன்னீர் தம்பி''

மாமனார் சிரித்தபடியே நிமிர்ந்து பாலனைக் கேட்டார்.

''முதுமையில் சில பிரச்சனைகள் தோன்றலாம். அவை கூட தவறான நடவடிக்கைகளாலும் உழைக்கும் வயதில் முதலாளிகளால் அத்துமீறிச் சுரண்டப் படுவதாலுமே ஏற்படுகிறது. 'டென்சன்' நிறைந்த அவசர வாழ்க்கையை அவர்கள் லாபம் சேர்ப்பதற்காக எமக்குக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்...''

''அதுவும் உண்மைதான் தம்பி. கம்பனியில் எத்தனை பதட்டத்தோடும் டென்சனோடும் வேலை செய்து மாலையில் களைத்துப் போகிறோம் அதனால் கூட முன்னர் பல தடவை நோய்வாய்ப்பட்டிருந்தேன். மார்பு வலி கூட வந்தது.''

இடைமறுத்து மாமனார் சொன்னார்.

''மனிதன் இன்று இயற்கையின் போக்குகளையெல்லாம் வென்று வருகிறான். வானத்தில் பறப்பதென்ன சந்திர மண்டலத்திலேயே இறங்க முடிந்தது. முன்னர் மாற்ற முடியாதிருந்த நோய்களையெல்லாம் மாற்ற மருத்துகள், சிகிச்சை முறைகளைக் கண்டுபிடித்து விட்டான். அறுபதில் முதுமை, நூறுக்குமேல் வாழ முடியாது என்று ஏன் வீணாகக் கவலைப்படவேண்டும். நூறு நூற்றைம்பது ஆண்டுகள் கூட முதுமையடையாது வாழக்கூடிய வழிகளையெல்லாம் மனிதன் கண்டு பிடிக்காமலா விடப் போகிறான்.''

''தம்பி சொல்லுவதெல்லாம் சரிதான்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இன்றைய முதலாளித்துவ அமைப்பு லாபம் மட்டுமே தேடுவதற்காக மனிதனது பலவீனங்களைப் பயன்படுத்து கிறது. புகைத்தல் உடலுக்கு தீங்கு விளைக்கும் என்று சொல்லிக் கொண்டே சிகரெட்டை விற்று லாபம் தேடுகிறது. கஞ்சா, அபின், ஹீரோயின் போன்ற போதைப் பொருட்களையும் திருட்டுத்தனமாக உற்பத்தி செய்து விற்றுப் பணம் தேடுகிறது. சுவாசிக்கும் காற்று, குடிக்கும் நீர் ஆகியவற்றையும் சுற்றாடலையும் மாசுபடுத்தி வாழ்நாளைக் குறைக்கிறது. உடல் வளர்ச்சிக்குத் தேவை யான போஷாக்கான உணவே இல்லாது குழந்தைகளும் வளர்ந்தவர்களும் வறுமையில் வாடி இளமையில் மரிக்க நேரிடுகிறது. இந்தக் கொடுமைகளையெல்லாம் விதி என்றும் மதம் பிரச்சாரம் செய்து மக்களை ஏமாற்றுகிறது''

''தம்பி கூறும் கருத்துகளையெல்லாம் நான் இது வரை காலமும் கேட்கவில்லை. சிகரெட்டால் தீங்கு விளையும் என்பதை மட்டும் அறிந்து விட்டு விட்டேன்''

''அங்கிள் இது தவிர மக்களுக்கு வேண்டிய உணவு, உடை, வீடு, நீர் வழங்குவதிலும் பார்க்க அதிக தொகையை யுத்ததள பாடங்களுக்காகச் செலவு செய்து லாபத்திற்காக வும், தாம் வேறு வகையில் சந்தை பிடித்து பண்டங்களை விற்று லாபம் சேர்ப்பதற்காகவும் பயன்படுத்தி நாடு களிடை, மக்களிடை பகைமையை வளர்த்து இளம் வயதி லேயே மக்களைக் கொன்று குவிக்கிறது. இதையும் விதி, நியதி என்றா சொல்லப்போகிறீர்கள்...''

''இல்லை இல்லை. இவை அரசாங்கங்கள் செய்யும் அநீதி. கொடுமை''

மாமனார் புதிய கருத்துகளால் கவரப்பட்டதைப் பார்த்து யோகநாதனும் மகிழ்ந்தான். அத்தோடு அவனும் புதிய சிந்தனை பெற்று பூரிப்படைந்தான். முதுமை பற்றிய பாலனின் விளக்கத்தை எல்லோருக்கும் பிரச்சாரம் செய்ய வேண்டும். ஓய்வு பெற்று சோர்வடைபவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவூட்டவேண்டும், நம்பிக்கை ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

பாலன் புறப்படுவதைத் தடை செய்து, உள்ளே சென்று தேனீரும் பிஸ்கெட்டும் எடுத்து வரும்படி மனைவியாரிடம் பணித்து விட்டு மாமனார் வந்தார்.

# 14

சித்திரா துபாயிலிருந்து யோகநாதனுக்கு போன் செய்தாள். உமா வீட்டுக்குச் சென்று தன் அனுதாபத்தைத் தெரிவிக்கும்படியும் உதவிகள் தேவைப்படின் செய்யும்படியும் வேண்டினாள். பண உதவி உட்பட உதவும் படி சொன்னாள். பாலனைக் காண நேரின் கடிதம் பெற்றதாக நன்றி கூறும்படி சொன்னாள்.

துபாயில் தங்கள் வீட்டிலிருந்து உலக நாடுகளுக்கெல்லாம் போன் செய்யலாம், தங்கள் எஜமான், தான் எங்கு போன் செய்யினும். கவலைப்படுவதில்லை என முன்னர் சித்திரா கூறியிருந்தாள். எண்ணெய்ப்பணத்தின் மதிப்பை போன் மூலமே அறிய முடிந்தது.

சித்திராவுக்குக் கிடைக்கும் பணம் அந்த நாட்டில் செலவு செய்யின் அத்தனை பெரிதாக இல்லை. அப்பணத்தை இலங்கை ரூபாயில் மாற்றும் போதே, பெரிய தொகையாகத் தெரிவதை யோகநாதன் அறிவான்.

ஆளும் வர்க்கத்தவர் கார் ஓடுவதற்கும் வெளி நாட்டுப் பண்டங்களை தாராளமாக வாங்கிப் பயன்படுத்துவதற்கும் வெளிநாட்டுச் செலாவணிக்கு டாலர் தேவைப்படுகிறது. அப்பணத்தை உழைத்துத்தர லட்சக் கணக்கானவர் அந்நிய நாடுகளுக்கும் வனாந்தரப் பிரதேசத்திற்கும் சென்று இன்னற்பட வேண்டியுள்ளது; அவர்கள் உழைக்கும் பணத்தில் ஒரு பகுதியை வேலை தேடித்தரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏஜென்சித் தரகர்களும் விமானக் கம்பனிகளும் பறித்தெடுத்துக் கொள்ளுகின்றனர்; எஞ்சிய பணத்தையும் நவீன பண்டங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் ஜப்பானியர்களும் அமெரிக்க ஐரோப்பிய நாட்டு முதலாளிகளும் அபகரித்துக் கொள்ளுகின்றனர். யோகநாதன் இக்கருத்தை அடிக்கடி கூறி வருவான். சித்திராவுக்கும் ஓதி வந்தான். பாலனும் இதே கருத்தை ஒப்புக் கொண்டான்.

யோகநாதன் உமா வீட்டுக்குச் சென்று சித்திரா போனில் கூறிய அனுதாபச் செய்தியைச் சொல்லும் வேளை புதிய செய்தி ஒன்று காத்திருந்தது.

மீனாட்சியின் கணவன் முருகேசன் சிறையிலிருந்து வெளியேறிவிட்டான். ஜெயிலருக்கு நன்றிக்கடன் செலுத்துவதாக உமா வீட்டில் உதவி செய்ய சேர்ந்திருந்தான்.

உள்ளே வேலை செய்து கொண்டிருந்த முருகேசனை அழைத்து யோகநாதனுக்கு உமா அறிமுகம் செய்து வைத்தாள்.

''மீனாட்சியை இவங்க வீட்டிலைதான் வேலை செய்ய பாதுகாப்பாக அய்யாவும் நானும் சேர்த்து வைச்சோம்.''

''நல்லது தம்பி எங்க கஷ்ட காலத்திலை நீங்களெல்லாம் உதவ வந்தீங்க. எல்லாருக்கும் எப்படி நன்றி சொல்லுவதென்று தெரியாது. இத்தனை உதவி செய்த அய்யாவும் போய் விட்டார்.''

முருகேசனின் வார்த்தையில் நன்றிக்கடனும் விசுவாசமும் இணைந்திருந்தது.

''கவலைப்படவேண்டாம். மீனாட்சி நல்லாயிருக்கிறாள். அவள் கெட்டிக்காரி. எங்கேயும் பிழைத்துக் கொள்ளுவாள். அக்கா இன்னும் இரண்டு மூன்று மாதத்திலே வந்து விடுவாள். அதன் பிறகு நீங்க விரும்பியவாறு செய்யலாம்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோகநாதன் மீனாட்சி மேல் வைத்திருந்த மதிப்பு வார்த்தைகளில் தெரிந்தது.

''அந்தியேட்டி சடங்குகளுக்கெல்லாம் முருகேசன் இங்கே இருப்பது நல்ல உதவியாயிருக்கும். அதன் பிறகு எங்களோடு ஊருக்கு வருகிறான். எங்களோடு தங்குவான். பிறகு அக்கா வந்தபின் பார்த்துச் செய்யலாம்.''

அது நல்ல ஏற்பாடாகவே யோகநாதனுக்குத் தெரிந்தது. முருகேசன் வெளியே வந்துவிட்ட செய்தியை மீனாட்சிக்கு அறிவித்துவிட்டதாகவும் உமா சொன்னாள்.

''கொழும்பும் யாழ்ப்பாணமும் கலவரங்களால் மிகத் தூரமாகிவிட்டது. நினைத்தவுடன் போய் வர முடியுமா? அதனாலும் தான் விடுதலையானதும் முருகேசனையும் நாங்கள் ஊருக்கு அனுப்பவில்லை.''

''இத்தனை காலம் இருந்துவிட்டேனாம். இன்னும் மூன்று நாலு வாரம் நிற்பதில் ஒரு கஷ்டமுமில்லை. இங்கே எல்லா வசதியுமிருக்கு. இந்தச் சிறைக்கு வந்த பிறகுதான் கஷ்டம். எல்லாம் கொலைகார ரௌடிப் பசங்கள். அய்யாவையும் கொன்றிட்டாங்க.''

முருகையன் வெலிக்கடைச் சிறை பற்றி தன் மதிப்பீட்டைச் சுருக்கிக் கூறினான்.

இனக்கலவரம் மோசமாக ஆரம்பித்த 1983 ஜூலை 25, 27ம் திகதிகளில் தமிழீழக்குரல் எழுப்பிய தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் ஆகியோர் உட்பட 53 இயக்கத்தவர் இன வெறியர்களால் அச்சிறையிலேயே கொல்லப்பட்டது யோகநாதனின் நினைவில் வந்தது. முதல் நாளான ஜூலை 25ல் 35 பேரும் மறு தடவை 27ல் 18 பேரும் கொல்லப் பட்டனர். இரண்டாவது நாள் போராடித்தப்பிய கைதிகள் இயக்கங்களில் முன்னோடியாக நிற்பதையும் அறிவான். தப்பித்துக் கொண்டவர்கள் மட்டக்களப்புச் சிறைக்கு மாற்றப்பட்டு பின்னர் அச்சிறையை உடைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறி தமிழ் நாடு சென்று இயக்கங்களை வளர்த்தனர். அது வரலாறாகி விட்டது.

"நீ எப்படி வழக்குகளில் மாட்டுப்பட்டாய்"

"அது வெட்கக்கேடான கதை தம்பி, ஆரோ எல்லாம் தப்பிக்கிறதுக்கு நாங்க மாட்டுப்பட்டம். இனி அதைப் பற்றியெல்லாம் பேசிப் பயனில்லை"

முருகேசன் நடந்தவற்றை மறைக்கவும் மறக்கவும் விரும்பியவன் போலத் தெரிந்தது. மீனாட்சி கூட அதை விபரமாக என்றும் கூறியது கிடையாது.

கலவரத்தால் எத்தனையோ கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீ வைப்புக் கடுங்குற்றங்களெல்லாம் விசாரணையோ சட்ட நடவடிக்கைகளோ எடுக்க முடியாத சூழலில் சிறு குற்றங்களில் அகப்பட்ட ஏழைகள் தண்டிக்கப் படுகிறார்கள்.

நீதி மன்றங்கள் சிறைச்சாலைகளெல்லாம் ஏழைகளையும் வலுவற்றவர்களையும் தண்டிப்பதற்கே உள்ளன, அதற்கும் ஒரு வர்க்க நிலைப்பாடு உள்ளது.

யோகநாதன் எண்ணிக் கொண்டான்.

"மரணச் செய்தியை அக்காவிற்கு அறிவிப்பதற்காக பாலன் விலாசம் கேட்டு வந்தார். அதன் பின்னரே எனக்கும் தெரிய வந்தது. சாவீட்டின் போதும் வர முடிய வில்லை. பாலன் வந்து போகிறாரா?"

பாலனுக்கும் உமாவுக்குமிடையில் உறவு வலுப்படும் நிலையுள்ளதா என்பதை மறைமுகமாக அறியும் நோக்குடனேயே யோகநாதன் கேட்டான்.

"இடையிடை வந்து போகிறார். முந்தாநாளும் வந்து அக்காவிற்கு தான் கடிதம் எழுதியதாகச் சொல்லிச் சென்றார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகேசன் தேனீர் கொண்டு வந்தான். 'தம்பி ஊருக்குப் போகவில்லையா?' என்று கேட்டான்.

''உன்னைக் கண்டு பேசியதாக மீனாட்சிக்குத் தெரியப் படுத்துவேன். அவள் சந்தோஷப்படுவாள்''

யோகநாதன் பதில் சொன்னான்.

''அக்கா சார்பிலை அந்தியேட்டிக்குக் கட்டாயம் வரவேணும்''

உமா வேண்டினாள்.

''வருவது மட்டுமல்ல, வேறு ஏதாவது உதவிகள் வேண்டினும் செய்யலாம்''

''அதற்குத் தானே நான் இருக்கிறேன் தம்பி''

முருகேசன் முந்திக் கொண்டான்.

## 15

அந்தியேட்டியின் போது பாலனும் வந்திருந்தது யோகநாதனுக்கு வியப்பாயிருந்தது. அவன் இத்தகைய சடங்கு முறைகளை ஆதரிப்பதில்லை.

''உமா வற்புறுத்தியதற்காக வந்தேன்'' என்றான்.

''இந்தச் சடங்கு முறைகளெல்லாம் எதற்கு என்று தெரியவில்லை. எங்களை நாங்களே ஏமாற்றிக் கொள்ளுகிறோமா? இவை இன்னும் எத்தனை காலம் நீடிக்கப் போகின்றது.''

யோகநாதன் கேட்டான்.

''இவை நீண்ட காலம் நீடிக்கும். காரணம் அறியாமலும், விளக்கமில்லாதவற்றிற்கு மூட நம்பிக்கைகளுக்கு இடமளித்தும், சடங்குகளின்போது விஞ்ஞானம் கற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள்கூட கட்டுண்டு நிற்கின்றனர். விஞ்ஞானம் என்று நான் பௌதிக விஞ்ஞானத்தையே குறிப்பிடுகிறேன். சமூக விஞ்ஞானத்தை அவர்கள் கற்பதில்லை."

"கல்லூரிகளில் கற்பிக்கிறார்களே"

"மார்க்சிய விஞ்ஞானத்தை எங்கே கற்பிக்கிறார்கள். கற்பித்தால் தமது முதலாளித்துவ சமூக அமைப்பிற்கே ஆபத்து என்பதை அவர்கள் அறிவார்கள்."

"அப்போது இப்படியான சடங்குகள்..."

"மரணத்தின் பின் நடைபெறும் இச்சடங்குகளும் விருந்துகளும் கவலைகளையும் ஆற்ற உதவுகின்றன. வாழுங்காலத்தில் அவரவர் செய்த தீமைகளை, அக்கிரமங்களை மறந்து நல்லவற்றை மட்டும் பேசுகின்றனர். சடங்குகள் மூலம் ஆத்மா தேவருலகத்தை அடைந்து விட்டதாகவும் திருப்தியடைகின்றனர். நீ கூறியதைப் போல தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுகின்றனர்."

பாலனின் பதில் யோகநாதனுக்கு ஓரள்வு திருப்தி தந்தது.

"இன்று போராட்டத்தில் கொல்லப்படும் இளைஞர்களையெல்லாம் மதச் சடங்கு முறைகளின்றியே பொலிசாரும் இராணுவத்தினரும் எரிந்து விடுகின்றனரே"

"பாசிச ஆட்சி என்பது பலாத்கார ஆட்சியின் உச்சக் கட்டம். மதம் போன்ற கருத்தியல்களைக் கடந்தது. அங்கு அனைத்தும் ஆளும் வர்க்கத்தின் நீதியாகி விடுகிறது. ஆளும் வர்க்கத்திற்கு ஆபத்து வரும்போது வன்முறையே அவர்களது மதமும் ஆகிறது."

பாலன் கூறிவிட்டு இரண்டாவது உலக யுத்தத்தின் போது இத்தாலி, ஜெர்மனியின் பாசிச ஆட்சியைப் பற்றி விளக்கிக் கூறினான்.

இத்தாலிய முசோலினியின் பாசிசத்திற்கு சிறையில் தள்ளப் பட்டுப் பலியான மார்க்சிய அறிஞர் கிராம்சியைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றிலும் அவர் எழுதிய சிறைக் குறிப்புகள் என்ற நூலைப் பற்றியும் பாலன் விரிவாகக் கூறினான்.

சோஷலிசப் புரட்சி பரிணாம வளர்ச்சியில் வந்துவிடப் போவதில்லை, பாட்டாளி வர்க்கம் போராடித்தான் பெற வேண்டும் என்ற கிராம்சியின் முக்கிய முடிவையும் பாலன் தெரிவித்தான்.

# 16

சித்திரா துபாயிலிருந்து திரும்பியபோது உமா கிராமத்திற்குத் திரும்பி விட்டாள்.

முன்னரிலும் பார்க்க சீரும் சிறப்புடனும் வந்திருந்தாள். வாழ்க்கையைப் பற்றிய நல்ல நம்பிக்கை அவளது முகத்திலும் உடற் பொலிவிலும் தெரிந்தது.

சென்ற தடவையிலும் பார்க்க ஏராளமான நுகர் பண்டங்களையும் கொண்டு வந்திருந்தாள். சுங்கவரி எதுவுமே செலுத்த வேண்டி நேரவில்லை.

அவளோடு வந்த பலர் சுங்க வரி அதிகாரிகளுக்கு அஞ்சியே வந்தனர். சிலர் மாட்டுப் பட்டும் விட்டனர்.

சித்திரா தன் பாஸ்போட்டையும் கொண்டு வந்த பாவனைப் பொருட்களின் விபரமடங்கிய பத்திரத்தையும் அவளது பெட்டிகளைப் பரிசோதிக்க வந்த உத்தியோகத்தரிடம் தரும்போது தன் இருகரத்தாலும் நீட்டி அவனது கரங்களை அழுத்திவிட்டு, எதிர்பாராது கைபட்டது போலக் காட்டிச் சிரித்தாள். 'சொறி' என்றாள். அவன் பெட்டிகளைப் பிரிக்காதே 'ஓகே' என்று யாவையும் பாஸ் செய்து பத்திரத்தில் கையெழுத்திட்டு விட்டு தானும் சிரித்தபடியே அவளது விலாசத்தைக் கேட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமன் வீட்டுத் தெரு எண் 63 ஐ 36 எனக் கூறி விட்டாள். தள்ளு வண்டியில் பெட்டிகளை மீண்டும் வைப்பதற்கும் அவன் உதவினான். வெற்றிப் புன்னகை யோடு வெளியே வந்தாள். யோகநாதன் காத்து நின்றான்.

ஒரு தடவை தொட்டுவிட்டால் ஆண்கள் எத்தனை ஏமாளிகளாகி விடுகின்றனர் என்று எண்ணிக் கொண் டாள். ஒரு தடவை தொட்டதால் கற்பு போய் விடுகிறதா? பஸ்ஸிலே, ரெயினிலே, கூட்டங்களிலே இடிபட நேரும் போதெல்லாம் பெண்களின் கற்பு போய் விடுகிறதா? பிற்போக்காளரின் கற்பனை. இடிப்பவர்கள் ஆண்கள். அவர்களது கற்புப் போகாதோ. ஓரவஞ்ச நியாயம்.

உமா காப்பாற்றிய கற்பனையான கற்பும் மீனாட்சி யின் யதார்த்த வாழ்க்கையும் சென்ற இரண்டு ஆண்டு களிலும் அவளுக்கு வாழ்க்கை பற்றிய புதிய உண்மை களை உணர்த்திக் கொண்டிருந்தன.

ஒரு சாதாரண பெண்ணாலேயே புராணக் கதை களுக்குப் புதிய விளக்கம் கொடுக்க முடிந்தது. நாங்கள் பழையதையே திரும்பத் திரும்பக் கற்று ஒற்றைப் பாதை யிலேயே சிந்தித்து வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

யோகநாதனைத் திருப்திப்படுத்த 'இனிமேல் துபாய்க்கு போகமாட்டேன். அரேபிய வீட்டாருக்கும் சொல்லிவிட்டு வந்துவிட்டேன்' என்று காரிலேயே சொல்லி விட்டாள். ஆயினும் அவள் முற்றாக முடிவு செய்யவில்லை.

கொண்டு வந்த பண்டங்களையெல்லாம் கொழும்பி லேயே மாமனார் வீட்டில் விட்டுச் செல்வதாகத் தீர்மானித்தனர். யாழ்ப்பாணம் செல்லும் வழியில் இயக்கத்தவரினதும் இராணுவத்தினரதும்பரிசோதனையில் சிலவேளை சில பறிக்கப்பட்டும் விடலாம் என்பதை, அவளும் அறிவாள். பத்திரிகைகளில் அவ்வாறான செய்திகள் அடிக்கடி வந்து கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்து நிலைமையைப் பார்த்து பெற்றாருடன் கொழும்பிலேயே குடியேறும் எண்ணமும் சித்திராவுக்கு இருந்தது. எடுத்து வந்த டி.வி, விசிஆர் போன்ற பொருட்களை விற்கவும் அவள் விரும்பவில்லை.

மீனாட்சி, முருகேசனைப் பற்றியும் அவள் விசாரித்தாள்.

யாழ்ப்பாணம் போகுமுன்னர் பாலனையும் ஒருதடவை சந்திக்க விரும்பினாள்.

ஜெயிலரின் மரணம் பற்றித் தெரிவித்த கடிதத்தில் உமாவின் வாழ்க்கைக்குப் பேரிடி ஏற்பட்டுவிட்டது என்ற விதமாக அவன் எழுதவில்லை. வஞ்சினத்துடன் ஜெயிலரின் மரணத்தைப் பார்த்தானா அல்லது விதவைக்குக் கூட பழைய காதலை நினைந்து வாழ்வு தரும் நோக்கமுண்டா என்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை.

யோகநாதன் தானே சென்று பாலனைப் பார்த்து ஓய்வான நேரம் அறிந்து வருவதாகச் சொல்லிப்போனான்.
பாலன் முன்னைய வேலையை விட்டு விட்டதாகவும் தானே ஏற்றுமதி இறக்குமதி ஏஜென்சி வேலை செய்வதாகவும் தெரிவித்தான். தானே சித்திராவைப் பார்க்க வருவதாகவும் கூறினான்.

''முன்னைய வேலை பிடிக்கவில்லையா? அல்லது கூலிப் பிரச்சனையா'''

யோகநாதன் நளினமாகவே கேட்டான்.

''கூலி அடிமைத் தொழில் என்றுமே எனக்குப் பிடிக்காது. தவிர்க்க முடியாது இருந்தேன். தற்போது நானே முதலாளி, தொழிலாளியும் கூட''

''கூலி உழைப்பிலிருக்கும் வர்க்க உணர்வு, உழைப்புச் சக்தியை இழப்பதிலும் விற்பதிலும் ஏற்படும் விழிப்பு நிலை இல்லாது போகப் போகிறதே''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் முன்னைய தொனியிலேயே யோகநாதன் சொன்னான்.

"நாங்கள் படிக்கிறோம். சிந்திக்கிறோம். தக்க இயக்கத்தைக் கட்டாததுதான் குறை."

பதில் வேறு திசையாகத் திரும்பியது.

"முதலாளித்துவ வளர்ச்சிதான் பெண் விடுதலை இயக்கங்களையும் ஊக்குவிக்கிறது என்று சொல்லுகிறேன்..."

"ஆமாம். உழைப்புச் சக்தியை இழப்பது, விற்பது போன்ற உணர்வுகளை முதலாளித்துவமே கற்பித்தது. முதலாளித்துவ யுத்தங்கள் வீடுகளில் அடைபட்டுக் கிடந்த பெண்களையும் கூலிச் சந்தைக்குக் கொண்டு வருகிறது. உழைப்புச் சக்தி பற்றிய உணர்வு நிலை வளர்ச்சியடைய தொழிலாளிவர்க்கம் போலவே பெண்களது விடுதலை வேட்கையும் வளர்ச்சியடைந்து வந்துள்ளது."

"இங்கேயும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து பெண்களும் வீடுகளை விட்டு வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள்"

"யுத்த நிலைமைகள் அழிவும் இன்னலும் துன்பமும் தரும் வேளை அவர்களது அடக்குமுறை, ஒடுக்கு முறைக் கெதிரான விடுதலைக்கும் வழி வகுக்கிறது. பொருளாதார வாய்ப்புகளைத் தேடி பிற நாடுகளுக்குச் செல்கிறார்கள். ஆயினும் பொருளாதாரம் மட்டுமல்ல பண்பாட்டு முறைகளும் மனித வாழ்வு முறைகளைத் தீர்மானிக்கின்றன."

பாலன் சிந்தனையோடு நிதானமாகவே சொன்னான்.

"சரியாக எனக்கும் புரியவில்லை."

யோகநாதன் தன் அறியாமையை ஒப்புக்கொண்டு விளக்கம் வேண்டினான்.

"எமது இனத்தவர், கூலி அடிமைகளாக கனடா, ஜேர்மனி, பிரான்சு, அவுஸ்திரேலியா, இங்கிலாந்து போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளுக்குச் சென்றபோதும் முற்று முழுதாக அந்நாட்டு மக்கள் போல மாறிவிடுவதில்லை. அவர்களும் இவர்களும் கூலி உழைப்பாளராக இருந்தபோதிலும் மதம், சடங்கு முறைகள், பண்பாடுகளில் மாறிவிடுவதில்லை என்றுதான் சொல்லுகிறேன். அக்கா துபாய்க்குப் போய் வந்தால் சில புதிய நுகர் பண்டங்களைக் கொண்டு வரலாம். புதிய உடைகளை வாங்கி வரலாம். அல்லாவை வழிபடப் போவதுமில்லை. முக்காடு போடப் போவதுமில்லை. மூன்றாவது பெண்டாட்டியாக ஒருவனுக்கு வாழ்க்கைப் படப் போவதுமில்லை.''

பாலன் சிரித்தபடியே விரிவாக விளக்கினான்.

''மேல் நாடுகளில் பெண்களின் விடுதலை இயக்கங்கள் வலுப்பெற்று வருகின்றன தானே.''

'ஆனாலும் அவர்கள் கிளர்ச்சி செய்யலாம் முற்று முழுதான விடுதலை தூரத்திலேயே உள்ளது.''

''எனப்படிச் சொல்லுகிறீர்கள்?''

''மேல் நாட்டு முதலாளித்துவத்தில் கூட அரசிய லுரிமை பெண்களுக்குக் கிட்டாது ஆணாதிக்க அரசியலே நடைபெறுகிறது. ஆண் பெண் சமத்துவம் பேசுவ தென்றால் நாடாளுமன்றத்திலும் அமைச்சரவையிலும் பாதி இடங்களைப் பெண்களுக்கு ஒதுக்கிவிடலாமே. உலகில் எந்த நாட்டிலாவது வழங்கியிருக்கிறார்களா! சோஷலிச நாடுகளில் தானும் தரப்படவில்லை. அதனால் தான் காலமாகும் என்று கூறுகிறேன். பெண்கள் முற்று முழுதாக விடுதலை பெறும்போது நாம் புதிய சமூக அமைப்பையே எதிர்பார்க்கலாம்.''

''அப்படியென்றால்...''

''இன்றைய ஆணாதிக்க குடும்ப அமைப்புச் சமூகமும் மாறிவிடலாம். சோஷலிசப் புரட்சியின் பின் கம்யூனிச சமுதாயத்தில் தனிச் சொத்துடைமைச் சமூகம் ஒழிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டு உற்பத்திச் சமுதாயம் ஏற்படுமல்லவா. அதே போல தனிச் சொத்துடைமையைப் பேணும் குடும்ப அமைப்புகளும் உடைந்து விடலாம்.''

பாலன் மேலும் விளக்கிக் கூறினான்.

## 16

பாலன் சித்திராவைக் கண்டதும் சிரித்தபடியே கேட்டான்.

''துபாயிலிருந்து என்னென்ன நுகர் பண்டங்கள் கடத்திக் கொண்டு வந்தீர்கள்?''

''அதெப்படி உங்களுக்குத் தெரியும்?''

''பணிப் பெண்களாகச் செல்பவர்கள் எல்லோரும் அதற்காகத்தானே பாலைவனப் பணக்காரருக்குச் சேவை செய்யச் செல்கிறார்கள், இங்கே தங்கள் பெற்றாரையும் விட்டுவிட்டு.''

சித்திராவையும் அவ்வார்த்தைகள் தாக்கின.

''ஆண்கள் மட்டும் போகலாம். பெண்கள் போகப் படாதா?''

''மன்னிக்கவும். நல்ல பதிலே. ஆனால் நுகர் பண்ட நாட்டம் ஆண்களிலும் பார்க்கப் பெண்களுக்கே அதிகம் என்று முதலாளித்துவ உலகம் கருதுகிறது. உலகில் உற்பத்தி செய்யப்படும் நுகர் பண்டங்களில் 60 வீதத்திற்கு அதிகமாக பெண்களுக்காகவே உற்பத்தி செய்கின்றனர். பலவித உடைகள், நகைகள், மேக்-அப் பொருட்கள் எல்லாவற்றையும் பார்க்கலாம். சேட்டிலும் பான்டிலும் பெரிய மாற்றமில்லை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் உடைகளைக் கைகளால் மேலிருந்து கீழ்வரை காட்டியபடியே பாலன் சொன்னான்.

''ஆண்கள் விரும்புவதாலேயே பெண்கள் பலவித உடைகளையும் நகைகள், மேக்-அப் பொருட்களையும் வாங்கி அழகுபடுத்திக் கொள்ளுகிறார்கள்.''

''அப்போது ஆண்களைக் கவருவதற்குத்தான் பெண்கள் இவற்றையெல்லாம் தேடி அலங்கரிக்கிறார்கள் என்று சொல்லுகிறீர்களா?''

''ஆமாம். நிட்சயமாக.''

சித்திரா உறுதியாகச் சொன்னாள்.

''அப்போது ஆண்களா? பெண்களா? உயர்ந்தவர்கள்''

''சக்தி பெரிதா? சிவம் பெரிதா? பழைய புராணக் கதைக்கு நீங்களும் வருகிறீர்களோ''

சித்திரா சிரித்தபடியே கேட்டாள்.

''இல்லை''

''புராணத்தில் சமரசம் ஏற்படும். சக்தியும் சிவனும் ஒன்று என்று முடியும்''

''புராணத்தை விட்டுவிட்டு உங்கள் தீர்மானத்தைத் தான் கேட்கிறேன்''

பாலன் கேட்டான்.

''பெண்கள் தான் உயர்ந்தவர்கள். ஆண்கள் எல்லோருமே பெண்களைக் கண்டதும் உற்றுப் பார்க்கிறார்கள். கண்ணைக் காட்டினால் காலில் விழுவார்கள்''

''ஓ அப்பிடியா? எங்களையெல்லாம் அத்தனை இளித்த வாயர்களாகவா பார்க்கிறீர்கள்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏன் பத்திரிகைகள், விளம்பரங்களைப் பாருங்கள். போஸ்டர்கள், நகரத்து ஷோகேசுகளை பாருங்கள். முதலாளித்துவமே பெண்களின் அரை, குறை ஆபாசப் படங்களைப் போட்டுத்தான் ஏமாந்த ஆண்களுக்கும் பண்டங்களை விற்கிறார்கள். அப்பண்டங்களுக்கும் பெண்களுக்கும் தொடர்பே இருக்காது''

''ஓ அப்பிடியான ஒரு விளக்கமும் இருக்கிறதா? நல்லது. உங்கள் வார்த்தையில் கேட்கிறேனே''

உள்ளூறச் சிரித்தபடியே சித்திராவின் முற்போக்கான விளக்கத்தை பாலன் கேட்டான். புதிய விளக்கம் அவனையே வியக்கச் செய்தது.

''புராணக் கதைகளிலேயே பெண்களின் உயர்வையும் பலத்தையும் சாதுரியத்தையும் ஆண் புலவர்களே உயர்வாகச் சித்தரித்துள்ளார்கள். பின்னர் வந்த ஆணாதிக்க பிரசங்கிகள் தவறாக விளக்கம் கொடுத்து இழிவு படுத்த முனைந்தார்கள். அந்தத் தவறால் தவறான விளக்கமே இன்றும் தொடர்கிறது.''

''எந்தப் புராணக் கதையைச் சொல்லுறீங்க''. பாலன் கேட்டான்.

''பத்மாசுரன் கதை தெரியுமா உங்களுக்கு.''

''மறந்து போனேன். சொல்லுங்கள்''

''பத்மாசுரன் முழு முதற் கடவுளாகிய சிவபெருமானை வேண்டிக் கடுந்தவம் செய்தான். தவத்தின் பெருமையை மதித்து சிவன் அவன் முன் தோன்றி என்ன வரம் வேண்டும் என்று கேட்டாராம். 'நான் எவருடைய தலையில் கைவைத்தாலும் அவர் எரிந்து சாம்பலாகி விடவேண்டும்' என்றான். 'அப்படியே வரம் தந்தேன்' என்று சிவன் சிந்தியாமல் கூறிவிட்டார். பத்மாசுரன் சிவனது தலையிலேயே கைவைக்க முயன்றான். சிவன் பயந்து ஓடிப்போய் விஷ்ணுவிடம் தன்னைக் காப்பாற்றும்படி வேண்டினார். விஷ்ணு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுக்கோ நேரடியாக போராடும் வழி எதுவும் இல்லாமல் மோகினிப் பெண் வடிவமெடுத்துச் சென்று தன் அழகையும் பால் கவர்ச்சியையும் காட்டி ஆடி, பத்மாசுரனை மோகினிப் பெண் மயக்கினாளாம். அசுரனின் கையை எடுத்து அவன் தலைமேலேயே வைத்து மோகினி அவனை அழித்தாளாம். இக்கதை ஆண்களை வெல்லத்தக்க பெண்ணின் திறமையை யும் உயர்வையும் காட்டவில்லையா? முழு முதற் கடவு ளான சிவபிரானால் முடியாததை மோகினிப் பெண் சாதிக்கவில்லையா?''

''நிச்சயமாக... நான் மறுக்கவில்லை'' சித்திராவின் தர்க்கரீதியான விளக்கத்தை அவன் ஏற்றது மட்டுமல்ல உள்ளூறப் பாராட்டினான். அசுரருக்கும் தேவருக்கும் ஏற்படும் போராட்டத்தை பொருள் முதல் வாதத்திற்கும் கருத்து முதல் வாதத்திற்குமிடையில் ஏற்படும் முரண் பாடாகவே பாலன் விளக்கம் கூறுவான். கந்த புராணம் கூட இம்முரண்பாட்டை விளக்கிய போதும் பொருள் மயமான வாழ்வை இழிவு செய்வதாகவே போதிக்கிறது. அரக்கர்களின் மது அருந்தல் மாமிச உணவுண்ணல் ஆகிய வற்றையும் புராணம் பழித்துக் கூறியது என எண்ணிக் கொண்டான்.

''பத்மாசுரன் கதை மட்டுமல்ல. இதேபோன்ற பல கதைகள் உள்ளன. தேவர் உலகத்தில் ரம்பை, ஊர்வசி, திலோத்தமை என்ற தேவர் உலகப் பெண்களையே பயன் படுத்தி முனிவர்களின் தவங்களைக் கலைத்தனர். தேவேந்திரன்கூட அகலிகை என்ற முனிவரின் மனைவியைக் கண்டு மாறு வேஷம் போட்டுப் பாலுறவு கொண்டான். இவையெல்லாம் பெண்களின் உயர்வைத் தானே காட்டு கின்றன.''

''அதில் சந்தேகமே இல்லை. அத்தகைய உயர்ந்த பெண்ணினம் இன்று அடிமைப்பட்டுக் கிடப்பதன் காரணம் என்னவென்று நினைக்கிறீர்கள்?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேலைப் பிரிவினையாலே என்று தம்பி அடிக்கடி சொல்லுவான். ஆனால் பெண்கள் தங்களிடமுள்ள சிறப்பையும் உயர்வையும் உணராததாலே என்றும் சொல்லலாம் தானே"

"அப்படிச் சொல்வதும் முற்போக்கான கருத்துத்தான். கருத்தியலாலும் பெண்கள் அடிமைப் படுத்தப் பட்டிருக்கிறார்கள் என்பதும் உண்மைதான்."

பாலன் பாராட்டலோடு பகர்ந்தான்.

"கருப்பை பெண்ணினத்திடம் தான் இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்தக் கூடிய உணர்வு நிலையும் விஞ்ஞான அறிவும் கொண்டு மனித இன வளர்ச்சியையே பெண்களால் கட்டுப் படுத்திவிட முடியும் தானே."

"பேச்சில், சித்தாந்தத்தில் எல்லாம் சரியாகவே தோன்றுகிறது. நடைமுறைப் பிரச்சனைதான் தற்போதைய பிரச்சனை. உங்களைப் போலப் பெண்கள் எல்லோரும் உழைக்க வேண்டும், திருமணம் செய்ய மாட்டேன் என்று உறுதி கொள்ள வேண்டும். திருமணம் செய்ய உடன்பட்டாலும் புருஷனின் சொத்துக்கு வாரிசு பெற்றுத் தர மாட்டேன் என்று முதலிலேயே ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். வேகமாக முன்னேறி விடுவோம். நடைமுறையில் எல்லோரும் அடிமையாக குடும்பத்திற்காக உழைக்கிறார்கள். ஒன்று பட்டுப் போராடவே வாய்ப்பில்லை."

யோகநாதன் அவர்களது உரையாடலில் நுழையாது சுவையாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

சித்திராவால் நடைமுறைப் பிரச்சனைகளை ஓரளவு உணர முடிந்தது.

மாமா வெளியில் போயிருந்தார். சித்திரா உள்ளே சென்று தான் துபாயிலிருந்து கொண்டு வந்த புட்டியி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலடைத்த 'டங்கோ' என்ற ஆரஞ்சு சுவை துகள்களை கரைத்துக் கொண்டு வந்தாள்.

"யாழ்ப்பாணப் பயணம் எப்போது?"

"சில நாளில் போய் விடுவேன். உமாவைப் பிறகு சந்தித்தீர்களா? அவளுக்கு என்ன விதமாக உதவலாம்."

"வாழ்க்கை அனுபவம் பல பாடங்களைக் கற்பித்து விடுகிறது. இனிமேல் அவளாகவே வாழ்ந்து கொள்வாள்"

"விதவையாகவா"

"அப்படி எந்தப் பெண்ணும் எண்ண வேண்டியதில்லை. நீங்க தனியே வாழப் போவதாக சபதமெடுக்கவில்லையா? அதேபோல அவள் குழந்தைகளோடு வாழ்ந்து கொள்வாள்."

"வருமானம்"

"அவள் பிச்சை எடுக்க வேண்டிய நிலை ஏற்படாது. வாழ்க்கைத் தரம் என்பது ஏற்றத் தாழ்வான இன்றைய சமூகத்தில் எல்லையற்றது. அவள் ஓரளவு குறைந்த வாழ்க்கைத் தரத்தில் வாழ நேரலாம்."

"உமாவின் வாழ்க்கை எனக்கு இரண்டு பாடங்களைக் கற்பித்தது."

"அவை என்னவோ."

"ஒன்று கலியாணம் என்று ஜெயிலரிடம் பட்ட துன்பம். இரண்டாவது விதவை என்ற பெயர்"

"இதற்கு அஞ்சி பெண்கள் கலியாணம் செய்யாமல் இருக்கிறார்களா? மாப்பிளைக்கு சீதனம் கொடுத்தே கட்டுகிறார்கள்."

"அவர்கள் மாப்பிளையை விலைக்கு வாங்கிச் சமைத்துக் கொடுத்துப் பிள்ளை பெற்று வளர்க்கட்டும்.



08 DEC 2021
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாப்பிளை என்பவன் எந்தப் புத்திலிருந்து எந்தப் பாம்பாக வருமென்று சொல்ல முடியாது.''

''சாரையாகவும் இருக்கலாம்.''

சிரித்தபடி பாலன் சொன்னான்.

''உமாவை பெற்றார் எவருமே ஒரு நாட்கூட அடித்து வளர்க்கவில்லை. எங்கோ பிறந்த ஜெயிலர் வந்து அடித்தான், உதைத்தான். அவனுக்கு யார் அனுமதி கொடுத்தது. ஒரு சிலருக்காக அவள் தற்கொலையே செய்யாமலிருந்தாள்.''

பாலனையும் சேர்த்தே மறைமுகமாகச் சொன்னாள். அவன் எதுவும் பேசவில்லை.

உமாவைத் திருமணம் செய்யும் எண்ணம் அவனுக்கில்லை என்பதை அறிந்துகொண்டாள். அதை அறிந்து ஊரில் உமாவுடன் பாலன் பற்றிப் பேசிப் பார்க்கலாம் என்ற நினைவையும் விட்டுவிட நேர்ந்தது. ஆயினும் உமாவை உசாவி அடிமனத்தை அறியவேண்டும் எனவும் சித்திரா எண்ணிக் கொண்டாள்.

# 17

ஒரு பெட்டியில் சில உடைகள், பொருட்கள் மட்டும் எடுத்துக்கொண்டு சித்திரா யாழ்ப்பாணம் புறப்பட்டாள். அப்பா அம்மாவிற்காக வாங்கிய சில பொருட்கள் உமா, மீனாட்சிக்கு சேலைகள் ஆகியவை மட்டுமே, நகைகளை, கொழும்பு வங்கிப் பெட்டகத்தில் பூட்டிவிட்டாள். நகை அணிவதை அவள் விரும்பாத போதும் துபாய் தங்கம், பணம் என்பதே அவள் கருத்து, அங்கிருந்து தங்க நகைகளும் கொண்டு வந்திருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஸ் பயணம் அலுப்பும் களைப்பும் தந்தது. அமைதிப் படையின் பரிசோதனை. பஸ்ஸில் இறங்கி நடந்து பின் ஏறவேண்டும். பல தடவைகள் இயக்கங்களின் பரி சோதனை வேறு. அவளின் உடையையும் ஏற இறங்கப் பார்த்தார்கள். அவள் சிரித்துச் சமாளித்தாள்.

கிராமத்தில் நிலைமைகள் மாறியிருந்தன. இந்திய அமைதிகாக்கும் படை கிராமங்களிளெல்லாம் முகாமமைத் திருந்தது.

அமைதிப் படைக்கும் விடுதலைப் புலிகள் இயக்கத் துக்குமிடையில் முரண்பாடு. ஆங்காங்கே துப்பாக்கி வெடிகள் தீர்க்கும் சத்தம்.

மாலையாகி விட்டால் எல்லோரும் காலைவரை வீடு களில் அடக்கம்.

கொக்குவிலில் இருவர், மானிப்பாயில் மூவர், அச்சு வேலியில் ஒருவர் கொல்லப்பட்டதாக ஆங்காங்கே செய்தி கள் அடிபட்டன. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் தினசரிப் பத்திரிகைகளும் அச் செய்திகளை வெளியிட்டன.

1987 அக்டோபரில் நடைபெற்ற போர், 'ஸெல்' அடித்தாக்குதல், அகதிகளாக கோவில்களில் குடிபுகுந்தமை பற்றிய செய்திகளை எல்லோரும் சொல்லினர். ஒவ்வொரு வரும் பாதித்த முறைகள் ஒவ்வொரு கதையாக இருந்தது.

அப்பா, அம்மா முன்போலவே இருந்தனர். முதுமை யின் பாதிப்பும் தாயின் முடக்குவாதமும் ஓரளவு பிரச் சனையாயிருந்தன.

சித்திரா வந்த சேதியைக் கேட்டதும் முருகேசன் உமா வீட்டிலிருந்து வந்திருந்தான். அவர்களது பிரச்சனை பற்றிப் பின்னர் பேசுவோம் எனக் கருதி அவனுக்கு ஒரு சாரமும் பணமும் சித்திரா கொடுத்து அனுப்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீனாட்சி முன்னரிலும் பார்க்க பொலிவோடு இருந்தாள். அவளுக்காக வாங்கி வந்த பொருட்களைக் கொடுத்தாள். ஓய்வாக பல விஷயங்களும் இரவு படுக்கும்போது பேசலாம் என விட்டு விட்டாள்.

"அம்மா நீங்க அதிர்ஷ்டக்காரி எங்க வீடு ஒருவகையிலும் 'செல்' அடியில் பாதிக்கப்படவில்லை' எனக் கூறி பாதிக்கப்பட்ட சில வீடுகளின் விபரங்களை மீனாட்சி சொன்னாள். அவளுக்கு கிராமமெல்லாம் தற்போது பழகி விட்டது.

அமைதிப் படையோடு, ஆரம்ப காலப் போராட்டத்தின்போது, ஒரு மாத காலமாக தாங்கள் வீட்டில் சமாளித்த விபரத்தையும் விரிவாகச் சொன்னாள்.

சித்திராவின் வரவை அறிந்து உறவினர் பலர் வந்து போய் கொண்டிருந்தனர். அடுத்த வீட்டு சிறுவர் சிறுமியர் சொக்லெட் வாங்குவதற்காக வந்து போயினர்.

முதற் கடமையாக உமாவிடம் போக வேண்டும் என எண்ணிக் கொண்டாள். அவளது பெற்றார் வீடு ஒரு கிலோ மீட்டர் தூரத்திலேயே இருந்தது. நடந்தே செல்ல வேண்டும். வேறு வாய்ப்பில்லை.

சித்திரா எதிர் பார்த்தது போல உமா அழவில்லை. முகத்தை சோகமாக அவளே வரவழைத்தது போல இருந்தது.

மாமனும் மாமியும் தன் மகனை அழ அழ அழைத்துச் சென்றது பற்றி உமா சொன்னாள். உமாவின் சிறு பெண் அழைத்ததும் வந்து சித்திராவின் மடியில் உட்கார்ந்தாள். தான் கொண்டு வந்த சொக்லெட், சட்டை ஆகியவற்றைக் கொடுத்தாள்.

உமாவிற்கும் கோபுரம் போன்ற டிசைன் அச்சிட்ட கலர் சேலை ஒன்றைக் கொடுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எனக்கு வெள்ளைச் சேலையல்லவா தரவேண்டும்'' உமா சொன்னாள்.

''அதெல்லாம் அந்தக் காலம். இன்றும் பெண்களெல்லாம் முட்டாள்களல்ல, மனைவி இறந்ததும் ஆண்களுக்கும் 'விடன்' என்று கூறி உடையில் கட்டுப்பாடுகள் வைக்க வேண்டும்''

''என் மாமா மாமி வெள்ளைச் சேலை கட்டுவதையே விரும்புகிறார்கள். கொழும்பில் அவர்கள் இருக்கும் வரை உடுக்கச் செய்தார்கள்,''

உமாவின் கண்கள் அவ்வேளை தான் கலங்கின.

''அந்தச் சிறையிலிருந்து நீ விடுபட்டு விட்டாய். இனிமேல் கலங்க வேண்டியதில்லை. மற்றவர்கட்காக வாழ்ந்தது போதும். இனிமேல் உனக்காக வாழ். நல்ல காலம். அங்கிருந்திருந்தால் சாகும் வரை அவர்களுக்காகத்தான் வாழ்ந்திருப்பாய், அப்போதும் ''நல்ல மனைவி, நல்ல மருமகள்' என்று பெயரும் எடுத்திருக்க மாட்டாய். அதற்குத்தான் பெண் பிறந்தாள் என்ற பொய்ப் பிரசாரம் வேறு. ஆண்கள் தான் வாழப் பிறந்தவர்களாம். மண்ணாங்கட்டி''

சித்திராவின் வார்த்தைகளில் உண்மை இருந்தது, ஆறுதலும் அவளுக்கு அளித்தது. அவளது சீற்றம் கூட தெம்பு தந்தது.

''உனக்கு ஏதாவது உதவி தேவையென்றால் தயங்காது என்னிடம் கேள். பண உதவியையும் சேர்த்துத்தான் சொல்லுகிறேன்.''

''வீட்டுச் செலவு விஷயங்களையெல்லாம் நான் சமாளித்து விடுவேன். சீதனக் காசுதான் அவரோடு போய் விட்டது. நகைகளும் இந்த வீடுவளவும் இருக்கிறது. பென்சன்கூட சிறு தொகையாவது கிடைக்கும். ஆன படியால் கவலைப்பட எதுவுமில்லை. முருகேசனின் உதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட இனிமேல் வேண்டியதில்லை. நீ வரும் வரை தடுத்து வைத்திருந்தேன், மீனாட்சிக்காகவுந்தான்.''

''அதை நான் பார்த்துக் கொள்வேன். வேறு பிரச்சனை ஒன்றுமில்லையா''

''புருஷனை இழந்ததற்காக சிலர் இரக்கம் காட்டுகிறார்கள். வேறு சிலர் இலகுவாக சேஷ்டை விடலாம் என்றும் வந்து நயமாக பேசுகிறார்கள்.'' ஒருவித நகைப்போடு சொன்னாள். இத்தகைய விஷயங்களை மனந்திறந்து சொல்லக் கூடிய தோழி அவள் மட்டுமே.

''அது எப்போதும் இருக்கத்தான் செய்யும். தனிமையில் கலியாணம் கட்டாமல் இருந்தாலும் வருவார்கள். இதையெல்லாம் அசூசை என்று எடுக்கப்படாது. பெண்களின் பெருமை என்று கொள்ள வேண்டும். வேண்டாதவர்களிடம் வெறுப்பை மறைமுகமாகக் காட்டி விட்டாலே போய் விடுவார்கள். புருஷன் தான் பாதுகாப்புத் தருவான் என்று நம்ப வேண்டாம். அவர்களுக்குத் தெரியும்போது தான் வேண்டாத விபரீத விஷயங்களும் நடந்து விடுகின்றன. அவர்கள் தங்கள் வீட்டுச் சொத்து, மற்றவர்கள் தொடப்படாது என்று நினைத்துக் கொள்ளுகிறார்கள். அதேபோல பெண்கள் நினைப்பதும் தப்பு. இது ஆணாதிக்க சமூகம். பெண்களால் வீண் சண்டை மட்டும் போடலாம், முற்றாக ஆணாதிக்கத்தைக் கட்டுப்படுத்தவும் முடியாது. சண்டை போடுவதற்காகவே பெண்களை வஞ்சம் தீர்க்கத் தக்கவர்கள், ஆண்கள். கணவன் உட்படவே சொல்லுகிறேன்.''

''நீ எங்கேதான் இவற்றையெல்லாம் கற்றாயோ தெரியவில்லை.''

உமா வியப்போடு சொன்னாள்,

''இந்த உலகத்திலேதான். பலர் கூறிய அனுபவங்களையும் சொந்த அனுபவத்தையும் வைத்துத் தான் சொல்லுகிறேன்; தியேட்டரில், பஸ்ஸில், கூட்டங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்கள் சேஷ்டை விடுவதைக் கண்டு நாங்க கத்து கிறோமா? நாங்க சமாளிக்கவில்லையா? எங்க கற்பு கரைந்து விட்டது என்று அழுகிறோமா? சேஷ்டை விட வருபவர்களை நாங்க குறைவாகத் தானே பார்க்கிறோம். சந்தர்ப்பம் கிடைத்தால் எல்லா ஆண்களும் அப்படித் தான்.''

''நீ சொல்வதெல்லாம் சரிதான். நடைமுறையில் வாழும் பிரச்சனைகளைப் பார்க்க வேண்டும். என் நிலையில் நீ இருந்து பார்க்க வேண்டும்.''

''அதை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். கிராமங்களில் தான் இந்தப் பிரச்சனை. சமூகக் கட்டுப்பாடுகள் பயங்கர மாக இருக்கும்.''

''ஆனா இங்கேயும் போலிக் கௌரவம்தான், எல்லாப் பெண்களைப் பற்றியும் ஏதோ குறை சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். என்னைப் பற்றியும் என்ன பேசிக் கொள் வார்களோ என்றும் பயம்.''

உமா சிரித்துக் கொண்டே சொன்னாள்.

''கற்பொழுக்கம் என்று எதுவும் இல்லை என்பதுதான் அதன் அர்த்தம். மீண்டும் சொல்லுகிறேன். இது ஆணா திக்க சமூகம். சேஷ்டைவிட வருபவனை முறைத்துப் பார்த்தாலே 'என்னடி வேசை' என்று சொல்லுவது மட்டு மல்ல தன்னோடு ஆடியதாகக் கதை கூடக் கட்டி விடுவான். கற்பு என்பது அவ்வளவுந்தான். ஊர் வம்பாகிறது. வேசை என்று பட்டம் பெற்று விட்டால் அதன்மேல் பெண்ணுக்கு பட்டம் பெற எதுவுமில்லை. நானே அதைப் பெற்றுவிடத் தயாராயிருக்கிறேன்.''

''ஊர் வம்பை நம்பினால் இங்கே ஒழுக்கமாக வாழ்ப வர்கள் எவருமில்லை என்றாகி விடும். என் புருஷன்கூட எத்தனையோ நாள் வேசை என்று சத்தமிட்டது மட்டு மல்ல உளறியுமிருக்கிறார்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒழுக்கமாக வாழ்பவர் எவருமில்லை என்பது உண்மையாகவும் இருக்கலாம். எவராவது புள்ளி விபரம் எடுத்தார்களா? எடுக்க முடியுமா? ஆண்களெல்லாம் எப்படியும் நடக்கலாம் என்று சமூகம் அனுமதி வழங்கும் வரை பெண்களெல்லாம் எப்படி கற்பாக வாழ முடியும் என்ற தர்க்க நியாயத்தைக்கூட ஏற்றுக் கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். எல்லோரும் பொய்மையில் வாழ்ந்து தங்களையும் சமூகத்தையும் ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள். தன் மனைவியையே என்றோ ஒரு நாளாவது வேசை என்று கூறாத கணவனுமில்லை."

சித்திரா சீற்றத்தோடு சொன்னாள்.

"நான்கூட அப்பா அம்மாவிடமும் சமூகத்திற்கும் நடித்தே வாழ்ந்தேன். நல்ல குடும்ப வாழ்வு வாழ்ந்தேன், இடிந்து விட்டது என்றே எல்லோரும் கவலைப்படுகிறார்கள். அம்மா அப்பா என்றுமே அடிக்காது வளர்த்தார்கள். எங்கிருந்த எவரோ ஒருவருக்குக் கட்டிக் கொடுத்து அடி, உதை, திட்டு எல்லாம் வாங்கி ஆறு ஆண்டுகள் வாழ்ந்தேன். 'அறுதலி' என்று இன்று வந்து நிற்கிறேன் என்றே எல்லோரும் கருதுகிறார்கள். என் குடும்ப வாழ்க்கையை நான் எவ்வாறெல்லாம் மூடி மறைத்து வாழ்ந்தேன்..."

"இப்படியேதான் எல்லோரும் மூடி மறைத்து வாழ்கிறார்கள். குடும்பங்கள் பரிசுத்தமானவை என்றும் கற்பு என்றும் மதவாதிகள்தான் பிரசங்கம் செய்கிறார்கள். இடிக்கும் போதோ ஓடும் போதோ கூட கற்பு போய் விடலாம் என்று அவர்களுக்குத் தெரிவதில்லை."

"துபாயில் எப்படி இருக்கிறது?"

உமா வினவினாள்.

"அங்கேயும் இப்படித்தான். பெண்களெல்லாம் வெளியே போனால் முக்காடு. வீடுகளுக்குள்ளே என்னவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்கலாம். விதவை என்றோ, அறுதலி என்றோ பிரச்சனையில்லை. எப்படியும் நாங்கள் ஓரளவு முன்னேற்ற மாக இருக்கிறோம் என்று கூறுவதில் தவறில்லை. உனக்கு வேடிக்கையான கதை ஒன்று சொல்லவேண்டும் என்று நினைத்திருந்தேன். நான், படித்த பணக்காரப் பெண் ஒருத்தியை அங்கு காண நேரிட்டது. புருஷன் எங்கோ வெளி நாட்டில். தமாசாக ஆங்கிலத்தில் கதைத்தாள். நான் கேட்டேன் 'ஆண்களுக்குப் பயந்து இப்படியெல்லாம் முகத்தையே மூடி முக்காடு போட்டுத் திரிவது கஷ்டமாக இல்லையா?' என்று. அவள் சிரித்துக் கொண்டே என்ன சொன்னாள் தெரியுமா? 'ஏன் நாங்க மட்டும் ஆண்களை யெல்லாம் முழுமையாகப் பார்க்கிறதை நீங்க விரும் பேல்லையா?' இது பெண்களுக்கு மட்டுமே கிடைத்த வாய்ப்பு' என்றாள்.''

''நல்ல வேடிக்கை. இந்தப் 'போயின்ட்' இதுவரை நாளும் எங்களுக்கே பிடிபடவில்லையே.''

உமா வியப்போடு சொன்னாள்.

''இதுமட்டுமா, உமா வேறு என்ன சொன்னாள் தெரியுமா? 'எனக்குப் பிடித்த எந்த ஆம்பிளையை மட்டும் தேர்ந்து சுட்டுவிரலைக் காட்டினால் போதும் என் பின்னே வருவான்' என்றாள். நானே திகைத்துப் போனேன். பணமும் படிப்பும் வர காலப்போக்கில் சுல்தான் ஆட்சியும் மதக்கட்டுப்பாடுகளும் சிறிது சிறிதாக உடைந்து போய்விடும். சவுத்யேமன் என்றொரு சிறிய நாடு சவுதிக்குப் பக்கத்தில் இருக்கிறது. அங்கே சோஷலிச ஆட்சியே வந்து விட்டது.''

''அப்படியா. நான் கேள்விப்பட்டதே இல்லை.''

''பாரெயின் தீவில் சவுதிப் பெண்கள் கார் ஓட்டு வார்கள். முன்னர் வெள்ளைக்காரர் ஆட்சி இருந்தது. இப்படி நாட்டுக்கு நாடு வேறுபாடு.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ அதிர்ஷ்டக்காரி இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு வந்துவிட்டாய்."

"அதிருக்கட்டும். பாலன் பார்த்தானா? என்ன சொன்னான்."

உமாவின் மனப்போக்கை அறியும் ஆவலுடன் கேட்டாள்.

"ஊரில் பிரச்சனையென்றால் கொழும்புக்கு வரும்படி சொன்னார்."

"அப்படியே வந்து விடேன். நான்கூட நிலைமையைப் பார்த்து அங்கேயே சென்றுவிட யோசிக்கிறேன். அப்பா அம்மா விருப்பத்தையுமல்லவா கேட்கவேண்டும். உன்னைப் பொறுத்தளவில் நீயே தீர்மானிக்கலாம்."

"வீண் பணச் செலவு."

"பாலன் சொன்னபடியால் நிட்சயம் எங்காவது வேலை தேடித்தருவான். அவனே தற்போது தனிக் கம்பெனி நடத்துகிறானாம்."

"யோகநாதன் சொல்லித்தான் அறிந்தேன். நானும் கதையோடு பொழுதுபோக கேட்காமல் விட்டுவிட்டேன். என்ன குடிப்பாய்?"

"டீ போட்டுக் குடிப்பமே. நானும் வருகிறேன்."

இருவரும் பெண் குழந்தை தொடர குசினியை நோக்கிச் சென்றனர். வயலுக்குச் சென்றிருந்த அப்பாவும் அம்மாவும் 'சித்திரா வந்து விட்டாயா' என்று கூறிய படியே உள்ளே வந்தனர். முருகேசனும் அவர்களைத் தொடர்ந்து 'அம்மாவா' என்று பரபரப்படைந்தான்.

தேநீர் அருந்திய பின்னரும் சித்திரா அங்கு தங்கி பெற்றாரோடும் உமாவோடும் பல விஷயங்கள் பற்றியும் பேசிவிட்டுத் திரும்பினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18

அரசியல் நிலைமை சரியில்லாததால் முருகேசனுடன் சென்று உடனடியாகத் தனிக்குடித்தனம் நடத்த முடியாத நிலை மீனாட்சிக்கு இருந்தது. முருகேசன் எங்காவது நிரந்தர வேலை ஒன்று தேடிக் கொள்ள வேண்டும் என மீனாட்சி முதலில் எதிர் பார்த்தாள்.

முன்னர் நல்ல சம்பளம் என ஒரு ஓட்டலில் வேலை செய்தே வீணாக மாட்டுப்பட நேர்ந்தது. ஏழு எட்டு வாடகை அறைகள் கொண்ட சிறிய ஓட்டல். கொழும் பிலிருந்து வான்களில் பண்டம் விற்க வருவோரே பெரும் பாலும் அங்கு தங்கிச் செல்வர். இடையிடை வெளியூரி லிருந்து சிங்கள, தமிழ்ப் பெண்களும் வந்து தங்கிச் செல்வ துண்டு. அவ்வேளைகளில் ஓட்டலுக்கு வருமானம் அதிகரிக்கும். ஒரு மணி நேரத்திற்கே ஒரு நாள் வாடகை அறவிடப்படும். போலீசாரும் வந்து சென்றனர். அக்காலங் களில் முருகேசனையும் முதலாளி நன்கு கவனித்துக் கொள்வார்.

முருகேசன் இவ்வியாபாரம் பற்றி அறிந்தபோதும் அப்பாவியாக இருந்தான். போலீசார் வந்து செல்வதால் பிரச்சனை இல்லை என நம்பினான்.

ஒரு தடவை பல போலீசார் வந்து முற்றுகையிட்டு இரு பெண்களைக் கைது செய்தனர். ஓட்டல் முகாமை யாளர் என்ற பெயரில் முதலாளி முருகேசனை போலீஸ் நிலையத்திற்கும் பின்னர் நீதி மன்றத்திற்கும் அனுப்பினார். பெண்களதும் முருகேசனதும் குற்றப்பணங்களை முதலாளியே செலுத்தினார். பெண்கள் போய் விட்டனர்.

இது ஒரு வழக்கமான சம்பிரதாயமாக முருகேசனும் எடுத்துக் கொண்டான்.

சில மாதங்கள் கழித்து மீண்டும் அதே சடங்குகள் நடைபெற்றன. அடிக்கடி ஆராவது சுப்பிரின்டனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுவார்கள், நாங்களும் நடவடிக்கை எடுக்காமல் இருக்க முடியாது என போலீசார் கூறி யாவையும் குற்றப் பணத்தோடு முடித்தனர்.

ஒரு சிங்களப் பெண்ணுக்கு அச்சிறு நகரில் நல்ல பெயரிருந்தது. இரண்டு நாள் தங்கி இரண்டாயிரம் ரூபாவிற்கு மேலாக உழைத்துச் செல்வாள். அவளுக்காக முருகேசனும் இரக்கப்படுவான். பணத்திற்காக அவள் படும் துன்பத்தை அவனிடமும் சொல்லியுள்ளாள். அவள் வருவதை தனக்குத் தெரிவிக்கும் படி போலீஸ் இன்ஸ்பெக்டரும் சொல்லியிருந்தான். முதலாளி அறிவிக்கவில்லை.

அன்றிரவு போலீசார் முற்றுகையிட்டனர். ஒட்டல் முகாமைக்காரர் மேல் மறு நாள் 'தவறான வாணிபக் குற்றம்' மட்டுமல்ல கஞ்சா, கள்ளச்சாராயக் குற்றமும் சுமத்தப்பட்டது. வழக்கம் போல் முருகேசன் 'குற்றவாளி' என்றதும் போலீஸ் இன்ஸ்பெக்டர் 'இது மூன்றாவது தடவை' என்றான். நீதிபதி இரண்டு வருடச் சிறையும் ரூபா இரண்டாயிரம் தெண்டமும் என்றார்.

பணத்தோடு போகும் பிரச்சனை சிறையோடு முடிந்தது. வழக்கறிஞர் 'அப்பீல்' எனக் கேட்டு பிணைப் பணத்தில் முருகேசன் வெளியே வந்தான்.

அப்பீல் வருடக்கணக்காக தாமதமானது. முதலாளியும் அவனும் அதைப் பற்றியே கவலையில்லாது இருந்தனர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தால் ஒட்டல் வியாபாரம் கூட குழப்பமடைந்திருந்தது.

ஒரு நாள் திடீரென போலீசார் வந்து அவனை அழைத்துச் சென்றனர். கொழும்பில் அப்பீல் தள்ளுப்பட்டு விட்டது என்றனர். சிறைக்குள் தள்ளப்பட்டான். சட்ட ரீதியாக மேற்கொண்டு உதவ எவருமில்லை.

சிறைச் சாலையில் முருகேசனைப் பார்க்கச் சென்ற போதே மீனாட்சிக்கு ஜெயிலர் பழக்கமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு முருகேசனின் சிறைத் தண்டனை பற்றி சித்திரா கேட்டபோது மீனாட்சி தனக்குத் தெரிந்தளவில் மட்டும் சொன்னாள். அவளுக்கே முழுக்கதையும் தெரியாது. முருகேசன் ஓட்டல் விஷயங்களை அவளுக்கும் அளந்தே சொல்லியிருந்தான். பின்னர் சில விஷயங்களை கூட்டியும் குறைத்தும் பிறர் மூலம் அறிந்திருந்தாள். முதலாளி அப்பீல் வேளையில் கொழும்பில் தக்க வழக்கறிஞரை நியமிக்காது பேசாதிருந்ததாலேயே ஒரு பக்கச் சார்பாக விசாரித்து நீதிபதியின் தண்டனை உறுதிப் படுத்தப்பட்டது என்பதையும் அறிந்தாள்.

முதலாளியை உதவி கேட்கும் படி முருகேசன் வற்புறுத்திக் கொண்டிருந்தான். அவர் ரூ 500 மட்டும் கொடுத்து விட்டுக் கை விட்டு விட்டார்.

யாழ்ப்பாணம் வந்த பின்னர் முருகேசன் ஓட்டலைத் தேடிச் சென்றான். அங்கு ஓட்டலுமில்லை முதலாளியுமில்லை. 'கொழும்புக்குப் போய் விட்டார், வெளிநாடு போகும் நோக்கமிருந்தது' என்று மட்டும் அண்மையிலிருந்த கடைக்காரர் சொன்னார்.

முருகேசன் ஆற்றாது அவளிடம் கூறிய ஒரு செய்தி மட்டும் மீனாட்சியின் நெஞ்சில் உறுத்திக் கொண்டிருந்தது. அதை அவள் சித்திராவிடம் சொன்னாள்.

ஒரு விடுமுறை நாளன்று அந்தப் பெண் பதினைந்தோ பதினாறு பேரைத் தாக்குப் பிடித்தாளாம். அங்கு வந்த வாடிக்கைக் காரரை அந்த முதலாளி விட்டு விட விரும்பேல்லையாம். அந்தப் பெண்ணும் பணத்திற்காக வாடிக்காரரை முடியாது என விரட்டிவிட விரும்பேல்லையாம். பிறகுதான் இவரிடம் அந்தப் பெண் சொல்லி அழுதாளாம்''

மீனாட்சி கூறிய பயங்கர உண்மை சித்திராவையே சிந்திக்க வைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம்பவே கஷ்டமாயிருக்கிறது"

"அது பொய்யில்லை, உண்மையம்மா. கலவரத்தின் போது நான் தப்பிக் கொண்டேனம்மா. அடுத்த வீட்டிலிருந்த ஒரு பெண்ணுடன் ஐஞ்சு ஆமிக் காரங்கள் மாறி மாறிப்படுத்தாங்களாம். அந்தப் பெண் பிறகு என்னிடம் மட்டும் சொன்னாள். 'நான் அவங்களைச் சமாளித்து தப்பி விட்டேன் அல்லது சுட்டிருப்பாங்கள்' என்று."

மீனாட்சிகூட அகப்பட்டிருக்கலாம். அந்தப் பெண் மீனாட்சியாகவும் இருக்கலாம். சித்திரா சிந்தித்தாள்.

"எங்களூர் கதைகளிலும் சினிமாவிலும் இப்படியான பெண்களை தற்கொலை செய்யப் பண்ணி விடுவார்கள்"

மனநோவுடனேயே சித்திரா சொன்னாள்.

"அதில்லையம்மா. தாங்கள் சந்தோஷமடைவதாக நினைத்து எப்படியெல்லாம் கொஞ்சநேரத்தில் எங்களைப் பிடுங்கியெடுத்து விடுகிறார்கள். மிக மட்டமாகவெல்லாம் நடந்தும் கொள்ளுகிறார்கள். அதுதான் புரியேல்லையம்மா"

"பெண்களை அடிமை என்று நினைப்பதும் ஒரு காரணம். உமா படிப்பிலேயும் கெட்டிக்காரி. அப்பா அம்மாவே தொடுவதில்லை. ஜெயிலர் எப்படியெல்லாம் அடித்திருக்கிறான் தெரியுமா? கலியாணம் கட்டினதும் தங்கள் அடிமையாக விற்கப்பட்ட மிருகம் என்று இங்கு நினைத்து விடுகிறார்கள்."

"கையால் காலால் அடிக்கிறது தான் போகுது. படுக்கையறையிலை அந்தம்மா இந்த ஜெயிலரை எப்படித்தான் சமாளித்தாங்களோ தெரியாது. இனிமேல் அந்தம்மா நிம்மதியாக வாழலாம்."

மீனாட்சி தன் அனுபவத்தைக் கொண்டே அளந்து கூறுகிறாள் என்பதை சித்திராவால் நன்கு உணர முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பம் என்று கூறப்படும் பாலுறவு எத்தனை துன்பமா கிறது என்பதையும் அவளால் அறிய முடிந்தது. பாலெழுச்சியால் உந்தப்படும் மென்மையான இன்ப உணர்வுகள் எப்படி ஆணாதிக்க உணர்வுகளால் சிதற டிக்கப்படுகிறது என்பதையும் எண்ணிப் பார்த்தாள் துபாய் வீட்டில் அவள் அறிந்தவற்றை இங்கேயும் காணக் கூடியதாயிருந்தது. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். மேல் நாடுகளில் பெண் பெருமளவு விடுதலை பெற்ற நிலையில் ஏற்படும் விவாகரத்து சுதந்திரத்தை எங்கள் நாட்டு குடும்பம் என்ற சிறைத் துன்பத்துடன் சமனிட்டும் நோக்கினாள்.

உமா விடுதலை பெற்று விட்டாள் என்ற நினைவு மீனாட்சியின் கூற்றுடன் மேலும் வலுப்பெற்றது.

பாலுறவு இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் பாலன் போன்ற ஒரு மனிதருடன் பேசிப் பழகுவதிலேயே எத்தனை மகிழ்வும் நிம்மதியும் ஏற்பட முடியும் எனவும் எண்ணிப் பார்த்தாள்.

உமா கொழும்பிற்குச் செல்லின் மேலும் விடுதலை பெற்று மகிழ்வோடு வாழ முடியும் என்றே எண்ணிக் கொண்டாள்.

"ஓட்டலில் உடலை வித்த அந்தப் பெண்ணையும் ஆமிக்காரர் ஆசை தீர்த்த அடுத்த வீட்டுப் பெண்ணையும் என்னால் என்றும் மறக்க முடியவில்லையம்மா. அடிக்கடி நான் நினைக்கிறேன். ஆண்களின் விபசார விடுதிக்கும் பெண்கள் போவதானால் எத்தனை பேரைத் தாக்குப் பிடிப்பார்களென்று- அப்பதான் அவங்க வீரம் தெரியும்."

மீனாட்சி சொல்லி விட்டுச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில்தான் பெண்களின் உயர்வுக்கும் விடையிருந்ததை சித்திராவால் உணர முடிந்தது. பாலுறவிலும் பெண்தான் பலசாலி என்பதை அவள் தன் சிரிப்பின் மூலம் சொன்னாள். அவள் புத்தகத்தில் கற்கவில்லை. அனுபவத்தின் மூலம் பெண்ணின் திறமையையும் உயர்வையும் அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாள். அந்த உணர்வு நிலையே மீனாட்சியையும் தலை நிமிர்ந்து பேசச் செய்கிறது, நிமிர்ந்து நடக்கச் செய்கிறது என்பதை சித்திராவாலும் உணர முடிந்தது.

இந்த மகத்தான உண்மையையும் ஆணாதிக்க உலகு மறைத்து வீரம் பேசுகிறது. பத்மாசுரன் கதையைப் பிரசங்கியார் பிதற்றும்போதும் தேவர்களை, சிவனை மிஞ்சிய அசுரன் அழிக்கப் பட்டதையே பெரிதுபடுத்து கிறார். பெண்ணினத்தின் ஆற்றலை, ஆணினத்தின் அற்ப வெறியை அடக்கும் திறனை அவர்கள் விரித்து விளக்கு வதில்லை.

ஆணாதிக்க உலகில் யதார்த்த உண்மைகளெல்லாம் மறைக்கப் படுகின்றன.

பெண் உழைத்து, சமைத்து, உணவு போடுகிறாள். ஆண் அற்ப சுகத்துடன் ஓடி விடுகிறான். அவளே மசக்கை யுடன் வயிற்றில் சுமந்து பெற்று தன் உடலின் இரத் தத்தைப் பாலாக்கி ஊட்டி வளர்க்கிறாள். அவன் தன் பிள்ளை என உரிமை கொண்டாடுகிறான். அவளின் கர்ப்பப்பை இரகசியத்தையும் அவன் அறியான். பெண் களை உற்றுப் பார்த்து அவர்கள் பின்னால் அற்ப சுகத் திற்காகச் சுற்றுகிறான். பாலுறவிலும் மீனாட்சி கூறியது போல தாக்குப் பிடிக்க வலுவில்லாதவன்.

இத்தனை உண்மைகளையும் மறைத்து, தானே குடும்பத் தலைவன், நாட்டின் நாயகன், உலகின் உன்னத மானவன் என ஆணாதிக்க உலகில் ஆண்கள் குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள்; சூரியன் கிழக்கில் உதிக்கிறான் என்ற பொய்மையை பரம்பரையாகச் சொல்லி உலகை இன்றும் ஏமாற்றிக் கொண்டிருக் கிறார்கள்.

இவ்வாறு எண்ணிய படியே விடியலை நோக்கி சித்திரா அயர்ந்தாள்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Peradeniya
08 DEC 2021
LIBRARY
704556
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரா தன் வயதான பெற்றாரைக் கவனிக்க வேலைக்காரி மீனாட்சியை ஏற்பாடு செய்துவிட்டு துபாயில் முதுமையான அரேபியர் குடும்பத்திற்குச் சேவை செய்ய பணிப் பெண்ணாகச் செல்கிறாள்.

மீனாட்சியை வீட்டு வேலைக்கு ஏற்பாடு செய்வதற்கு சித்திராவின் பள்ளித்தோழி உமா உதவுகிறாள். அரசியல் பேசித் திரியும் பள்ளிக் காதலன் பாலன் தக்க பாதுகாப் பளிக்க மாட்டான் என உமா ஜெயிலரைக்கட்டியிருந்தாள். மீனாட்சியின் கணவன சிறையில் மாட்டுப்பட்டிருந்தான்.

வீட்டு வேலைக்காக வந்த மீனாட்சி மூலமும் பள்ளித் தோழன் பாலன் மூலமும் பெண்களின் உயர்வு பற்றிய அறிவியலும் அனுபவமும் சார்ந்த பல உண்மைகளை சிததிரா அறிந்து கொள்ளுகிறாள். சித்திராவின் சிந்தனையிலும் நடைமுறையிலும பாதிப்பு ஏற்படுகிறது.

சூரியன் கிழக்கில் உதிப்பதில்லை என்ற விஞ்ஞான உண்மையை உடனே ஏற்றுக் கொள்வது பலருககுச் சிரமமாகிறது. பரம்பரை பரம்பரையாக வந்த கருத்தை அனுபவத்திலும் காண்பது உண்மை போல தோன்றி விடுகிறது. அதே போலவே பெண்கள் பற்றியே தவறான கருத்துகள் பல ஆணாதிக்க உலகில் கருத்தியலாக நிலை பெற்றுள்ளன. அவற்றை எவரும் ஆராய்ந்து உண்மையைக் காட்டுவதில்லை.

பத்மாசுரனுடன் சிவபெருமானால் போரிட முடியாத போது விஷ்ணு மோகினி வடிவமெடுத்து வென்றதாகக் கூறப்படும் புராணக் கதை தொடக்கம் இன்றைய பண்ட விற்பனைக்குக்கூட பயன்படுத்தப்படும் பெண்களின் கவர்ச்சி விளம்பரம் மட்டுமல்ல, ஆணினமே பெண்களை உற்றுப்பார்ப்பது ஈறாகவுள்ளவற்றின் பின்புறத்தில் மறைந்திருக்கும் உண்மைகளைப் பற்றி எவரும் சிநதித்துப் பார்ப்பதில்லை; பெண்ணினத்தின் உயர்வையும் சிறப்பையும் காண்பதல்லை. இவர்கட்கு சூரியன் கிழக்கிலேயே உதிகதக் கொண்டிருக்கும். சிததிரா சிந்திக்கத் தொடங்கியிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org